ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1—12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹூ ஐப்பசி-மீ 14-உ (30—10—1932) | மலர் 27.

Dr, R. M. Shastry's

Ayurvedic Golden Tonic.

"பல டாக்டர்களின் நன்மதிப்புப்பெற்றது."

(Registered by the Government of India)

உத்திரவாதமுள்ளது உடனே பரீட்சித்துப்பாருங்கள்.

இதை ஆண், பெண், பாலர், விருத்தர் முதல் எல்லாவயதோரும் எவ்வித பத்தியமும், அநுபானமுமின்றி கீழ்க்குறிப்பிட்டரோகங்களால் கஷ்டப்படுகிறவர்களும் அல்லது தேகபலத்தையே விரும்புகிறவர்களும் இதை எந்தக்காலத்திலும் உபயோகிக்கலாம்.

இதனுல்—பாண்டு, காமாலை, உடலில்போதிய ரத்தமின்மை, கை கால் எரிதல், வாய்ப்புண், வாய்நாற்றம், குன்மக்கட்டி, குலை நோய், இருதய அதர்ச்சி, கழுத்திமுட்பு, கைகால் வலி, அல்லது சோர்வு உண்டாதல், மாதவிடாய்காலத்தில் உண்டாகும் தலைவலி, தலை பாரம், தலை மயக்கம், தலை சுற்றல், இடுப்புவலி, மார்புநோய், வயிற்றுவலி, மற்றும் கை கால் மூட்டுகளில் உண்டாகும் வீக்கம் முதலிய பல கஷ்டங்களை நிவர்த்திப்பதில் இது ஒப்பற்ற சஞ்சிவிக்கு ஒப்பானது.

மற்றும்—மூத்திரம் கள்ளைப்போலும், மோரைப்போலும், முரிந்தபால் போலும், பலவித நிறங்களாகவும் அடிக்கடிபோதல் மலபந்தம், மலத்தோடு சீழ் அல்லது இரத்தம் போதல், பலவித சிரங்குகள், உன்மத்தம், சோம்பல் முதலியவற்றை நிவர்த்தித்து இரத்த சுத்தியை உண்டாக்கி தேகத்திற்கு நல்ல பலத்தையும், தேக புஷ்டியையும் தருவதில் நிரம்பவும் அநுபவப்பட்டது.

உண்மையில் நடக்க சக்தியற்றவர்களும் பரீட்சைக்காக இதில் ஒரு புட்டியாகிலும் உபயோகித்துப்பார்ப்பார்களானல் உண்மையில் அவர்களின் ஊன்றுகோலை வீசியெறிந்துவிட்டு தாமகவே நடக்கச்சக்தி பெறுவர் என்று உறுதியோடு இதை சிபார்சு செய்கிறோம்.

12 அவுன்சு புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0 போஸ்டு செலவு கட்டுக்கூலி பிரத்தியேகம்.

விலாசம்:— Dr. R. M. Shastry
Post-Rakah Mines
Singhbum Dist. (N. India)

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசு"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினுல் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனுர் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:— "குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு.

இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

மதம் மதமென மதிகெட்டலையாதே.

Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வரவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் செலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

"குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

"ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

உங்கள்
கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலு பி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.
கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் ஏற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

Goshaye office pillss.
கோஷாயி ஆபீஸ் மாத்திரை

Dr.T.K.V. Chalam.

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சாருஜ் வேறு.

Proprietor. T. K. வெங்கடாசலம்,
(Disciple of Late Dr B. A. Ehiraj Cholera Bairi)
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

ரூ. 2-14-0 க்கு 6-பாட்டல்

ஒட்டோ வாங்குபவர்களுக்கு 3-கடியாரங்களும், 1-பவுண்டன் பேனாவும், 91-சாமான்களும் இனும்.



நமது புகழ்பெற்ற "ஒட்டோ மோட்டியா" ஒரே தடவையில் 6 பாட்டல் வாங்குபவர்களுக்கு 3 கடியாரங்களும், 1 ரயில்வேடைம்டம்மி பாக்கெட் கடிகாரமும், 5 வருஷம் உத்திரவாதமுள்ள நல்ல யந்திரங்களுள்ள 'பி' டைம்பீஸ் 1-ம், கோல்ட்கில்ட் டம்மி ரிஸ்ட் வாட்ச் 1-ம், அழகான 14Kt தங்க நிப் பவுண்டன் பேனா 1-ம், மோதிரம் 1-ம், 94 படங்களும் இனும் கொடுக்கப்படும்.

பாக்கிங் தபால் செலவு வேறு.

The Indian National Stores,
17. Joy mitter St.. Calcutta

(Scientific Method and Ignorant Beliefs.)

மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்.

போலி மெஞ்ஞானம்.

"கடவுளும், பிரபஞ்சமும்" என்ற வியாசத்தின் மேல் எழும் பிரச்சினை.

[தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(12)

நமது காஞ்சிபுரம் நிருபர்கள் மெஸ்மரிசம் (Mesmerism) என்று வழங்கும் கல்வி, மெஞ்ஞானமா? அதன் விபரமென்ன? கண்களுக்குத்தெரியாத பொருள்களை கண்டு பிடிக்கின்ற விஷயம் உண்மையா? தூரத்தில் நிகழும் அல்லது நிகழ்ந்த விஷயங்களை தெரிந்து சொல்லும் விஷயத்தின் உண்மை என்னவென்று வினவுகின்றார்கள்? இதற்கு முன்பு பல நிருபர்கள் இந்தக்கேள்விகளைக் கேட்டுமிருக்கின்றனர். இதனால் இந்த மெஸ்மரிசம் என்று அழைக்கப்படும் வித்தை அனேகர் மனதில் பதிந்து இருப்பதாகத்தெரிகிறது. இதற்கு முந்தியே நாம் மெஸ்மரிசம் இன்ன விஷயமென்றும் அது ஓர் போலி வித்தை என்றும், அதை மெஞ்ஞானிகள் உதறித்தள்ளி விட்டார்கள் என்பதையும், அதற்கு பதிலாக இப்நாடிசம் (Hypnotism) என்ற வித்தையை வழங்குகின்றார்களென்றும், "குடி அரசு" இதழ்களில் குறிப்பாக காட்டிவந்திருக்கின்றோம். இந்த பண்டைய கால வித்தையை நமது நிருபர்கள் விபரமாக அறியுமாறு இங்கு எடுத்துரைப்பாம். இந்த மெஸ்மரிசம் என்ற வித்தையை ஒரு காலத்தில் மெஞ்ஞானமென்று சில மெஞ்ஞானிகள் கூறிவந்திருக்கின்றனர் இது இன்று ஓர் போலி ஞானமென்று நிருபிக்கப்படுகின்றது. இதைப்போன்றனவும் இதைச்சார்ந்தனவு மான இன்னும் சில போலிஞானங்கள் உண்டு இவைகளை (Bnedo Science) என்று ஆங்கிலத்தில் வழங்குவார்கள்; அவையான (Telepathy) அதாவது ஒருவர் மனதில் தோன்றும் எண்ணங்கள் இன்னொருவர் மனதில் புலன்கள் வாயிலாக இல்லாமல் தோன்றுவது (Clairvoyance) அதாவது தூரத்தில் நடக்கும் விஷயங்களை கண்கள் மூலமாக அல்லாமல் கண்டறிவது (Spiritualism) அதாவது இறந்தோர் சூட்சம தேகம் (Disembodied Spirits of the dead) கண்களுக்குத் தோன்றுதல் மேசை, நாற்காலி, வீட்டு சாமான்கள், கதவு, ஜன்னல், மனிதனால் அசைக்கப்படாமலே அசைதல், இந்த தோற்றங்களை பொதுவாக (Occultism) அதாவது மறைவான வித்தைகள் என்று அழைப்பதுண்டு. இந்த போலிவித்தைகளின் ஆபாசங்களை தெரிந்துகொள்ள மனமுடையவர்கள் முன் கட்டுரையில் கூறியுள்ள நூல்களை வாசிப்பதோடு 1. Hypnotism by Albert Moll (Scott), 2. Hallucinations and Illusions by Edmund Parish (Scott), 3. Apparitions and thought Transference by Podmene (Scott), 4. Illusions by Sully (Scott) 5. Newer Spiritualism by Podmcre முதலிய நூல்களை படித்தறியலாம். நமது பொது மக்கள் இம் மயக்க வித்தைகளை உணர்ந்து மூட நம்பிக்கைகளை விட்டொழிக்குமாறு இம் மறைவான வித்தை Occultism களின் போலி உண்மையை சுருக்கமாக எடுத்துரைப்பாம்.

எனக்குமூன்றுஇருபதும்பத்துவருஷமும் Three Scores years and Ten) கிட்டநெருங்கி வருகிறது. இதுகாறும் Occultism மறைவான வித்தையில் கூறும் தோற்றங்கள் ஒன்று கூட என் அனுபவத்தில்வந்ததில்லை. நான் வசித்துவரும் இடம் மூடநம்பிக்கைகளில் மிகுந்திருக்கும் மீன்பிடிப்போரால் கடந்த 2000 வருஷங்களாக வசிக்கப்பட்டு வருகின்றது. என்னுடன் விளையாடியவர்கள் அநேகர் மாண்டனர். இன்னுஞ் சிலர் ஜீவித்து வருகின்றனர். இவர்களில் ஒருவராகிலும் சென்ற அருபது வருஷங்களாக பேயோ, பிசாசோ, செத்தவர்களையோ, பார்த்ததாகச் சொன்னதில்லை. ஆனால், மாரியாத்தாளுக்கும், காத்தராயனுக்கும், அண்ணமார், தம்பிமார், கன்னிகளுக்கு பூசைகள்போடுவதில் குறைச்சல் இல்லை. என்ன பூசைகள் போட்டும், கும்பமிட்டும் தெய்வங்கள் ஆடியும், எல்லைகளுக்கு காவு கொடுத்தும் இவர்களை அகாலப் பிணி, மூப்பு, சாக்காடு, விட்டொழிந்த பாடில்லை. மற்றத்தொழிலாளிகளில் வருஷமொன்றுக்கு 1000 பேரில் 30, 40 சாவென்றால் இவர்களில் 1000-க்கு 60-க்கு மேல் வருஷா வருஷம் சாகின்றனர். இவர்களில் அம்மை, விஷசுரம், வாந்திபேதி, வராத நாளில்லை. ஆனால் ஒவ்வொரு குப்பத்திலும், ஒன்று இரண்டு மாரி அம்மன் கோயில்கள் இருக்கின்றன. அவைகளுக்கு வருஷா வருஷம் செலவாகும் பணம் 500 முதல் 1000 என்று சொல்லலாம். நான் வசிக்கும் இடம் மடு குப்பமென்று பெயர். அதில் ஆண், பெண் குழந்தைகள் 600-பேர் வசிக்கின்றோம். இதில் ஒரு கோயிலுண்டு. இதற்கு ஏறக்குறைய ஒரு லட்சம் ரூபாய் சொத்துண்டு. வருஷந்தோறும் இந்த மாரி அம்மனுக்கு ரூபாய் 2000 செலவாகின்றது ஆனால் ஒரு வைத்தியசாலைக்கு ரூ. 500 செலவு செய்யலாகாதாவெனில் அது கூடாதாம்! குப்பம் முழுமையும் நரகலாகவே இருக்கும்!! இவர்களுடைய மூடத்தனத்தால் பிறக்கும் இரண்டு குழந்தைகளில் ஒன்று அகாலமரணமடைகின்றது. எங்களைத்தவிர மற்றயாரும் 60 வயது அடைந்தவர்கள் இல்லை. இவ்வளவு விபரமாக என் இந்த குப்பத்தாரின் நிலைமையை சொல்லவந்ததேனெனில்இதேவிதமாகவே நமது 29-கோடி நாட்டுப்புற மக்கள் (Villagers) இவ்வித மூடநம்பிக்கையில் ஆழ்ந்து வறுமை, பிணி, மூப்பு, சாக்காட்டால் கஷ்டப்படுகின்றனர் என்று விளக்கவென அறிக. எங்கள் குப் (Village) நமது நாட்டிலுள்ள 15 லட்சம் கிராமங்களில் அடையாளமான (Typical) கிராமமென அறிக. நாம் கூறிவரும் மூடநம்பிக்கைகளாகிய (Spiritulism Occultism) எனும் மாயவித்தைகளால் நமது கோடான கோடி மக்களுக்கு விளையும் தீமைகளையும் கேட்டையும் சிந்திக்க சிந்திக்க என்ன அபாய நிலைமையில் நமது நாடு இருந்து வருகின்றதென்பது நன்கு விளங்கவில்லையா? மதங்களின் மூடநம்பிக்கைகளால் விளையும் கேடு ஒரு பக்கமிருக்க மாயவித்தைகளால் (Mysticism) விளையும் கேட்டினை சொல்லவும் வேண்டுமோ? இதனை அறியாது "புத்த குருக்கள் சொல்வது புத்தமதமல்ல. நாங்கள் சொல்வதுதான் சரியான புத்தமதம்" என்று ஒரு தோழர் நாம் எழுதிவரும் புத்தமத மூடநம்பிக்கைகளைக் குறித்து பரிகாசமாக "திராவிடனில்" எழுதுகின்றார். மதங்கள் விஷயங்களில் நமது தோழர்கள் எந்த மதமாயினும் சரி, இவ்வளவு அபிமானமும் வைராக்கியமும் வைக்கும்வரை மூட நம்பிக்கைகள் நமது நாட்டைவிட்டு ஒழியாதென அறிக. இந்து மதஸ்தர்களின் நாட்டில் வழங்கும் மூட நம்பிக்கைகளுக்கு இந்துமதமே காரணம். கிறிஸ்து நாட்டிலும், மகமதிய நாட்டிலும் வழங்கும் மூட நம்பிக்கைகளுக்கு அந்தந்த மதங்களே காரணம். அது போலவே புத்த நாட்டில் வழங்கும் மூட நம்பிக்கைகளுக்கு புத்தமதமே காரணமென அறிக. புத்தர் இதைச்சொல்லவில்லை. அதைச்சொல்லவில்லை என்று சொல்லும் மத பாசாங்குகளை (Religious Apologetics) ஒழித்து, எல்லாவித மதங்களும் மூட நம்பிக்கைகளெனத் தெளிதலே உத்தம புருஷருக்கு அடையாளமென அறிக. எந்தவிவேகசாலி 1000, 2000, வருஷங்களுக்கு முந்தி சொல்லிய போலி சித்தாந்தங்களையும், கோட்பாடுகளையும், பண்டை நீதியும், நெறியையும் கொண்டு இந்நாளில் நமது மானிட வாழ்க்கையை நடத்த முயலுவான்?

(Hypnotism) அதாவது மயக்கவித்தை என்று கூறும் ஓர்வித தூக்கம் பண்டைக்கால முதல் (Mesmerism) மெஸ்மரிசமென்று வழங்கி வந்தது. ஜர்மன் டாக்டர் (Mesmer) மெஸ்மர் என்றவர் இந்த வித்தையை மிகச்சாமர்த்தியமாக கற்று தெரிவித்தார். இந்த வித்தையிற் விஷயமென்னவெனில் மனிதனுக்குள் ஒரு வித நுட்ப (Subtle) சக்தியுண்டு. அந்தசக்தியைக்கொண்டு மற்றொருவனை விழிப்பில் தூங்கவைக்ககூடும். அந்த ஓர் வித தூக்கத்தில் (Hypnotic Sleep or Trance) கண்களுக்குத் தெரியாத வஸ்துக்கள் தெரியும், மறந்துபோன விஷயங்களும் ஞாபகத்துக்குவரும், எதைச்செய்யச் சொன்னாலும் அந்த தூக்கத்திலிருப்பவன் செய்வான், சக்கரையை அந்த தூக்கத்திலுள்ளவனை கசக்கின்றதென்று சொன்னால் கசப்புக்கு வேண்டிய செய்கைகளையும், சைகைகளையும் செய்வான், அந்த நிலைமையிலுள்ளவனுக்குசில நோய்களும்தீரும். இந்த மெஸ்மர், விஞ்ஞான முறைப்படி விளக்கி வைத்ததாக ஒரு காலத்தில் எண்ணிவந்தபடியால் மெஸ்மரிசமென்று வழங்கப்பட்டது. ஆனால் மெஸ்மர் இந்த நடவடிக்கைகளுக்கு ஒரு சக்தி காரணமென்று கூறிவந்தார். இது அவருடைய யோசனையேயொழிய மெஞ்ஞானமல்ல. இந்த சக்தியை பார்த்தவரும் இல்லை, பரீட்சித்தவருமில்லை. இந்த புதிய மனுஷ சக்தியை (Human Magnetism) மனித காந்த சக்தி என்று வழங்கப்பட்டது. இது வெறும் உத்தேசமாக முடிந்தது. மனிதனுக்குள் காந்த சக்தியொன்று

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

விவாகத்தில் கடவுள் கட்டளை!

காதலும், கற்பும் சின்னங்களா?

சீர்திருத்தம் அவசியம்.

விவாகத்தை மக்கள் இன்பமாகவும் கொள்கின்றனர், துன்பமாகவும் கொள்கின்றனர். உலகத்தில் இன்பம் அனுபவிப்பவர் யார் என்று விவாகம் ஆகாத ஒருவரைக் கேட்டால் அவர் விவாகம் ஆகாத ஒருவரைக் கேட்டால் அவர் விவாகம் செய்து கொண்டவர்கள் தான் என்பர். அதே கேள்வியை விவாகம் ஆன ஒருவரைக் கேட்டால் விவாகம் செய்து கொள்ளாதவர்களே துன்பமற்றவர்கள் என்பர். ஹிப்போனுக்ஸ் என்னும் கிரீஸ் தேசத்துப் பிரபல கவிஞர் மணவாழ்க்கையின் தன்மையைப்பற்றிக் கூறுகையில் "மனிதன் வாழ்நாட்களில் இரண்டு நாட்களே மிகுந்த இன்பம் நல்கும் நாட்கள். அவைகளில் ஒரு நாள் அவன் விவாகம் செய்துகொள்ளும் நாள், மற்றொரு நாள் அவன் தன் மனைவியைப் புதைக்கும் நாள்" என்று கூறியிருக்கிறார். விவாகங்கள் பெண்களுக்கு மிகுந்த ஆர்வத்தை உண்டாக்குகின்றனவென்று வருணிக்கப்படுகிறது. குயின்தார்டு என்னும் பிரபல பிரஞ்சுக்காரர் விவாகத்தைப்பற்றிக் கூறுகையில் விவாகம் முற்றுகை போடப்பட்ட ஒரு கோட்டை போன்றதென்றும், வெளியிலுள்ளவர்கள் உள்ளே புகவும், உள்ளே இருப்பவர்கள் வெளியே வரவும் விரும்புகிறார்கள் என்றும் கூறினார். விவாகம் சதிபதிகளை ஒன்றாக்குகிறது என்று சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் அந்த ஒன்று என்பது எது என்பதைக்கண்டுபிடிக்க வாழ்நாள் முழுதும் போராட்டம் நடந்த வண்ணமாகவே இருக்கிறது.

மதக்கட்டளையா?

ஆயினும் விவாகம் என்பதை யாரும் எள்ளி நகையாடுவதற்கில்லை. "மக்களுடைய விவாக சரித்திரம்" என்னும் நூலின் ஆசிரியரான வெஸ்டர் மார்க் என்பவர் "விவாகம் என்பது ஆண் பெண் கூட்டுறவாகும் அது நீடித்திருக்கும் தன்மையது, சந்தான விருத்திக்கு அப்பாலும் விவாகம் ஸ்திரமாய் இருக்கும் இயல்புடையது" என்று கூறியிருக்கிறார், லார்டு பென்சான்ஸ் என்னும் பெரியார் "விவாகம் என்பது ஆணும் பெண்ணும்தாமாகவே சேர்ந்து கொள்ளுதல் என்பதாம். அவ்விதக் கூட்டுறவால் மற்றவர்கள் அனைவரும் அது சம்பந்தமாகப் புறக்கணிக்கப்படுதல் இயல்பாகும்" என்று சொல்லியிருக்கிறார். இவ்விரண்டு விபரங்களிலிருந்தும் தெரிவதென்னவென்றால், விவாகம் சம்பந்தப்பட்ட ஆண் பெண்களின் வாழ்நாட்கள் முழுதும் சாஸ்வதமாகவே கட்டாயமாக நீடித்திருக்கும் பண்பு பெற்றது அல்லவென்று தெரிகிறது என்பதாம். ஆனால் மதங்கள் விவாகம் ரத்து செய்யப்படத்தக்கதல்லவென்கின்றன. கிறிஸ்து மதம் "மரணமே விவாக உறவைப் பிரிக்க வல்லது" என்கிறது. இந்து மதம் "விவாக சம்பந்தம் சதிபதிகளுக்கு இந்த ஜன்மத்திலேயேயன்றி, வேறு ஏழு ஜன்மங்களுக்கும் பற்றியிருக்கும் தன்மையது" என்று கூறுகிறது. இத்தகைய நியதி ஏக பத்தினி விரதத்தை வற்புறுத்தவும், ஆண் பெண் சேர்க்கை விஷயத்தில் ஒருவித ஒழுங்கு முறையை ஸ்தாபிக்கவுமே ஏற்பட்டிருக்க வேண்டுமென்று யூகிக்கிறோம். குருக்கள் மார்களின் வாய்ச் சொற்களே சட்டங்களாக மதிக்கப்பட்டு, வந்த காலங்களிலும், சாஸ்திரங்களுக்குக் குருக்கள் கூறும் வியாக்கியானங்களே தேவவாக்காகக் கருதப்பட்டு வந்த காலங்களிலும் விவாகத்திற்கு இத்தகைய் அர்த்தம் கூறப்பட்டது சரிதான். ஆனால் பகுத்தறிவு முதிர்ந்துவரும் இக்காலத்தில் அத்தகைய வியாக்யானங்களையும் அர்த்தங்களையும் மக்கள் அங்கீகரிக்கமாட்டார்கள். விவாகத்திற்கு ஏதேனும் விசேஷமான புனிதத்தன்மையைக் கற்பிக்க யாரேனும் விரும்பினால் வெறும் மதச்சட்டங்களையும் மதபோதனைகளையும் எடுத்துச் சொன்னால் ஒருவித பலனும் ஏற்படாது என்பது உண்மை.

தெய்வீகமானது!

விவாகம் தேவலோகத்தில் உறுதி செய்யப்பட்டதென்றும் அது கடவுளால் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்ட ஒரு கட்டு என்றும் மதங்கள் கூறுகின்றன. ஆனால் மக்கள் விவாக சம்பந்தமாக மானிட சாஸ்திர ஆராய்ச்சி செய்கிறார்கள். அவ்வாராய்ச்சிகளிலிருந்து அநேக உண்மைகள் வெளியாகின்றன. உலகத்திலுள்ள பற்பல ஜாதி மக்கள் பற்பல விதமான விவாக வழக்கங்களைக் கையாடி வருகிறார்கள். அவ்வழக்கங்கள் வியப்பை உண்டாக்கக் கூடியனவாகமிருக்கின்றன. ஆதலால் விவாகத்தைப் பற்றி மதங்களில் கூறப்பட்டிருக்கும் மூட நம்பிக்கைக்கு ஆஸ்பதமான வைகளை மக்கள் உதறித்தள்ள முற்படுகின்றனர். விவாகத்திற்கு மத சம்பந்தம் கொஞ்சமும் இல்லை யென்று சரித்திர ஆராய்ச்சிகளால் தெரிய வருகிறது. விவாகம் என்பதைக்கடவுள் ஏற்படுத்திக்கொடுப்பது உண்மையானால் உலகம் முழுதும் விவாகம் செய்ய மக்கள் ஒரே ஒரு குறிப்பிட்ட முறையையே அநுஷ்டித்து வரவேண்டும். ஆனால் உலகத்தில் எங்கு பார்த்தாலும் மக்கள் விவாகத்தில் விதம் விதமான வழக்கங்களையும் முறைகளையும் அநுஷ்டித்து வருகிறார்கள். அவ்வழக்கங்களும் முறைகளும் முக்கியமான காரியங்களிலும் ஒன்றுக்கொன்று ஏராளமான வித்தியாசங்களைக் கொண்டிருக்கின்றன. ஆதலால் விவாகம் என்பது மனிதர்களாலேயே வகுக்கப்பட்ட ஒன்று என்று சந்தேகமில்லாமல் தெரிகிறது. விவாக முறை முதல் முதலாக ஏற்பட்ட காலத்தில் ஒருவனுக்கு ஒரு மனைவி என்ற ஒழுங்குத்திட்டம் பொறுத்தமானதாக விருந்தது. அக்காலத்திற்கும் நிலைமைக்கும் அம்முறை சாதகமானதாக இருந்தது. மனிதர்கள் வேட்டையாடிப் பிழைத்து வந்த காலத்தில் பெண்கள் குறைவாக இருந்தார்கள். ஆகவே அக்காலங்களில் பெண்கள் வாழ்க்கைத் துணைவிகளாயிருப்பதற்கு பதிலாக, ஆண் மக்களின் வீடுப்பொருள்களாக மதிக்கப்பட்டு வந்தார்கள். ஆண் மக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெண்பிள்ளையை மணந்துகொள்ளும் சக்தி பெற்றிருக்கவில்லை. பண்டைக் காலங்களில் விவாகம் செய்து கொள்ளுவது கஷ்டமான காரியமாகவிருந்தது. ஆகவே விவாகம் பகிரங்கப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் தற்காலத்தில் நாகரீகம் முதிர்ந்து வருகிறது. கல்வி அதிகமாய் விருத்தியடைந்து வருகிறது. பெண் மக்கள் தங்களுடைய சொந்த சுதந்தரத்தை ஸ்தாபிக்க முயற்சிக்கின்றனர். அவர்கள் தங்களுக்கென்று தனிப்பட்ட சுயேச்சையைக் கேட்கிறார்கள். பெண்கள் தாய் மார்களாக எளிதில் இசைவதில்லை. குடும்ப வாழ்க்கையில் அவர்கள் வெறுப்பு கொள்கிறார்கள். அவர்கள் சொந்தமான தனிப்பட்ட வாழ்க்கை நடத்த விரும்புகிறார்கள். அவர்கள் விவாகம் செய்துகொண்டாலும், தங்கள் கணவன்மார் வீடுகளை அலட்சியம் செய்கிறார்கள். அவர்கள் தங்களுக்குப் பிறந்த குழந்தைகளைக் கூலி கொடுத்து செவிலித்தாய்களிடம் ஒப்படைத்து விடுகிறார்கள். இத்தகைய மனப்பான்மை கொண்டொழுகும் மக்களுக்குப் பண்டைக்கால விவாக முறை பயன்படாது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. அம்முறை தற்கால நாகரீகத்திற்குப் பொருந்தாததாகி விட்டது. தற்கால நாகரீகப் போக்கின்மீது மக்கள் குறைகூறலாம். ஆனாலும் நாகரீகப் போக்கின்மீது மக்கள் குறை கூறலாம். ஆனாலும் நாகரீகத்தின் காரணமாக பெண்மக்களைத் திருத்த முற்படுதல் அறிவுடைமையாகாது. ஆனால் நாம் கண்மூடித்தனமாக இது வரையில் அனுஷ்டித்து வந்திருக்கிற விவாக முறைகளையே மாற்றிவிட வேண்டும். புராதன காலங்களில் ஏற்பட்டிருந்த எல்லாவிதமான சட்டங்களும் இதுவரையில் எத்தனையோ திருத்தங்களையும் மாறுபாடுகளையும் அடைந்திருக்கின்றன. அது போலவே பண்டைக்கால விவாகச் சட்டங்களையும் நாம் ஏன் மாற்றக் கூடாது என்று கேட்கிறோம்.

மாற்றக்கூடியதா?

விவாகத்தின் வைதீக முறை இயற்கைச் சட்டத்தை அனுசரித்ததாயில்லை. நம்மைச் சுற்றியுள்ள பறவைகளையும் மிருகங்களையும் கவனித்தால் அவ்வுண்மை வெளிப்படும். இயற்கை இரண்டு பேரை ஐக்கியமாகும்படி கேட்கவில்லை. இருவரில் ஒருவர் இறந்து போகும்மட்டும் இருவரும் கட்டாயம் ஒன்றுபட்டிருக்க வேண்டுமென்று இயற்கை நிர்ப்பந்தப்படுத்தவில்லை. இயற்கையின் நியதிவேறாகவும் மனிதனுடைய யத்தனம்வேறாகவும்இருக்கிறது. அதனாலேயே விவாகத்தின் உண்மைத் தத்துவம் நமது கவனத்தில் நன்கு பதிய முடியாமல் இருக்கிறது. சதிபதிகள் ஒருவருக்கொருவர் பிணக்கம் கொள்ளாமல் இருக்கமுடியவில்லை. ஒரு பெண் பிள்ளையின் வெளியழகைக்கண்டு ஒரு ஆண் பிள்ளை மதியிழந்து விடுகிறான். மேல் தோற்றத்தைக் கண்டு ஆணோ பெண்ணோ மயங்கிப் போய் விடுவதையும் காண்கிறோம். சிலநாள் இன்பத்திற்காக தற்கால விவாக மூலமாக வெகுநாளையத் துன்ப வாழ்க்கையை மக்கள் மேற்கொள்ளும்படி நேரிடுகிறது. அறிவுலகத்தில் இத்தகைய பெரிய குறைபாடுகள் இருத்தல் கூடாது. அவசியம் நேரிடுங் காலங்களில் விவாக ரத்து செய்து கொள்ள முடியாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதனால் தற்கால விவாக முறையை மக்கள் வசை கூறி இகழ்ந்து வருகிறார்கள்.

இப்படிப்பட்ட கஷ்டத்திற்குப்பரிகாரம் இல்லாமல் போகவில்லை. ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் தம் தம் மனதிற்கிசைந்தவர்களோடு விவாகம் செய்து கொள்ளும்படி நியதிகள் இருக்கவேண்டும். அறிவு மிகுந்த பெற்றோர்களோ அல்லது வேறெந்த ஜன சமுதாயமோ வற்புறுத்தி மணமக்களைச் சேர்த்தல் கூடாது. தங்கள் தங்கள் முழுசம்மதங்களின் பேரில் ஒன்று பட்ட சதிபதிகளுக்குள் வேற்றுமை ஏற்பட்டுத் துன்பம் நேரிடுங்காலங்களில், அவர்களுக்குப் பிரிந்து கொள்ள சட்டப்படி அனுமதி இருக்கவேண்டும். ஒருவரை ஒருவர் நன்கு அறிந்துகொள்ள நல்ல சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும்.

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

ஒத்த வாழ்வே உயர்ந்த இன்பம்.

பர்மியர் சமூக வாழ்வும், இந்து சமூக வாழ்வும்.

[சாமி. சிதம்பரனார்]

ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடில்லாத சம உரிமை சம்பந்தமாக, மற்ற நாடுகளைவிட "பர்மா" நாடே பழங்காலந்தொட்டு முன்னணியில் நிற்கின்றதெனக்கூறலாம். மற்ற நாடுகளில் முக்கியமாக விவாக விஷயத்திலும், குடும்ப விஷயத்திலும், சொத்துரிமை விஷயத்திலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வேற்றுமையிருக்கின்றது. ஆனால் பர்மாநாட்டில், இம்மூன்று விஷயங்களிலும் ஒரு சிறிதும் ஆண் பெண் வேற்றுமையில்லை. ஆண் பெண் வேற்றுமைக்கு, அதாவது உயர்வு தாழ்வுக்கு இம்மூன்றுமே முதன்மையான காரணங்களாகும். ஆகவே இம்மூன்றிலும் இருபாலார்க்கும் சமஉரிமை இருக்குமாயின், அச்சமூகத்தில், ஆணுக்குப்பெண் அடிமையென்னும் எண்ணமோ, அல்லது பெண்ணுக்கு ஆண் அடிமையென்னும் மனப்பான்மையோ தலைகாட்ட முடியவே முடியாது.

இந்து மதக் கொள்கைப்படியும், கிறிஸ்துமதக் கொள்கைப்படியும் மணம் என்பது ஒரு "தெய்வீகத்தன்மை" வாய்ந்ததாகக்காணப்படுகிறது. பொருளற்ற "தெய்வீகத்தன்மை" என்பதன்பேரால் ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழும் ஒரு வாழ்க்கையையும் ஒருகட்டுப்பாட்டுக்கு உட்படுத்திவிட்டகாரணத்தினால்தான் பெண்களுக்கு இழிவும், அவர்கள் அடிமைகள், உரிமையற்றவர்கள் என்ற மனப்பான்மையும் ஏற்பட்டது. ஆனால் பர்மியர் சமூகத்தில், "கல்யாணம்" என்பதைத் "தெய்வத்தன்மை" வாய்ந்ததாகக் கருதப்படுவதேயில்லை. அவர்கள் அதை ஒருவாழ்க்கை ஒப்பந்தமாகவே கருதுகிறார்கள். ஆகையால், மணமகன், மணமகள் ஆகியஇருவருடைய முழுவிருப்பதின்படியே அவர்களுக்குள் ஒப்பந்தம்ஏற்படும். மணமகளும், மணமகனும் ஒருவர்மேல் ஒருவர் உண்மைக்காதல் கொண்டு இணைந்து , வாழவிரும்பித்தாமே முன்வந்தாலன்றி அவர்களுக்குள் வாழ்க்கை ஒப்பந்தம் தோன்றுவதில்லை. சுருங்கக்கூறினால் புதிதாக ஒரு ஆணும், ஒரு பெண்ணும் ஒன்றுசேர்ந்து இல்லறம் நடத்த இசைவதே மணமாகும்.

வாழ்க்கை நடத்தப்போகும் ஆண் பெண் விருப்பதைப் பொருட்படுத்தாமல், பெற்றோர்கள் விருப்பப்படி செய்யப்படும், அறிவற்ற "தெய்வீக மணம்" பர்மியர் சமூகத்தில் இல்லை. அல்லது, மணமக்களுடைய மனப்பொருத்தத்தைச் சிறிதும் பாராமல், காய்ந்த நாணலையும், கிழிந்த பச்சாங்கத்தையும் உடைய பிரோகிதனிடம் "ஜாதகம்" பார்த்துப் பொருத்தம் பார்க்கும் மூடத்தனமும் அவர்களிடமில்லை. நமது வைதிகர்களால் "தெய்வீகம்" என்று எண்ணப்படும் இச்செய்கைகளை "பர்மியர்கள்" மேற்கொள்ளாமையால் அவர்களுடைய வாழ்க்கைக்கு எத்தீங்கும் நேர்வதில்லை. இதற்குமாறாக அவர்கள் வாழ்நாள் முழுதும், இணைபிரியா அன்போடுறைந்து இன்பமெய்துகின்றனர்.

இந்து சமூகத்தில், கல்யாணத்தின் போது, பெண்ணுக்குத் தாலிகட்டும் வழக்கம் இருக்கிறது. இன்னுஞ்சில சமூகங்களில், ஆண் பெண் மோதிரம் மாற்றிக் கொள்ளும் வழக்கமும், மாலை மாற்றிக்கொள்ளும் வழக்கமும் இருக்கின்றன. பொதுவாய் மற்ற சமூகங்களில், மணத்திற்குப்பிறகு, மணமான பெண்ணுக்கும், மணமாகாத பெண்ணுக்கும் ஒரு வேற்றுமை காணப்படும்படியான அடையாளம் இருக்கின்றது. "பர்மியர்" சமூகத்தில் இத்தகைய அடையாளம் எதுவும் இல்லை; மணமான பெண்ணுக்கும், மணமாகாதபெண்ணுக்கும் ஒருவித வேறுபாடும் இல்லை. இருவரும் ஒருமாதிரியாகவே காணப்படுவார்கள். ஒரு பெண்ணைப்பார்த்த அளவில் அப்பெண் மணமானவளா, ஆகாதவளா என்று கூறுவதற்கு இயலாது; அதற்கான எந்த அறிகுறியையும் அவள் பால் காணமுடியாது. மணத்திற்கென்று தனியாக மோதிரம் அணிவதை பர்மியப்பெண்கள் இழிவாகக் கருதுகின்றனர். அவ்வாறு அணிவதனால் தமது சமவுரிமைக்கு இழுக்கு உண்டாகின்றதென்று நினைக்கின்றனர்.

மணவிஷயத்தில் "பர்மியர்"களுக்குள் முழுசமத்துவம் பாராட்டப்படுவதனால் எண்ணற்ற நன்மைகள் உண்டாகின்றன. தம்பதிகள் ஒருவரோடு ஒருவர் மிகவும் நம்பிக்கை கொண்டு வாழ்கின்றனர். ஆண்கள் பெண்களைத்தம்மைவிட உயர்ந்தவரென்றோ, அல்லது தாழ்ந்தவரென்றோ சிறிதும் சிந்திப்பதில்லை; பெண்கள் ஆண்களைத் தம்மைவிட உயர்ந்தவரென்றோ, அல்லது தாழ்ந்தவரென்றோ சிறிதும் நினைப்பதில்லை. இல்லற விஷயத்தில் எல்லாவகையிலும் இருவர்க்கும் ஒத்த உரிமையுண்டென்றும் நினைத்து அதற்கு ஏற்க நடந்து கொள்ளுகின்றனர்.

"பர்மியர்"க்குள் கணவனறியாத மறை பொருள் மனைவியிடம்இருப்பதில்லை; மனைவி உணராத மறை பொருள் கணவனிடமிருப்பதில்லை. இருவருடைய எண்ணமும், செயல்களும் இருவர்க்கும் தெரிந்தவைகளாகவேயிருக்கும்.

இந்துக்குடும்பங்களில், பெண்மக்களுக்குச் சமவுரிமை கொடுக்காத காரணத்தால், குடும்பத்தின் பொருளாதாரம் சம்பந்தமான சுமை முழுவதையும் ஆண்களே சுமக்க வேண்டியவர்களாகின்றனர். குடும்ப வாழ்க்கைக்கு வேண்டிய செல்வத்தை யீட்டும் பொறுப்பு ஆண்மக்களுக்கு மட்டிலும் ஏற்பட்டுவிட்டது. ஆனால் "பர்மியர்" சமூகத்தில் இப்பொறுப்பும் ஆண் பெண் இருபாலர்க்கும் சமமாகவே அமைந்திருக்கின்றது. குடியானவர்களாக இருக்கும் பர்மியர்களுக்குள், விளைவு குன்றித் தானிய வருவாய் குறைந்து வறுமை தோன்றுமாயின் அக்காலத்தில் பெண்மக்கள், குடும்பப் பொறுப்பை ஆண்மக்களிடம் விட்டு விட்டு வாளாவிருக்க மாட்டார்கள். அவர்கள் ஏதாவது வியாபாரம் புரிந்தாவது பொருள் ஈட்டுவார்கள். இவ்வழக்கம், நமது நாட்டில் இன்று "ஏழைமக்கள்" "தாழ்த்தப்பட்ட வகுப்பினர்" என்பவர்களிடத்தில் மட்டும் காணப்படுகின்றதேயொழிய, வேறு "உயர்ந்த வகுப்பினர்" என்பவர்களிடத்தில் ஏழைக்குடும்பங்களில்கூட இல்லை.

நமது நாட்டுச் சுதந்தரமற்ற பெண்கள்-கல்வியறிவற்ற பெண்கள், குடும்பத்தின் பொருளாதார நிலையையும், குடும்பத்தலைவனுடைய வருவாயையும் உணராமல் செலவு வைக்கின்றனர்; ஆடம்பரமாக வாழும் செல்வர்களின் வீட்டுப் பெண்களைக்கண்டு அவ்வாறே தாமும் நினைக்கின்றனர். இவ்வகையில் ஆகும்மிகுந்தசெலவின் பொருட்டுக்குடும்பத்தலைவனாக இருக்கும் ஆண்மகனே பாடுபடவேண்டிய நிலையிலிருக்கின்றான். ஆனால் "பர்மியர்" சமூகத்திலோ ஆண்பெண் இருபாலரும், குடும்ப வருமானத்தைப்பெருக்குவதில் ஒத்தமனப்பான்மை யுடையவர்களாகவே இருக்கின்றனர். இந்தமனப்பான்மைக்குக் காரணம் அவர்களுடைய சமத்துவமேயன்றோ?

இந்து சமூகத்தில் பெண்களுக்குச் சொத்துரிமையில்லை; மணமாவதற்கு முன்னும் சொத்துரிமையில்லை; மணமான பிறகும் சொத்துரிமையில்லை; அவர்களுக்குச் சொத்துரிமையளிக்க வேண்டுமென்பது பற்றிச்சட்டஞ் செய்ய வேண்டுமென்னும் முயற்சியும் கிளர்ச்சியும் இப்பொழுதுதான் நமது நாட்டில் தொடங்கப்பட்டிருக்கின்றது. இம்முயற்சிக்கோ நமது நாட்டு வைதிகர்கள், இறந்துபோன பழய சட்டங்களாகிய சாத்திரங்களையும், மதத்தையும் ஆதாரமாகக்காட்டி எதிர்வழக்குப்பேசுகிறார்கள். இத்தகைய பகுத்தறிவுடைய பாசிபிடித்த மூளையுடைய வைதிகர்கள் சட்டசபைகளிலும் புகுந்துகொண்டு இந்துப்பெண்களுக்குச் சொத்துரிமையளிக்க வேண்டுமெனக் கொண்டு வரும் தீர்மானங்களையும், சட்டங்களையும், எதிர்த்து வருகின்றனர். ஆனால் பர்மியப்பெண்களுக்கோ பல ஆண்டுகளாகவே சொத்துரிமையிருந்து வருகின்றது. மணமானதம்பதிகளிருவரும், குடும்பச்சொத்தில் ஒத்த உரிமைபெற்றவர்களாக ஆகிவிடுகின்றனர். கணவன் மனைவிகள் இருவரும் தனித்தனியே பொருள் ஈட்டினாலும், ஒருவர்க்கொருவர் பொருளீட்டுவதில் எவ்வளவு ஏற்றத்தாழ்வு இருந்தாலும், அப்பொருள்கள் இருவர்க்கும் பொதுவேயாகும்

அன்றியும் முன்னோர்களின் சொத்துக்கும் இருவரும் ஒத்த உரிமையுடையவர்களாகின்றனர்; மணமான பின்னர், மணமகனுக்கு அவனுடைய முன்னோரின் செல்வம் கிடைக்குமாயின் அதில் மணமகளுக்கும் ஒத்த பங்குண்டு. மணமகளுக்கு அவள்முன்னோருடைய செல்வம் கிடைக்குமாயின் அதில் கணவனுக்கும் ஒத்த உரிமையுண்டு.

இந்துசமூகத்தில் ஒருகுடும்பத்தலைவன், தான்சம்பாதித்த செல்வத்தைத் தன்விருப்பப்படி யாருக்கேனும் கொடுத்துவிடலாம்; அதுபற்றித்தனது மரணத்தருவாயில் "மரணசாசனம்" எழுதிவைக்கவும் உரிமையுண்டு. தனது முன்னோர் ஈட்டிய செல்வமாயிருந்தாலும், தனக்குப் பிள்ளையில்லாவிட்டால், அச்செல்வத்தை இந்துக்குடும்பத்தலைவன், தனது விருப்பப்படி யாருக்கு வேண்டுமானாலும் எழுதிவைக்கும் உரிமை படைத்திருக்கிறான். ஆனால், ஒரு பர்மியனுக்கு மரணசாசனம் எழுதிவைக்கச் சிறிதும் உரிமையேயில்லை. இவ்வாறு மரணசாசனம் எழுதிவைப்பதை அவனுடைய மதமே தடைசெய்கின்றது.

"பர்மியர்கள்" தங்கள் மணத்திற்கு முன், சொந்தமாகச்செல்வமுடையவர்களாயிருப்பார்களாயின், அச்செல்வம் மட்டிலும் அவர்களுடைய தனிப்பட்ட சொந்தப்பொருளாகவேயிருக்கும். இவ்வுரிமை ஆணுக்கும் உண்டு; பெண்ணுக்கும் உண்டு. இவ்வகையில் தனியான சொந்தச்செல்வமுள்ள ஒருகணவன் மாண்டுவிட்டால், அவன் செல்வம் யாவும் மனைவிக்கே உரிமையாகும்; தனிப்பட்ட சொந்தச்செல்வமுடைய மனைவி இறந்து விட்டால் அவளுடைய செல்வம் யாவும் கணவனையே சேரும்.

இந்துக்களும், இந்தியக் கிறிஸ்துவர்களும், மண நீக்கம், அதாவது

"விவாகரத்து" என்ற பெயரைக் கேட்டவுடன் நடுநடுங்குகின்றனர். இவ்வுரிமை, சட்டமூலமாகவும், நடைமுறை மூலமாகவும் ஏற்பட்டு விட்டால் அதனால் குடும்ப வாழ்வு சீர்குலையும் என்று குரைக்கின்றனர். இதனால் அடிக்கடி தம்பதிகள் பிரிந்து விடுவார்களென்றும், அவ்வாறு பிரிந்து விடுவதனால் ஒழுக்கம் கெடுமென்றும் கூறுகின்றனர். ஆனால், இந்தியாவில், தென்னாட்டில், இந்துக்களில் தாழ்ந்த வகுப்பாராகக் கருதப்படும் சில வகுப்புகளிலும், தாழ்ந்த வகுப்பாராகக் கருதப்படும் சில இந்தியக் கிறிஸ்துவர்களிடையிலும், மகம்மதிய சமூகத்திலும் இன்னும் "விவாக ரத்து', நடைபெற்றுக்கொண்டுதான் வருகிறது. ஆனால் வைதீகர்கள் கருதுவதுபோல, மேற்கூறிய விவாக விலக்குள்ள சமூகங்களில், குடும்பச் சீர்குலைவோ, அல்லது ஒழுக்கக்கேடோ அளவுக்குமீறி ஏற்பட்டு விட்டதாகக்கூற முடியாது. இதற்குமாறாக, விவாக விலக்கற்ற சமூகங்களிலேயே, அதிகமாகக்குடும்பச் சீர்குலைவும், கூடாவொழுக்கமும் மலிந்திருப்பதைக்காணலாம்.

"பர்மியர்" சமூகத்தில் விவாக விலக்கிற்கு ஒருவித தடையுமில்லை; மணஞ் செய்து கொள்ளுவதில், தம்பதிகளுக்கு எவ்வித தாராள உரிமை இருக்கிறதோ அதுபோலவே, மணவிடுதலை விஷயத்திலும் தாராளமான உரிமையுண்டு. அவர்களுக்குள் [illegible] பிணக்கும் ஏற்பட்டு, விவாக விடுதலை செய்து கொள்ளும்போது, அவர்களுடைய பொதுச் செல்வத்தில் இருவர்க்கும் பாகமுண்டு. ஆனால், விவாகவிடுதலைக்குக் காரணமான குற்றத்தைச் செய்தவர்களுக்குச் செல்வத்தில் குறைவான பகுதியே கிடைக்கும்.

இவ்வாறு "பர்மியர்"களுக்குள் "விவாக விடுதலை" வெகு எளிதானதாக இருப்பதனால், அவர்களுடைய குடும்பவாழ்வு மிகவும், மகிழ்ச்சிகரமாகவும், இன்பஞ்செறிந்ததாகவுமே நடைபெறுகின்றது; அவர்களுக்குள் குடும்பச்சீர்குலைவோ கூடாவொழுக்கமோ தோன்றுவது அரிதாகும். விவாகவிடுதலை இவ்வாறு எளிதாக இருப்பினும், அதைச்சமூகத்தினர் அனைவரும் ஒப்புக்கொள்ளுவதில்லை; மிகக்குறைவான விவாக விடுதலைதான் நடைபெறும்.

உரிமையற்ற இந்துசமூகப்பெண்களும், மற்றைய சமூகத்தில் உள்ள உரிமையற்ற பெண்டிரும், ஆண்மக்களின் துணையின்றி வாழ்க்கை நடத்தமுடியாத தாழ்ந்த நிலையிலும், திறமையற்ற நிலையிலும் இருக்கின்றனர். ஆண்மக்களோடு சமசுதந்தரம் பெற்றுள்ள பர்மியப்பெண்களோ, உலக வாழ்வு சம்பந்தமான எல்லாச் செய்திகளையும் ஆண்மக்களைப்போல நன்றாய் அறிந்திருக்கின்றனர். ஆகையால், அவர்கள், சமயம் நேரும்போது சொந்தமான தனிவாழ்க்கை நடத்தவும் திறமையடைந்திருக்கின்றனர்.

பர்மியர்களுக்குள், மணமான பிறகுதான், ஆண் பெண் சமத்துவம் உண்டாகின்றதென்பதில்லை. மணமாவதற்கு முன்னும், அவர்களுக்குள் எத்தகைய வேற்றுமையும் இருப்பதில்லை. இந்து சமூகத்தில், பெண் குழந்தைகளை வேறுவிதமாகவும், ஆண் குழந்தைகளைவேறுவிதமாகவும் நடத்துவதுபோல பர்மியர்களுக்குள் வித்தியாசமாக நடத்துவதில்லை. இருபாலான குழந்தைகளும், ஒரு மாதிரியாகவே நடத்தப்படுகின்றனர். இவ்வாறு அவர்கள், இளவயது முதலே ஆண் பெண் உயர்வு தாழ்வு வேற்றுமைகள் இல்லாமற்பழகுவதே, அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் ஒற்றுமையுடையவராகவும், சமமானவர்களாகவும் சேர்ந்து வாழ்வதற்கு இடமாக இருக்கிறதென்று கூறலாம்.

மேலே கூறியசெய்திகளால், பர்மியர்களுக்குள்ள மணச்சுதந்தரத்தையும், அவ்வகையில் ஆண் பெண்களுக்குள்ள நன்மையையும், அதனால் அவர்கள் குடும்பவாழ்க்கையிலுண்டாயிருக்கும்மேன்மையையும்பெண்களுக்கு ஆண்களைப்போலவே சொத்துரிமையிருப்பதையும்அறியலாம்.மேற்கூறிய சமசுதந்தரத்தால், அவர்கள், அடையும் இன்பத்தையும், மகிழ்ச்சியையும், காணும் எவரும், "ஆண் பெண் சமத்துவம், சமூகவாழ்க்கையில் துன்பத்தையுண்டாக்கி விடும்" என்று கூறும் அறிவுகெட்ட கட்டுப்பெட்டிகளின் சொல்லைச்சிறிதும் பொருட்படுத்த மாட்டார்களன்றோ?

இந்து சமூகத்தில், பெண்கள் பல்லாண்டுகளாக அடிமை வாழ்விலிருப்பதற்கு, இந்துமதமே ஒரு முதன்மையான காரணமாயிருப்பதுபோல பர்மியர் சமூகத்தில் பல்லாண்டுகளாகப் பெண்களுக்குச்சமவுரிமையிருப்பதற்கு, பகுத்தறிவுக்கொள்கையையுடைய புத்தமதமே ஒருமுதன்மையான காரணமாகும் என்பதையாரும் மறுக்க முடியாது. ஆகவே நமக்கு எச்சுதந்தரம் வேண்டுமானாலும் சரி, முதலில், குருட்டு நம்பிக்கைகளுக்கு, உறைவிடமாகவும், பிறப்பிடமாகவும் உள்ள இந்து மதம் ஒழிந்தாகவேண்டும் என்ற முடிவுக்கே பகுத்தறிவுடையோர் வரக்கூடும்.

கிறிஸ்துவர்கள் நிலை.

ஜார்ஜ் ஜோசப் விளக்கம்.

பிரதம மந்திரியின் வகுப்புத் தீர்ப்பைமாற்றி இந்தியக்கிறிஸ்தவர்களுக்குக் கூட்டுத்தொகுதி ஏற்படுத்த நடந்துவரும் முயற்சிகளைப்பற்றி பாரிஸ்டர் திரு. ஜார்ஜ்ஜோஸப் பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—

காந்தி தற்கொலைசெய்து கொள்வதாக பயமுறுத்திஅதன்மூலம் ஏற்பட்ட பூனா ஒப்பந்தத்தின் பலனாகவே இந்தப்பேச்சுக்கிளம்பியிருக்கிறது. என்னைப்போன்ற கிறிஸ்தவர்கள் தற்கொலையை ஒருபாவமாகவே கருதுகின்றனர். பிடிவாதமாகப் பிறரை நிர்ப்பந்தம்செய்து பூனா ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அது பலோராஜ்யசாலமென்றே நான் கூறுவேன். ஜாதி ஹிந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்டவகுப்பினருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தால் ஹிந்துமதத்திற்கு பலமேற்பட்டு விட்டது. சமீபகாலத்தில் இந்திய சரித்திரத்தில் ஹிந்துமதத்திற்கு இம்மாதிரி பலம் ஏற்படவில்லை. எந்த சமூகத்திலிருந்து கிறிஸ்துவமதத்திற்கு இதுவரை ஆள்பலம் சேர்ந்துவந்ததோ அந்த சமூகம்இப்போது ஜாதி ஹிந்துக்களோடு சேர்ந்து விட்டது. இந்தியாவில் கிறிஸ்துவமத வளர்ச்சிக்கு இதனால் மிகுந்த தீங்கு ஏற்படும்.

❁

ஆகையால் நாம்ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். ஹிந்து முஸ்லீம்களைப்போல் நாம் தொகையில் பெருத்தவர்களல்ல. மெஜாரிட்டி சமூகங்களோடு நாம் ராஜிப் பேச்சுகள் நடத்துவது நமக்குப்பந்தோபஸ்தல்ல. நமக்குவேண்டிய பந்தோபஸ்துடன் நாம்இருக்க வேண்டும். மேற்படி சமூகங்களின் வெள்ளத்தில் நாம் மூழ்கிப்போய் நாசமாகி விடக்கூடும்; அதில் கௌரவக்குறைவில்லை. ஆனால், நமது பலஹீனமான நிலைமையில் நமது வாசற்படியைத்திறந்து வைத்துக்கொண்டு மற்றவர்களை அழைத்தால் அதுமஹத்தான பிசகு. அதாவது கிறிஸ்துவரல்லாதார் வாழும் தேசத்தில் சுயநிர்ணயம், தேசியம், என்ற சித்தாந்தங்களை நாமும் ஏற்றுக்கொண்டு தமாஷ்செய்வது ஆபத்து. வருங்காலத்தில் ஏற்படக்கூடியது ராமராஜ்யமோ கிலாபத்தோ அல்லது இரண்டுங்கலந்த மிச்ரமோ தான். அதுதான் பயமாயிருக்கிறது. ஹிந்துமதத்தின் நன்மைக்காக காந்தி தன்னுயிரை போக்கிக்கொள்ள முன்வந்தது சும்மாவல்ல. மௌலானா ஷவுகத்தலி ஹிந்து முஸ்லீம் ஒப்பந்தத்திற்கு வழி தேடுவதை நாமும் பின்பற்றுவதென்பது முடியாது. மௌலானா ஷவுகத்தலி, டாக்டர் அம்பெத்கார் இவர்களைப்போல் நமக்குப்பின் பலமில்லை நாம் இந்நாட்டிலெல்லாம் 60 லட்சம் பேர்தான் இருக்கிறோம். ராஜ தந்திர வேலைதுரோக வேலை. அதில்நாம் இறங்கக்கூடாது. இங்கிலாந்து பிராடஸ்டண்ட் தேசமாயிருந்தாலும் அது கிறிஸ்துவதேசம். ஹிந்து முஸ்லீம்களைவிட இங்கிலாந்துக்கும், நமக்கும் அதிக சம்பந்தமுண்டு. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு ஒன்றோடுதான் நாம் ஒப்பந்தம் செய்துகொள்ள முடியும் தற்காலம் நாம்சொல்வதை அவர்கள் கேட்பதில்லை. நமது ஒத்தாசை அனாவசியமென்று அவர்களுக்கு தோன்றுகிறது. எனக்கு அதைப்பற்றிக்கவலையில்லை. ஹிந்து முஸ்லீம்களைக்குஷிப்படுத்துவதில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு நன்றி காட்டப்போவதில்லை அந்தக்காலத்தில் தான் நமது உதவி வேண்டியிருக்கும்.

ஆனாலும் கூட்டுத்தொகுதிகளைவேண்டுவோர் ஹிந்துக்களோடு நேசபாவமாயிருக்க இப்போது ஒரு வழிதேடுவதால் நான்சில யோசனைகள் சொல்லுகிறேன். அதிகாரமாகிய தராசு அந்தப்பக்கமோ இந்தப் பக்கமோ தாழாமல் பார்த்துக் கொள்ளும் விசை இந்தியக்கிறிஸ்துவரிடம் இருப்பது சாத்தியமாகும்படி சென்னை சட்டசபையில் போதிய ஸ்தானங்கள் நமக்கு ஏற்படவேண்டும். முஸ்லீம்கள் தங்களுக்கு 5 மாகாணங்கள் ஏற்படுத்திக்கொண்டு விட்டார்கள். பாக்கி ஹிந்துக்கள் மாகாணங்களாக்கிவிட்டன. இந்தியக்கிறிஸ்துவர்களுக்கு அம்மாதிரி ஒருமாகாணமாவது ஏற்பட வழியுண்டா? சென்னை சட்டசபையில் 215 ஸ்தானங்கள் இருந்தால் அதில் 50 இந்தியக் கிறிஸ்துவர்களுக்குக் கொடுத்துவிடவேண்டும். வங்காளத்தில் ஐரோப்பியருக்கு 30 ஸ்தானங்கள் கொடுப்பதால் நமக்கு 100 ஸ்தானங்கள் கேட்க உரிமையுண்டு. ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டுப்போனாலும் கிறிஸ்துவ ராஜ்யம் அதனோடு துரத்தப்படாமலிருக்கும்படி கிறிஸ்துவர்களாகிய நாம் செய்வதற்கு 50 ஸ்தானங்களாவது பெறவேண்டும்; ஏனெனில் இங்கிலீஷ் காரர்கள் போய்விடுவதாகத்தான் தீர்மானம் செய்திருப்பதாகத் தெரிகிறது. ஒரு மாகாணத்திலாவது 100-க்கு 25 ஸ்தானங்கள் கிறிஸ்துவருக்கு வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். இந்தமாகாணத்தில்தான் நம்மவர் தொகை கொஞ்சம் அதிகம். ஆகையால் நம்மிடம் நேசப்பான்மை காட்டுவதாகச்சொல்லும் ஹிந்துக்கள், நான்சொல்லுகிற அளவுக்கு ஒத்துவருவதாயிருந்தால் அவர்களோடு ராஜிசெய்து கொள்வேன்.

கூட்டம்.

5—10—32 ௳ மாரிகுப்பம் கோலார் தங்கவயல் தென்னிந்தியா பௌத்த சங்க சபா மண்டபத்தில் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மேல் சிறந்த விரப்பனர்களால்சொற்பொழி வாற்றப்படும். அக்கால் சகோதரிகள், சகோதரர்களனைவரும் வந்தேரும்படியாய்க் கௌரவ காரியமைச்சர் அறிவிக்கிருர்.

சோதிடமும், சகுனமும்.

டாக்டர் பராஞ்சிபை அவர்கள் எழுதியதின் மொழிபெயர்ப்பு.

மத சித்தாந்தங்களிலுள்ள நம்பிக்கையே—மாந்தரின் பகுத்தறிவைச் சிதைத்து, அவர்களை ஜோதிட தீர்க்க தெரிசிகள் என்று சொல்லப்படுகின்றவர்களின் மாயவலைகளில் எளிதில் அகப்படுமாறு செய்கின்றது.

மறைவாக உள்ள இடத்தைக் காணவேண்டுமென்பதில் மனிதனுக்கு ஆவல் அதிகம்; அதனால் இனி வரப்போகும் எதிர்கால சம்பவங்களை முன்னமே உணர்ந்து, அவைகளால் தனக்கு, தற்காலத்திலிருக்கும் கஷ்ட நிஷ்டூரங்கள் ஒழிவதற்கு ஏதாவது வழியுண்டாவென்பதுபற்றி அளவு கடந்த ஆசையோடும் விசாரிக்கத் தொடங்குகின்றான்.

பூசாரிகளும், மத குருக்களும் எதிர்காலத்தைப்பற்றி முன்னமே அறிந்து கொண்டிருப்பதாக எப்பொழுதும் கூறிக்கொண்டிருக்கின்றனர். தேவதைகளுக்குப்பலியிடப்படும் பிராணிகளின் தும்மல், துடித்தல் முதலிய நடவடிக்கைகளைக் கவனித்தல்; பறவைகள் பறந்துபோகும் திசைகளைப் பார்த்தல்; அந்நாட்டினருக்கு ஏற்பட்ட யுத்தம் முதலிய சம்பவங்களைவேத (Silylline books) பாராயணம் பண்ணுதல்; கஸாண்டிரா (Cassandra) வின் கதை; முதலிய இவைகள் கிரேக்கர், உரோமர் என்பவர்கள் எதிர்கால சம்பவங்களை அறிவதற்கு அடையாளங்களாக மேற்கொண்டார்களென்பது நன்கு விளங்குகின்றன. இன்னும் மந்திரவாதிகளென்ன, மையிட்டு குறிபார்க்கின்றவர்களென்ன, சோதிட ரேகை சாஸ்திரக்காரர்களென்ன; தீர்க்கதரிசிகளெனப்படுவோரென்ன— இவர்களெல்லாம் சட்ட விரோதமான பல செய்கைகளை மேற்கொண்டு ஒன்றுமறியாத பாமர மக்களைத்தங்களிஷ்டம் போல் ஆட்டி வருகின்றனர். இந்தியாவிலே மேற்கூறியோர் தங்களுடைய அட்டகாசங்களைப் பாமரமக்களிடத்தில் மாத்திரம் இன்றி, படித்தவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்களிடத்திலும் சுலபமாகச் செலுத்தி வருகின்றனர். பூசாரிகள், மனிதர்களின் வாழ்நாளின் நிலைமையைக் காட்டுவதற்கென்று ஜாதகங்களைக் கணித்து வருகின்றனர்; அதோடு வாழ்நாளில் நிகழவிருக்கும் தீமைகளைப் போக்கும் பொருட்டுப் "பிராயச்சித்தம்" என்னும் பெயரால் பல வகையான மந்திர தந்திரங்களையும், சடங்குகளையும் கைக்கொண்டு ஜன சமூகத்தை ஏமாற்றி வருகின்றனர்.

அற்ப சம்பவங்களிலிருந்தெல்லாம் நற்சகுனமென்றும், துற்சகுனமென்றும் ஏற்படுத்திக் கொண்டு தொடங்கியகாரியங்களுக்கெல்லாம் அவைகளைப் பார்க்கின்றனர். தெருவில் நடக்கும் போது ஒரு பூனை வலமாதலையும் இடமாதலையும் கண்டு, அதனால் நல்லது கெட்டது உண்டாகும் என்று கருதப்படுகின்றது. ஒரு காரியத்தை உத்தேசித்துப் போகும் போது ஒரு கைம்பெண் எதிரே வரின் கெட்ட சகுனமாம். அதனால் உத்தேசித்துச்செல்லும்காரியம் கைகூடாதாம்; ஆனால் ஒரு கட்டுக்கழுத்தி, அதுவும் நிறைந்த நீர்க்குடத்துடன் எதிர்ப்படுவாளானால் அது மிகவும் மேலான நற்சகுனமாம்: அதனால் உத்தேசித்துச் செல்லும் காரியம் கடிதில் முட்டின்றி நிறைவேறிவிடுமாம்! வாரத்தில் ஒரு சில நாட்கள் தாம் நல்ல நாட்களாம்; ஏனையவை சூலம் கொண்ட கொடிய நாட்களாம்!

இம்மாதிரியான மூடத்தனமுள்ள சகுன நம்பிக்கைகள் எண்ணிக்கையில்லாமல் இருக்கின்றன. இவைகளையெல்லாம் இந்தியர்களுக்கு, அவர்கள் அறிந்திருந்தாலும் அறியாதிருந்தாலும் கூட வருத்தத்தையும் பயத்தையும் உண்டாக்குகின்றன. இம்மாதிரியான மூடக்கொள்கைகளாகிய வித்துக்களை இளைஞர்களின் மனத்தில் சிறுவயதிலே விதைத்து விடுவதால் அவைகள் அவர்களிடத்தில் நன்றாக வேரூன்றிச் செழித்துக்கிளைத்து வளர்ந்து வருகின்றன; அவர்கள் பெரியவர்களான பிறகு அவைகளை அகற்றுவதென்றால் முடியாத காரியமாகி விடுகிறது.

மனிதனின் வாழ்நாளில் நிகழப்போகும் சம்பவங்களை முன்னரே தெரிவிக்கும் சாஸ்திரங்களிலெல்லாம், ஏதோ நக்ஷத்திரங்களின் இருப்பைக்கொண்டு கணிக்கப்படுவதாகக்கூறும் சோதிட சாஸ்திரமே மிகச் சாதாரணமாகவும் அதி முக்கியமானதாகவும் கருதப்படுகின்றது. அதிகக்கல்வி கற்று தேர்ச்சிபெற்ற மேனாட்டு அறிஞர்களிலும்கூட அநேகர் இந்தச்சோதிடத்தில் அதிக நம்பிக்கையுடையவர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு வருஷ ஆரம்பத்திலும் அந்த வருஷத்தில் நிகழப்போகும் முக்கியமான சம்பவங்கள் என்னவென்பதையும், எவரெவர் சாகப் போகின்றனர், பருவகாலங்கள் என்ன நிலைமையிலிருக்கப்போகின்றனவென்பனபோன்றவிஷயங்களையும் பிரபலமாகப் புஸ்தகங்களில் அச்சிட்டு வெளியிடுகின்றனர். சோதிடத்தின் மூலமாகப் பொருள்பறிப்போரைத்தண்டிக்க இங்கிலாந்து தேசத்தில் சட்டம் இருந்த போதிலும் அந்நாட்டில் உள்ள அநேகர் இன்னும் சோதிடத்தைக் கையாடிவருவதைக் காணலாம். அநேக நாவல்கள்—ஏன்—ஸ்காட் (Scott) எனும் பேர் பெற்ற நாவலர் எழுதிய "கை—மேனரிங்" (Guymannering) "க்வெண்டின்—டர்வார்ட்" (Quentin Durward) எனப்படும் நாவல்களில் கூட இந்தச் சோதிட விஷயம் கையாளப்பட்டிருக்கின்றது. ஆகாயத்தில் ஆகர்ஷண சக்தியால் பல்வேறு கதிகளில் செல்லா நின்ற இந்த நக்ஷத்திர கூட்டங்களுக்கும், ஓர் மனிதனுடைய வாழ்நாளின் சம்பவங்களுக்கும், எப்படிச்சம்பந்தம் ஏற்பட்டதென்பதும், அவற்றை இவர்கள் எவ்வாறு அறிந்து இத்தனை நம்பிக்கையோடு கையாளுகின்றனர் என்பதும், அறிவிற்கே எட்டாததாக இருக்கின்றது. ஆனால் இந்தச் சோதிடகணித சாஸ்திரம் எல்லாத்தேசங்களிலும் கையாளப்படுவதோடு, அந்தவிஷயத்தைத்தவிர மற்ற விஷயங்களில் மிக்க திறமையும், புத்திநுட்பமும் உள்ள பலரால் நம்பப்பட்டு வருகின்றதென்பதும் உண்மையேயாகும்.

எந்த அறிவாளியும் ஒரு விஷயம், ஏறக்குறைய சற்றேனும் தனது பகுத்தறிவிற்கு எட்டக்கூடியதாக இருந்தால் அவ்விஷயத்தை "முற்றிலும் நம்பத்தகாதது" எனக் கூறமாட்டான் என்பது உண்மை. இதனால் தான் வெளிக்கு மாத்திரம் மூட சித்தாந்தங்களாக விருந்த பல கொள்கைகள் பின்னால் அறிஞர்களால் நன்கு ஆராய்ந்துணரப்பட்டு அவற்றிலுள்ள உண்மைத் தத்துவங்கள் வெளியாக்கப்பட்டன. உதாரணமாகச் சூரியப்பிரவேசத்துள் காணப்படும் பலவித மங்குல்புள்ளிகளுக்கும் (Suuspots) பருவக்காற்றுகளுக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாகக் கூறப்பட்ட சித்தாந்தத்தைப் பின்னால் பௌதிக வானசாஸ்திரிகள் நன்கு பரிசோதனை செய்து அதன் உண்மைத்தத்துவத்தை விளக்கினார்கள். "சூரிய வெளிச்சம் நமது தேகத்தில் நேராகப்படாவிடினும் அதனால் நமது இரத்தத்தில் மாறுதல் ஏற்படுகின்றது" என்ற விஷயமும் சாதாரணமாக நம்பத்தக்கதாக இல்லை. ஆனால் தேக சாஸ்திர விற்பன்னர்கள் சில வியாதிகளுக்கு மூலகாரணமாக இருக்கும் கிருமிகள், இரத்தத்தை இரவில்பரிசோதிக்கும் போதுதான் புலப்படுகின்றதென்பதையும், பகலில் அவை காணப்படுவதில்லையென்பதையும் தங்களுடைய ஆராய்ச்சியினால் நிரூபித்திருக்கின்றனர். இருந்த போதிலும் இம்மாதிரியான, வெளிக்கு நம்பத்தகாத விஷயங்களையும், விஞ்ஞான தத்துவ முறைப்படி ஆராய்ந்தறியப்படும் வரை, நம்பாமலிருத்தல் சால ஏற்புடைத்தாம்.

சோதிடத்திற்கும், முற்கூறியவாறு ஏதாவது அடிப்படையான உண்மைத் தத்துவங்களிருப்பின், அவற்றிற்குள்ள சம்பந்தங்களை விஞ்ஞானமுறையாக எடுத்துக் காட்டினாலன்றோ அது உண்மையென்று கொள்ளப்படும்? முதலாவதாக அவ்வித அடிப்படையான தத்துவங்களிருக்கின்றனவென்பதற்குச்சரியான-அதாவது இவைகள்தான் என்ற குறிப்பான-இதுவோ அதுவோ, வென்ற சந்தேகங்களுக்கு இடம் இல்லாத-ஆதாரங்கள் இன்னவைதான், என்று நமக்குத்தெரிய வேண்டும். பார்க்கப்போனால் இந்தச்சோதிடர்கள், இரண்டு மூன்று விதமாகப்பொருளைத் திரித்தும் மறித்தும் கூறும் புரட்டு மொழிகளை முதன்மையாகக் கையாளுவதோடு, அவர்கள் கூறும்சோதிடமானது பலபொருள்படும்மிக்கசாமர்த்தியமானவாக்கியங்களினாலேயே அமைக்கப்பட்டிருப்பதும் வெளிப்படையாகத்தெரியும். இன்னும் இந்தச் சோதிடர்கள் குறிப்பாக வெளியிடும் ஆதாரமுள்ள விஷயங்களில், உண்மையாக நடப்பவை எத்தனை? பொய்யாகப்போகின்றவை யெத்தனை? என்பவைகளையும் கணக்கிட்டு, அவை அதிகமாக இருக்கின்றன என்பதைக்கண்டு தெரிய வேண்டும். தவிர—அவ்வளவு முக்கியமன்றெனினும்—எந்தெந்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க,

உண்ணாவிரதம், உச்சிக் குடுமி, தொப்பை வயிறு.

(ஸ்குரூஉலூஸ்).

காந்தியடிகள் உண்ணாவிரதமிருந்தார். நாடெங்கும் கிளர்ச்சி யேற்பட்டது. பத்திரிகையில் அதைப்பற்றியே எழுத்துக்கள் இருந்தன. எந்தப்பத்திரிகைகளைப் பார்த்தாலும் காந்தியின் உண்ணாவிரதந்தான். பெரிய எழுத்துக்களெல்லாம் அதற்கே உபயோகப்பட்டன. இதற்கிடையே தீண்டாமை ஒழிப்பு வேலை நடைபெறுவதாக விளம்பரங்கள் காணப்பட்டன. அந்தக் கோயில் திறக்கப்பட்டது; இந்தக்கோயில் திறக்கப்பட்டது, அதைத்திறக்க யோசனை செய்யப்படுகிறது; இதைத்திறக்க யோசனை செய்யப்படுகிறது; அங்கே சமபந்தி போஜனம்; இங்கே சமபந்தி போஜனம் என்றெல்லாம் விளம்பரங்கள் காணப்பட்டன. இவையெல்லாம் பிச்சைக்காரன் வாந்தி எடுப்பதைப்போலவே இருந்தன. இதைப் பற்றியே பலவிதமாகச் செய்திகள் காணப்பட்டன.

முதலில் இதனால் ஏற்பட்டபலன் என்னவென்று பார்ப்போம். நம்மைப்பொறுத்த வரையில் நமது கருத்தைச் சொல்லி விடுகிறோம். சுமார் ஒரு வாரம் வரையிலும் பத்திரிகைகளுக்கும் கொண்டாட்டம். அதிக பத்திரிகைகள் விலையாயின. ஐயாயிரம் பத்திரிகை அச்சான பத்திரிகாலயத்தில் ஆறாயிரம் பத்திரிகை அச்சாயின. ஆகையினால் பத்திரிகை ஆபீஸ்களுக்குக் கொஞ்சம் லாபந்தான். அடுத்தபடி பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்திருக்கும் வியாபாரிகளுக்குக் கொஞ்சம் லாபம் கிடைத்திருக்கலாம். ஏனென்றால் ஐயாயிரம் பத்திரிகையில் விளம்பரமாகியிருக்குமல்லவா? அடுத்தபடி போஸ்டாபீசுக்குக் கொஞ்சம் லாபம். ஐயாயிரம் காலணா ஸ்டாம்புக்கு பதில் 6000 காலணா ஸ்டாம்பு செலவழிந்திருக்குமல்லவா? அடுத்தபடி பத்திரிகை ஏஜண்டுகளுக்குக்கொஞ்சம் லாபம். ஐயாயிரம் பத்திரிகைகளுக்குக் கமிஷன் பெற்றவர்கள் ஆராயிரம் பத்திரிகைகளுக்குக் கமிஷன் பெற்றிருப்பார்களல்லவா? அடுத்தபடி காகித வியாபாரிகளுக்குக் கொஞ்சம் லாபம்; மை விற்பனைக்காரர்களுக்குக் கொஞ்சம் லாபம்; இவ்வாறு பலவகையில் பத்திரிகைத்தொழிலும் பத்திரிகை சம்பந்தமான தொழிலும், கொஞ்சம் நன்மையடைந்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது. போகட்டும், தொழில்முறை மந்தமடைந்திருக்கும் இந்த நாளில் பத்திரிகைத் தொழிலுக்காவது சில தினங்கள் கிராக்கி ஏற்பட்டது பற்றிச் சந்தோஷப்படுகிறேன்.

அன்றி, திரு. காந்தியின் நோக்கம் ஏதாவது நிறைவேறிற்றா என்று பார்த்தால், அது சரியாக நிறைவேறவில்லை; தீண்டாதாருக்காவது பெருத்த சாதகம் ஏதாவது உண்டாயிற்றா என்றால் அதுவும் இல்லை. ஆகவே காந்தியைப் பொறுத்தவரையிலும் உண்ணாவிரதமானது விழலுக்கிறைத்த நீராயிற்று என்று தான் சொல்லுவேன். நீங்கள் மறுத்துப்பேசினாலும் நான் நிச்சயமாக—சத்தியமாக—அப்படித்தான் சொல்லுவேன். முதலில் தாழ்த்தப்பட்டார்க்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பதைக்கூட காந்தி ஒப்புக்கொள்ளமாட்டேன் என்று பிடிவாதம் பண்ணினார். புனா ஒப்பந்தப்படி, ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பதையும், தனித்தொகுதிபோன்ற பூர்வாங்கத்தேர்தல் முறையையும் ஒப்புக்கொண்டார். ஆகவே காந்தியின் காரியம் எங்கே பலித்தது? அவருடைய ஆதிக்கொள்கை என்னவாயிற்று? தோற்றுப்போகவில்லையா?

அடுத்தபடி தீண்டாதாரின் சுதந்தரம் பலி கொடுக்கப்பட்டது; அது திரு. காந்தியின் உயிருக்காகத்தியாகம் பண்ணப்பட்டது. அவர்கள் சுதந்தரம் தனித்தொகுதித் தேர்தல் முறையேயாகும். அது ஒருவகையில் ஒழிந்தது. அதை ஒழிப்பதற்கு, டாக்டர் அம்பெத்கார் கோஷ்டியார் எளிதில் சம்மதிக்கவில்லை. ஆனால், பெரிய, பெரிய தலைவர்களெல்லாம், அவர்காலைப்பிடித்தார்கள். கெஞ்சினார்கள்; பல்லைக்காட்டினார்கள்; தேசாபிமானம் என்றார்கள்; காந்தியைக் காப்பாற்ற வேண்டும் என்றார்கள்; காந்தியின் உயிர் உமது கையில் தான் இருக்கிறதென்றார்கள்; இதற்கிடையில், மூர்க்கத்தனம் கொண்ட வடநாட்டு இந்துமத முரடர்களாகிய இளைஞர்கள் சிலர், அம்பெத்காரை பயமுறுத்தினார்கள்; அவர் தனித்தொகுதியை விட்டுக்கொடுக்கா விட்டால், அவர் உயிருக்கு உலைவைப்பதாக மிரட்டினார்கள்; உருட்டினார்கள்; அவருக்குப் பல கடிதங்களையும் எழுதினார்களாம். பாவம் அம்பெத்கார் என்னசெய்வார்! பயந்து விட்டார்; மனமிரங்கி விட்டார்; தனித்தொகுதியை விட்டுக்கொடுக்கச் சம்மதித்தார். அவருடைய தோழர்களாகிய, திரு. ஆர். சீனிவாசன், திரு. முனிசாமிபிள்ளை, திரு. சிவராஜ், திரு. சாமி சகஜானந்தம் முதலானவர்களும் மௌனம் சாதித்து விட்டனர்.

இவர்களை ஏமாற்ற, அதாவது இவர்கள் தனித்தொகுதியை விட்டுக்கொடுக்கச் சம்மதிக்க வைக்கப்பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. அதில் ஒன்றுதான் கோயில் பிரவேசம். குருவாயூர் சத்தியாக்கிரக விஷயம் ஒரு வருஷமாகச் சந்தி சிரித்துக் கிடந்தது; நாசிக் சத்தியாக்கிரக விஷயம் இரண்டு வருஷமாகச் சந்தி சிரித்துக்கிடந்தது; காங்கிரஸ்காரர்களுடைய அயோக்கியத்தனங்களையும், பார்ப்பனர்களுடைய அயோக்கியத்தனங்களையும், சுயமரியாதைக்காரர்கள் ஏழுவருஷங்களாகச் சந்தி சிரிக்கச்செய்து வருகிறார்கள். இவற்றையெல்லாம், ஒரு பார்ப்பானாவது லட்சியம் பண்ணவில்லை; ஒரு காங்கிரஸ்காரனாவது நினைத்துப் பார்க்கவில்லை; தீண்டாமை விஷயத்தில் கொஞ்சங்கூட கவனம் செலுத்தாமல் இருந்தார்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்தில் தீண்டாதார்க்கு தனித்தேர்தல் தொகுதி ஏற்பட்டவுடன் இவர்கள் விழித்துக்கொண்டார்கள். தீண்டாதார்க்கு அன்பு காட்டுவது போல ஆரவாரம்பண்ண ஆரம்பித்தார்கள். இதற்குத்தான் காந்தியின் உண்ணாவிரதமும் துணை செய்தது. ஆகவே தீண்டாதார் தலைவர்களும், கொஞ்சம் ஏமாந்தார்கள்; இந்துக்கள் தங்களுக்குச் சம உரிமை கொடுத்துவிடப்போவதாக நினைத்தார்கள். அதனால் அவர்கள் தனித்தொகுதியை விட்டுக்கொடுப்பதில் அவ்வளவு அதிக பிடிவாதம் செய்யவில்லை.

இந்த ஆலயப்பிரவேச விஷயமும் எப்படியிருக்கிறது என்று பார்ப்போம். நமக்கு ஆலயப்பிரவேசந் தான் எல்லாவற்றையும்விட அவசியமானது என்று தோன்றவில்லை. அது சமவுரிமைக்காக வேண்டும்; பக்திக்காக வேண்டுவதில்லை; பக்தியென்பது முட்டாள்தனம்; ஒன்றைக் குருட்டுத்தனமாக நம்பி அதையே நினைப்பது, வணங்குவது என்பது பக்தியானால், அது முட்டாள்தனந்தானே. தன் மனத்தால் ஆராய்ந்து உண்மையென்று கண்டுபிடிக்காத எதை நம்புவதும் முட்டாள் தனந்தான். ஆகையால் தாழ்த்தப்பட்டோர்க்கு இருக்கிற முட்டாள் தனமே போதும்; இன்னும் இந்த முட்டாள் தனம் வேறே வேண்டாம்.

போகட்டும் இந்த ஆலயப்பிரவேசமாவது, நடந்ததா? காந்தியின் உண்ணாவிரதத்திற்குப் பின் எவ்வளவு நடந்தது? வடநாட்டில் என்னென்னவோ நடப்பதாகப்பத்திரிகைகளில் வந்துகொண்டிருந்தன: அதுவும் இப்பொழுது குறைந்துவிட்டது. தென்னாட்டிலோ ஒருகோயிலும் திறக்கப்படவில்லை. திரு. ராஜகோபாலாச்சாரியாரும், திரு. ராஜேந்திரப்பிரசாத்தும், தென்னாடு முழுதும் சுற்றினார்கள்; கோயில் பிரவேசம்பற்றிப் பிரசாரம் பண்ணினார்கள், என்னபலன்? ஒன்றுமில்லை; காங்கிரஸ் விளம்பரப்படுத்தப்பட்டது. கோயில் பிரவேசப்பிரசாரம் என்று பத்திரிகைகளில் வெளிவந்தது. இதைத்தவிர வேறுஒன்றுமில்லை.

இதற்கு மாறாகஇப்பொழுதுவைதிகர்கள்ஒன்றாகத்திரண்டுவருகிறார்கள். கோயில் பிரவேச சத்தியாக்கிரகம் நடக்குமானால் எதிர்சத்தியாக்கிரகம் பண்ணப்போகிறார்களாம். யார்தெரியுமா? இந்த உச்சிக்குடுமி வைதீகர்கள்;தொப்பைவயிற்றுவைதீகர்கள், இந்த மூளைமழுங்கிய முண்டங்கள், என்ன ஆனாலும் கோயில்களின் மாமூல் வழக்கத்தை மாற்றக்கூடாது, மாற்றினால் கோயில்களின் தெய்வீகம் போய்விடும், அவ்வாறுசெய்வது பழக்கத்திற்கு விரோதம்: வழக்கத்திற்கு விரோதம்; சாஸ்திரங்களுக்கு விரோதம்; ஆகமங்களுக்கு விரோதம்; காலஞ்சென்றவர்களின் கருத்துகளுக்கு விரோதம்; என்று வைதிகர்கள் கூச்சலிட ஆரம்பித்து விட்டார்கள்.

முன்னே, சீரங்கத்து ஐயங்கார்கள் கோயில் பிரவேசத்தை எதிர்த்தார்கள்; திரு ராஜகோபாலாச்சாரியாரின் எதிரிலேயே எதிர்த்து வாதமிட்டார்கள்; கோயில் பிரவேசத்தை எதிர்க்கிறோம். அதற்கு சாஸ்திரம் அனுமதிக்கவில்லை; கோயில் பிரவேசத்துக்கு எதிராக நாங்களும் உண்ணா விரதமிருப்போம் என்று அந்த ஐயங்கார்கள் கூறினார்கள்; ஆச்சாரியார் எவ்வளவோ நியாயங்களை அவர்களுக்குக் கூறினார்; அவர்கள் சம்மதிக்கவில்லை.

பிறகு கும்பகோணத்தில் பார்ப்பனர் கூடினார்கள்; அவர்கள் எல்லாம் பண்டிதர்கள்; சமஸ்கிருத பண்டிதர்கள்; பி. ஏ. பண்டிதர்கள் எம். ஏ பண்டிதர்கள்; திவான் பகதூர் பண்டிதர்கள், ராவ்பகதூர் பண்டிதர்கள் கூடினார்கள்; ஆலயப்பிரவேசத்தை எதிர்த்தார்கள்; அவர்கள், 'தீண்டாதார் கோயில் பிரவேசம் செய்யஆரம்பித்தால்' கோயில் வாசலில் படுத்துக்கொள்ளுவார்களாம்; சத்தியாக்கிரகம்பண்ணுவார்களாம்;உண்ணாவிரதமிருப்பார்களாம்; அவர்கள் தொந்திவயிற்றின்மேல் ஏறி மிதித்துக்கொண்டுதான் கோயிலுக்குள்ளே போகவேண்டுமாம்; இவ்வாறு அவர்கள் கூட்டத்தில் தீர்மானம் பண்ணியிருக்கின்றார்கள்.

இந்தச்சோற்றுப்பிண்டங்கள்இந்த மாதிரி சத்தியாக்கிரகம் செய்ய முன்வருமா? தீண்டாதார் கிட்டவந்தாலே அவர்கள் ஒதுங்கி ஓடுவார்களே, இப்பொழுது அவர்கள் அடிவயிற்றில் கால் வைத்து மிதிக்கவரும்பொழுது இவர்கள் துணிந்து படுத்திருப்பார்களா? அல்லது எழுந்து ஓடிவிடுவார்களா? என்பதுதான் நான் சந்தேகப்படுகின்றேன்.

உண்மையாக இவர்கள் சத்தியாக்கிரகம் பண்ண முன்வருவார்களானால் அதில் நமக்கொருசாதகமுண்டு. அந்த வைதீகர்களுடைய சாஸ்திரப்

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

கொழும்பில் ஈ. வெ. இராமசாமி.

பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவு.

23—10—32-ந்தேதி காலை 9-மணியளவில் மருதானை எல்பின்ஸ்டோன் காட்சி சாலையில் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கு ஒருவரவேற்புக்கூட்டம் நிகழ்ந்தது. அத்தருணம் திரு. சி. கே. குஞ்சிராமன் பி. ஏ. தலைமைவகித்தார். மலையாளி சுயாபிமானிச்சங்கத்தாராலும், கொழும்பு சுயமரியாதைச்சங்கத்தாராலும் வரவேற்புப்பத்திரங்கள் படிக்கப்பட்டன. தலைவர் கட்கும் பெரியாரவர்கட்கும் மாலை சூட்டப்பட்டபின் மேற்படி சங்கப் பிரதிநிதிகள் பெரியாரின் தொண்டினைப்புகழ்ந்து சில வாழ்த்துரை கூறினர். பின்னர் திரு. இராமசாமிப்பெரியார் சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன் சாரம் வருமாறு:—

தமிழ் நாட்டில் நான் செய்துள்ள சிறிய தொண்டை முன்னிட்டும் எமது மேல் நாட்டுப் பிரயாணத்தை முன்னிட்டும் எம்மை உபசரிக்கும் நோக்கமாகச் செய்த வந்தனோபசாரங்களுக்கு நான் எனது உண்மையான நன்றியறிதலைச் செலுத்துகிறேன். நீங்கள் என்னை அதிகம் புகழ்ந்துவிட்டீர்கள். இருந்தும் எனது கொள்கையை நீங்கள் பூரணமாக ஒப்புக்கொள்ளுகிறீர்கள் என்று இதனால் எனக்குத் தோன்றுகிறது.

இன்று உலகத்தில் விடுதலையின் பேரால், சுதந்தரத்தின் பேரால் எவ்வளவு அக்கிரமங்கள் நடக்கின்றன. மதாபிமானம் தேசாபிமானம், கடவுளபிமானம் என்ற பேரால் எத்தனைபேர் வயிறு பிழைக்கின்றனர். லக்ஷக்கணக்கான நமது சகோதரர், உடன் பிறந்தார், ஊணுடையின்றிக் கஷ்டப்பட்டுச் சாகின்ற இந்நாட்களில் அவர்களுடைய இன்னல்களை நீக்க வழிதேடுவதைவிட்டுக்கடவுளைப்பற்றிப்பேசி என்ன பயன்.

நாம் ஆலோசனைக்காரர். அதுவே நமது கொள்கை; அதுவே சுயமரியாதைக் கட்சியின் அடிப்படையான கொள்கை. நமக்குத் தோன்றுகிற எண்ணங்களை ஆலோசித்து அலசிப்பார்க்க வேண்டும். அதற்குப்பயப்படக்கூடாது. எனக்குக் கடவுளைப்பற்றியே கவலையில்லை. உலகத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அதுபோல் கடவுளும் ஒருவர் இருக்கட்டும். அதைப்பற்றி என்ன விசாரம்? ஆனால், நாள் முழுதும் பாடுபட்டும், வேலைசெய்தும் குடிக்கக்கஞ்சிக்கு வழியில்லாது அலையும் நம் சகோதரர்களைத் திரும்பிப்பார் என்றால் நமது மதப்பிரசாரகர்கள் கடவுளைப்பார் என்கின்றார்கள்.

மக்கள் கஷ்டத்தினின்றும் விடுதலையடைய வேண்டும். இதற்குச்சம்மதமான கடவுள் இருக்கட்டும் மற்றக் கடவுள்கள் வேண்டாம். இவ்வளவுதான் நாம் சொல்வது.

மக்கள் கஷ்டங்களை நிவர்த்தி பண்ணமுடியாத தேசாபிமானம் வேண்டாம். தேசாபிமானம் நாளைக்கு; இன்றைக்கு வயிற்றுச் சோற்றுக்கு.

விஷயங்களைப் பரிசோதனை செய்து பாருங்கள். பார்த்து அதற்கேற்றவாறு நடவுங்கள். உள்ளதை உள்ளவாறே நோக்குங்கள்.

நான்மனிதன். என் அறிவைக் கொண்டு விஷயங்களைத்தேடி இம்முடிவுக்கு வந்தேன். ஒன்றையும் வெறுக்க வேண்டாம். ஒன்றையும் மறுக்கவும் வேண்டாம். அவர்சொல்லி விட்டார், இவர் சொல்லி விட்டார் என்று ஒன்றையுஞ் செய்யாதேயுங்கள். இன்னொருவனுக்கு அடிமையாய் உங்கள் மனச்சாட்சியை விற்றுவிட வேண்டாம். எதையும் அலசிப் பாருங்கள். ஆராயுங்கள். எண்ணங்களை அடக்கி ஆண்டகாலம் மலையேறி விட்டது. சுய அறிவுக்கு மதிப்புக்கொடுக்க வேண்டிய காலம் இது.

நாம் எண்ண வேண்டியது, ஆராய வேண்டியதெல்லாம் முன்னேயே எமது ஆன்றோரால் ஆய்விட்டது என்று நீங்கள் கொள்ள வேண்டாம். நான் சொல்லுவது முற்றும் சரியென்றும் நீங்கள் கொள்ளவேண்டாம். எதையும் ஆராய்ந்து உண்மை தேறிக்கொள்ளுங்கள்,

எனக்கு மதாபிமானம் இல்லையென்று நீங்கள் கருதவேண்டாம். 25 வருடகாலமாக நான் ஒரு கோவிலில் தர்மகர்த்தாவாகவிருந்து, அக்கோவிலின் கிரமங்களையெல்லாம் ஒழுங்காக நடத்தி வந்தேன். எனக்கு தேசாபிமானம் இல்லையென்றும் நீங்கள் சொல்ல வேண்டாம். 1 தடவைக்கு 3, 4 தடவை தேசிய விஷயமாக ஜெயிலுக்குச் சென்றேன். ஆனால் இந்த அபிமானமெல்லாம் நம் ஏழைச் சகோதரருக்கு விமோசனம் கொண்டுவராது. ஆதலால் தான் அபிமானமொன்றும் நமக்கு வேண்டாம். மனுஷாபிமானமே வேண்டுமென்று ஜனங்களுக்கு நான் எனக்குத்தோன்றிய வரை போதிக்கத்தலைப்பட்டேன். சோம்பேறி ஞானமும் மதாபிமானமும் பசிகொண்ட மகனுக்கு அவன் பசியைத்தீர்க்குமா? எண்ணத்துக்குச் சுதந்திரம் கொடுங்கள். மனுஷாபிமானத்தையும் சுயமரியாதையையும் காப்பாற்றுங்கள். ஏழைகளின் கஷ்டத்திற்கு நிவாரணந்தேடுங்கள். என்று பேசினார். பின்னர் தலைவரது முடிவுரையுடனும், வந்தனோபசாரத்துடனும் கூட்டம் முடிந்தது.

கால்பேஸ் மைதானத்தில் பொதுக்கூட்டம்.

கொழும்பு சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவில் 23-ந்தேதி மாலை 5-மணியளவில் கால்பேஸ் மைதானத்தில் டாக்டர் எஸ். முழ்தையா அக்கிராசனத்தின் கீழ் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுமார் பத்தாயிரம் ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். அவ்வமயம் சுயமரியாதை இயக்கத்தலைவர் திரு. ஈ. வெ. இராமசாமி நிகழ்த்தின சொற்பொழிவின் சாராம்சமாவது:—

“நான் சாதாரண மனிதரில் ஒருவராக வாழ்ந்து வருகிறேன். யாவரும் என் அபிப்பிராயப்படி நடக்கவேண்டுமென்று திரு. சாரநாதன் கூறினார். அது என் கொள்கைக்கு முற்றிலும் மாறானது நீங்கள் கேட்டு நீங்களே சிந்தித்து நன்மையானதைச் செய்யவேண்டுமேயல்லாமல் ஒருவர் கூறுகிறபடி செய்யக்கூடாது. மனிதர்கள் சுய அறிவில் நம்பிக்கை வைக்கவேண்டும் விஷயங்களை நன்றாய் அலசிப்பார்க்கவேண்டும். 100-க்கு 99-பேர் ஒப்புக்கொண்டாலும் நீங்கள் அலசிப்பார்த்தே அறியவேண்டும். உலகத்திலுள்ள சகல தேசங்களிலும் தலைவர்களின் கட்டளைப்படி நடந்தவர்கள் கஷ்டத்திலாழ்ந்து வருகிறார்கள். நடு நிலைமையிலிருந்து விஷயங்களை கிரகிக்கவேண்டும். என்னில் கடவுளிருக்கிறாரென்று நான் கூறவில்லை. நான் கூறும் விஷயங்களை ஆலோசித்துப் பாருங்கள். சகாயத்தைப்பெறுவதற்காகவோ, வேறு சுயநலம் காரணமாகவோ நான் இங்கு வந்திருக்கவில்லை.

நாட்டிலே மக்களிடை பல நிலைமைகளைக் காண்கிறோம். ஒரு கூட்டத்தார் கஷ்டப்படுகிறார்கள், ஒரு கூட்டத்தார் இன்பமுற்று சுக போகங்களை அனுபவித்து வருகிறார்கள். உலகப்பரப்பில் இந்த வித்தியாசமிருக்கிறது.

தேசம், மதம், ஜாதி, பாஷை முதலானவற்றின் பேரால் சரித்திர கால முதல் மக்கள் கஷ்டமடைந்து வருகிறார்கள். அவதார புருஷர்களும், தலைவர்களும் கூறின விஷயங்களை அவர்கள் பின்பற்றி வந்தார்கள். ஆதியில் மனிதர் ஒழிக்க விரும்பின காரியங்கள் இன்றுவரை ஒழிக்கப்படவில்லை. அவதார காலங்களிலும் அன்னியராட்சியில்லாத காலங்களிலும் இதே கஷ்டம் நிலவி வந்தது. அதை மாற்றும் காரணத்தை மனிதர் உணரவில்லை. ஆதி முதல் நாம் எடுத்துக்கொண்ட நோக்கம் தீர்ந்தபாடில்லை. ஆகையால் புதிய முறைகளைக் கண்டு பிடிக்க நடு நிலைமை வகித்துச் சிந்திக்கவேண்டும்.

நம்முடைய நாட்டில் பறையனென்றும் பார்ப்பானென்றும், நிழல்படக் கூடாதென்றும் ஒரு

தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க.

குடி அரசு.

ஈரோடு 1932அக்டோபர்மீ 30-உ

கோயில் பிரவேச மசோதா.

—:0:—

அடுத்து வரப்போகும் சென்னைச்சட்டசபைக் கூட்டத்தில், மாஜி மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்களால், சட்டமாக்கும் பொருட்டு ஆலயப்பிரவேச மசோதா ஒன்று கொண்டுவரப்போவதாக அறிகின்றோம். டாக்டர் சுப்பராயன் அவர்கள், சமூக சீர்திருத்த விஷயத்தில், உண்மையான பற்றும், ஆர்வமும், செய்கையளவில் நடத்திக் காட்டும் குணமும் உடையவர் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே இப்பொழுது அவர் கொண்டுவரப்போகும் ஆலயப்பிரவேச மசோதாவைக்கொண்டு, அவர், வெறும் புகழுக்காகவோ, ஏமாற்றலுக்காகவோ இக்காரியத்தைச் செய்ய முன்வந்திருக்கிறார் என்று யாரும் கூற முடியாது. அவர் எல்லாச் சமூகத்தின்பாலும் கொண்டிருக்கும், உண்மையான சமத்துவ எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டே, தாழ்த்தப்பட்டவர்களுக்கும் கோயில்களில் சமவுரிமை வழங்கவேண்டும் என்னும் அந்தரங்க எண்ணத்துடனேயே இம்மசோதாவைக் கொண்டுவரப்போகிறார் என்று ஐயமறக்கூறுவோம்.

ஆனால் இம்மசோதா, சென்னைச் சட்டசபையில், சட்டமாக நிறைவேறுமா? நிறைவேறாதா? என்பதைப்பற்றி இப்பொழுது நாம் ஒன்றும் துணிந்து கூறுவதற்கில்லை. ஆனால் அரசாங்கத்தார், இம்மசோதாவுக்கு ஆதரவளிக்காவிட்டாலுங்கூட, மனம் வைத்தால், சென்னைச் சட்டசபை அரசாங்கத்தின் தயவில்லாமலே, இம்மசோதாவைச் சட்டமாக்கிவிட முடியும். எப்படியெனில், இப்பொழுது சென்னைச் சட்டசபையில் அதிகாரத்தில் இருக்கும் கட்சியும், மெஜாரிட்டியாகயிருக்கும் கட்சியும் ஜஸ்டிஸ்கட்சியாகும். இப்பொழுது ஆலயப்பிரவேச மசோதாவைக்கொண்டு வரப்போகும், திரு. சுப்பராயன் அவர்கள் எதிர்க்கட்சியின் தலைவராவர். ஆகவே திரு. சுப்பராயன் அவர்களின் மசோதாவை அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் ஆதரிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. சட்டசபையின் மெஜாரிட்டிக்கட்சியினரான ஜஸ்டிஸ் கட்சியினரும் இம்மசோதாவை ஆதரிப்பார்களானால், அது சட்டமாகிவிடுமென்பதற்குச் சந்தேகமில்லை.

ஜஸ்டிஸ் கட்சியினரோ, சமூகச் சீர்திருத்தக் கொள்கையையே அடிப்படை நோக்கமாகக்கொண்டவர்கள். அவர்கள் பல ஆண்டுகளாக எல்லா வகுப்பினர்களுக்கும் ஆலயங்களில் சமவுரிமை இருக்கவேண்டும் என்னும் விஷயத்தை ஆதரித்து வருபவர்கள். ஆகையால், அவர்கள், தமது எதிர்க்கட்சித் தலைவரால், கொண்டுவரப்படும் மசோதா என்ற அற்பமான காரணத்தை மாத்திரம் கருதி, இந்த நல்ல மசோதாவை எதிர்க்கமாட்டார்கள் என்றே நாம் நிச்சயமாக நம்புகின்றோம். ஒரு சமயம் ஜஸ்டிஸ் கட்சியினர், திரு. சுப்பராயன் அவர்களுடைய கட்சிக்கும், தமது கட்சிக்குமுள்ள அரசியல் அபிப்பிராயங்களை முன்னிட்டும், "எதிர்க்கட்சியினர் எந்த நல்ல மசோதாவைக் கொண்டு வந்தாலும் அதை எதிர்ப்பதே நமது கடமை" என்னும் அரசியல் வஞ்சந்தீர்க்கும் கொள்கையை முன்னிட்டும், இம்மசோதாவை ஆதரிக்காமல் நடுநிலைமை வகித்தாலும், அல்லது எதிர்த்தாலும், அது மிகவும் வெறுக்கத் தகுந்த செய்கையாகுமென்றே நாம் கூறி எச்சரிக்கின்றோம்.

இப்பொழுது வரப்போகும் ஆலயப்பிரவேச மசோதா சட்டமாகுமானால், அதன்மூலம், எல்லாவகுப்பைச்சேர்ந்த இந்துக்களும், இந்துமதக்கோயில்களில் தடையில்லாமல் செல்லுவதற்கு உரிமையுண்டாகுமென்பது நிச்சயம். ஆதலால், இத்தகைய மசோதா ஒன்று சென்னைச்சட்டசபையில் வரப்போகிறது என்று தெரிந்த உடனேயே, நமது நாட்டு வைதிகர்கள் அதைக்கண்டனம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இந்த மசோதாவைச்சட்டசபையில் கொண்டுவர அனுமதியளிக்கக்கூடாது என்று, மேன்மை தங்கிய வைசிராய், கவர்னர் முதலியவர்களுக்குத் தந்திகளும் தீர்மானங்களும் அனுப்பியிருக்கிறார்கள். இன்னும் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் பல பொதுக்கூட்டங்கள் என்னும் பெயரால் வைதிகர்கள் இம்மசோதாவைக்கண்டித்துக்கொண்டு வருகிறார்கள். தீண்டாதார்களுக்கு ஆலயப்பிரவேசம் அளிப்பது, சாஸ்திரங்களுக்கு விரோதம்; மதத்திற்கு விரோதம்; பழக்க வழக்கங்களுக்கு விரோதம்; ஆகையால் தீண்டாதார்க்குக்கோயில் பிரவேசம் அளிக்கும்படியான சட்டஞ் செய்யக்கூடாது என்று கூச்சலிடுகின்றனர். இக்கூச்சலைச்சட்டசபை உறுப்பினர்களும், அரசாங்கத்தார்களும் ஒருசிறிதும் லட்சியம் பண்ணாமல், டாக்டர் சுப்பராயன் அவர்களின் மசோதாவைச்சிறந்த திருத்தங்களுடன் சட்டமாகச்செய்ய ஆதரவளிக்க வேண்டுகிறோம். வெகுகாலமாக நமது நாட்டில் கோயில்பிரவேசத்திற்குத்தடைசெய்து கொண்டிருந்த சமூகம் பார்ப்பன சமூகம் ஒன்றேயாகும். இன்று அச்சமூகத்திலும், பகுத்தறிவும் மூளையற்ற— சாத்திரப்பித்தும், சுயநலப்பித்தும் கொண்ட வைதீகர்களே கோயில் பிரவேசத்திற்குத்தடை கூறிக் கொண்டிருக்கின்றவர்கள். ஆதலால், மற்ற சமூகங்களின் ஜனத்தொகையை விட, மிகக் குறைந்த ஜனத்தொகையையுடைய ஒரு சமூகத்தில் உள்ள, சில எண்ணிக்கையையுடைய வைதீகர்களின் கூச்சலுக்கோ, தடைக்கோ, பயந்து சென்னைச்சட்டசபையானது இம்மசோதாவை நிராகரிக்குமாயின் அதைவிட பேடித்தன்மையான செயல்வேறொன்றும் இருக்கமுடியாது என்பதை முன்னெச்சரிக்கையாகவே கூறிவிட விரும்புகிறோம்.

இச்சமயம், "தீண்டாதார்களின் ஆலயப்பிரவேசத்திற்குப் பொது ஜனங்கள் விரோதமாக இருக்கிறார்கள்" என்னும் சாக்குச் சொல்ல முடியாது. இந்தியா முழுதும், சுதேசசமஸ்தானங்களிலும் கூட, தீண்டாதார்க்கு ஆலயப்பிரவேச உரிமையும், மற்றும் இந்துக்களுடன் சமஉரிமையும் இருக்கவேண்டும் என்னும் கொள்கையை ஆதரித்து வருகிறார்கள். பொது ஜனங்களின் அபிப்பிராயம் அவர்கள் சமத்துவ உரிமைக்குச் சாதகமாகவே திரும்பியிருக்கிறது என்பதை நாட்டில் ஒவ்வொரு நாளும் நடந்துகொண்டு வரும் நிகழ்ச்சிகளைக்காண்போர் தெரிந்து கொள்ளலாம். ஆதலால் அரசாங்கத்தாரும், சட்ட சபை உறுப்பினர்களும் இச்சந்தர்ப்பத்தைக்கைநழுவ விடாமலிருக்க வேண்டும். இச்சந்தர்ப்பத்தைக்கை நழுவவிட்டு விடுவார்களானால், அவர்கள் பொதுஜன அபிப்பிராயத்தை அலட்சியம் செய்தவர்களாகவும், பொது ஜன நம்பிக்கைக்குச்சிறிதும் தகுதியில்லாதவர்களாகவும் ஆகிவிடுவார்களென்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

டாக்டர் சுப்பராயன் கட்சியினரும், ஜஸ்டிஸ் கட்சியினரும், அரசாங்கத்தாரும், உண்மையிலேயே எல்லாச்சமூகங்களும் ஒற்றுமையடைய வேண்டும் என நினைப்பார்களாயின் "இந்து மத ஆலயங்களில், எல்லோரும் அதாவது எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் செல்லலாம்" என்பதாகச் சட்டம் செய்யவேண்டும்.

இப்பொழுது திரு. சுப்பராயன் அவர்களால் கொண்டு வரப்போகும் மசோதாவில் "இந்துக்களாக இருக்கும் எல்லா வகுப்பினரும் மட்டும்தான் இந்து மத ஆலயங்களுக்குள் செல்ல உரிமை இருக்க வேண்டும் என்று கோருவதாகத்தெரிகிறது. ஆகையினால் இதை நாம் மேலே கூறியவாறு திருத்தி அமைக்க முயல வேண்டுகிறோம். இவ்வாறு செய்வது எவ்வகையிலும் குற்றமாகாது. இன்று முஸ்லிம்களுடைய மசூதிகளில் முஸ்லிம்கள் அல்லாதவர்களும் சென்று தொழுவதற்கு உரிமையுண்டு. முஸ்லிம்கள் அந்நிய மதத்தினரைத் தங்கள் மசூதிக்குள் வரக்கூடாது என்று தடுப்பதாகத்தெரியவில்லை. அதுபோலவே கிறிஸ்துவர்களுடைய கோயில்களிலும் யாரும் சென்று வணங்கலாம்; அங்கு நடக்கும் "ஜபத்தில்" கலந்து கொள்ளலாம் கிறிஸ்துவர்களும், அந்நிய மதத்தினர் தங்கள் கோயில்களுக்குள் வரக்கூடாது என்று தடை செய்வதில்லை. இதுபோலவே புத்தர் கோயில்களிலும், எந்த மதத்தினர்களும் தாராளமாகச் செல்லலாம். இம்மாதிரியே இந்துமதக் கோயில்களுக்குள்ளும் எல்லா மதத்தினரும், ஜாதிவித்தியாசம் இல்லாமல் செல்லுவதற்கு உரிமையளிப்பதால் என்ன முழுகிப் போய்விடும்? என்று கேட்கிறோம். இவ்வாறு செய்வதனால் பல மதத்தினர்க்குள்ளும் சமத்துவம் உண்டாவதற்கும் வழியாகும் ஆகையால் இம்முறையில் மசோதாவைத்திருத்தியமைத்து நிறைவேற்றச் சென்னைச்சட்டசபை தைரியமாக முன்வருமா? என்றுதான் நாம் கேட்கிறோம்.

சென்னைச்சட்ட சபையில் இத்தகைய மசோதா சட்டமாக நிறைவேறுமானால், இது இந்தியாவுக்கே ஒரு வழிகாட்டியாக இருக்கும். சென்னைச்சட்டசபைக்கும், இப்பொழுது சென்னைச் சட்டசபையிலிருக்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்

கொழும்பில் ஈ. வெ. இராமசாமி.

கடவுளைப்பற்றி நினைக்க முடியா தொழில் முயற்சி.

மேல் நாட்டினர் முற்போக்கு.

பத்திரிகா நிருபருக்கு பதில்.

சுயமரியாதை இயக்கத்தலைவரும், "குடி அரசு" ஆசிரியருமான உயர்திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் 17—10—32 தேதி காலை சுமார் 7 மணிக்கு கொழும்பு துறைமுகத்தில் "ஹருனமாரு" என்ற கப்பலில் வந்திறங்கினர். அவரை வரவேற்கும் பொருட்டு துறைமுகத்தில் திருமதி நாகம்மை, தோழர்களான அ. இராகவன், சி. நடராஜன், சுயமரியாதை இயக்க அன்பர்கள் பலர் கூடியிருந்து வரவேற்றனர். அவர் இன்னும் சில தினங்கள் இங்கு தங்கியிருக்கலாம்.

திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் சிலோன் "டெய்லி நியூஸ்" பத்திரிகைப் பிரதிநிதியொருவருக்குப் பேட்டி கொடுத்துப் பேசியபோது குறிப்பிட்டதாவது:—

"நான் ஓர் நாஸ்திகனல்ல, தாராள எண்ணமுடையோன். நான் ஒரு தேசியவாதியுமல்ல, தேசாபிமானியுமல்ல, ஆனால் தீவிர ஜீவரக்ஷா எண்ணமுடையவன். எனக்கு ஜாதி என்பதோ, ஜாதியென்பதின்பேரால் கற்பிக்கப்படும் உயர்வு தாழ்வுகளோ கிடையாது. அத்தகைய எண்ணத்தையே நான் எதிர்ப்பவன். ஆதரிப்பவனல்ல. தாங்கள் மேல் ஜாதியார், உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு, மனிதரது ஜீவாதாரமான உரிமைகளாகிய தெருவில் நடத்தல், கோவிலுக்குள் செல்லல் முதலியவற்றை மறுத்துக்கொண்டு, ஏனையோர்க்கும் சமத்துவம் வேண்டுமென்று செய்கிற முயற்சியைக் கண்டிக்கிறேன்.

"காலமெல்லாம் பண்டைய பழக்க வழக்கங்களும், மூடக்கொள்கைகளும் நிலைத்தே நிற்கவேண்டுமென்றால் ஒரு பறையன் என்று சொல்லப்படுகின்றவனோ, அல்லது சக்கிலி என்று சொல்லப்படுகின்றவனோமிரு

சிக்கும் என்றென்றும் அழியாத புகழும் உண்டு. இதற்குமாறாக இம்மசோதாவைக் கொலைசெய்து விடுவார்களாயின், இக்கொலைக்குக் காரணமாக இருந்த கட்சியினர்களுக்கும் தனிப்பட்ட உறுப்பினர்களுக்கும் என்றென்றும் அழியாத வசையே உண்டாகும் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

இனி, இவ்வாலயப் பிரவேச விஷயத்தில், நமக்கு இவ்வளவு அக்கரை இருப்பதற்குக்காரணம் என்னவென்பது நம்தோழர்களுக்கெல்லாம் தெரிந்த விஷயமாகும். "எல்லோரும் கோயில்களில் சென்று வணங்கவேண்டும், அங்குதெய்வமிருக்கிறது; அல்லது கடவுளிருக்கிறது" என்னும் நோக்கத்துடன் நாம்கோயில் பிரவேசத்தை ஆதரிக்கவில்லை. கோயில்களும் தேசத்தின் பொதுச்சொத்து என்ற முறையில், வணங்குவதற்கோ, அல்லது வேடிக்கைபார்ப்பதற்கோ, அல்லது சும்மாவோ, அவைகளுக்குள் நுழையக்கூடிய உரிமை தேசமக்கள் அனைவருக்கும் இருக்கவேண்டும் என்னும் எண்ணத்துடனேயே நாம் கோயில் பிரவேசத்தை முழுமனதுடன் ஆதரிக்கின்றோம் இதற்காகச் சட்டஞ்செய்யப்படும் முயற்சியையும் வரவேற்கிறோம் என்பதைத்தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கத்தைவிடக் கேவலமாக நடத்தப்பட்டே வர, எப்படி இந்தியா அவன் தாய் நாடு தான் என்று எண்ணமுடையும்? ஒரு பொது சேவைக்கு அவர்களை நம்மோடு ஒத்துழைக்க எதிர்பார்க்க முடியுமா?

வேலையில்லாத்திண்டாட்டம்.

கஷ்டப்படுகின்ற தொழிலாளிகள் அரசாங்கத்தை நடத்துகின்றவர்களாயிருக்க வேண்டும. ஜனங்களின் நன்மைக்காக, ஜனங்களாலேயே நடத்தப்படுகின்ற அரசாங்கமாயிருத்தல் வேண்டும். இந்தியாவைப்பற்றியுள்ள வறுமையை அகற்றக்கூடிய அரசாங்கமாயிருக்கவேண்டும். பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், ஐக்கிய தேசம், முதலியனவெல்லாம் குடி யரசு நாடுகளாகவே இருக்கின்றன. ஆனால் எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. ரஷ்யா ஒன்றில் மட்டும் வேலையில்லாத்திண்டாட்டமே கிடையாது. ஒரு சில பிச்சைக்காரர்கள் தான் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் வயது சென்றவர்களும், அங்கவீனர்களுமே. அவர்களை அரசாங்கம் போஷிக்கிறது. உண்மையில் அது ஒரு புதிய உலகம். அதுபோல் முன்னொரு போதும், எந்நாட்டிலும் சீர்திலத்தம் நடந்தேறியதேயில்லை. அந்நாடு தொழிலாளர் மயமாகவே இருக்கிறது. தோட்டி முதல் தொண்டமான் ஈறாக எல்லோரும் அரசாங்கத்தொழிலாளராகவே கருதப்படுகின்றனர். அங்கு எல்லா மனிதரும் சமமாகவே கருதப்படுகின்றனர். மக்களுக்குள் உயர்வு தாழ்வு என்பதே கிடையாது. வியாபாரம், தொழில், வர்த்தகம், கல்வி முதலிய சமூக அபிவிருத்திக்கான தொழில்களெல்லாம் அரசாங்கப் பொறுப்பிலேயே நடைபெற்று வருகின்றன. விவசாயம் ஐக்கிய முறையில் அரசாங்கப்பொறுப்பில் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

"அங்கு சமயமென்பது ஒன்றுமே கிடையாது. ஜன சமூக நன்மையே சமயம். அதுவே சன்மார்க்கம். கிறிஸ்துவ கோயில்களுண்டு. அதற்கு அரசாங்கத்தார் எவ்வித பண உதவியும் செய்வது கிடையாது. அவர்களுக்கு கடவுளைப்பற்றியோ, மதத்தைப்பற்றியோ கவலையோ, விசாரமோ, கிடையாது.

"குற்றம் செய்தவர்களை அரசாங்கம் ஒரு நவீன முறையில் தண்டிக்கிறது. அவர்களுக்கு சகல சௌகரியங்களும் செய்து கொடுக்கப்பட்டாலும், அவர்கள் சம்பளத்தில் ஒரு பாகம் அபராதத்தொகையாக பறிமுதல் செய்யப்படுகிறது. பல முறை குற்றம் செய்தவர்களை சுகாதார நிலயத்திற்கனுப்பி அங்கு அவர்களது மனோ நிலைமாறத்தக்க சிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

"பாடசாலைகள் மூலமாயும், சினிமாக்கள் மூலமாயும், இதுவரை கற்றிராத பாமர மக்களுக்கும் தொழிற் முயற்சியை அஸ்திவாரமாகக்கொண்ட கல்வி கற்பிக்கப்படுகிறது. ஒரு மதத்தையும் பின்பற்றாத அரசாங்கம், மத எதிர்ப்புசங்கத்திற்கு யோதிய உதவியளித்து வருகிறது.

நான் இத்தேசத்தைப்பார்வையிடச் சென்றதின் நோக்கமெல்லாம், அங்குள்ள நிலைமைகளைச் சரிவர அறியவும், அத்தேசத்தைப்பற்றிப்பெருமிதப்படுத்திக் கூறும்கதைகள் உண்மையாவென்று அறியவுமே யாகும். அரசாங்கம் தாம் தேசத்தை புனருத்தாரணம் செய்யவேண்டுமென்பதிலேயே தீவிர கவனம் செலுத்துவதால் கடவுளைப்பற்றியோ மதத்தைப்பற்றியோ நினைப்பதற்கு அவர்களுக்கு நேரமில்லை"

"எகிப்து நாட்டில் பர்தா (கோஷா) முறை அநேகமாக அழிந்துவிட்டதென்றே சொல்லலாம். சில வயோதிகக் கிழவிகள் மட்டும் அதை விடவில்லை. எகிப்திய பெண்கள் ஆங்கில மாதரைப்போலவே ஆடை அணிந்து கொள்ளுகிறார்கள். துருக்கி தேசத்தில் அதிதீவிரமான மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. சமூக முன்னேற்றத்தில் துருக்கி மாதர் அதிக பிரயத்தனம் எடுத்து வருகிறார்கள். சமீபத்தில் ஒரு துருக்கி மாது போலீஸ் சூப்பரெண்டாக நியமனம்பெற்றிருக்கிறார்.

சென்னைமாகாண கருணீகர் இளைஞர் சங்கம்.

கருணீகர் இளைஞர் சங்கத்தின் 3வது கூட்டம் 16-10-32 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு, 2-நெம்பர் மாரிமுத்துச்சந்து, திரு. வீராசாமி அவர்கள் வீட்டில் கூடியது. திரு. ஆர். குமாரசாமி தலைமை வகித்தார். திரு. வி. எம். கடிகாசலம் 'பக்தி'' என்றபெருள் பற்றி ஒருசொற்பொழிவு நிகழ்தினர். பல அங்கத்தினர்கள் பின்பற்றி பேசினர். திரு. வீராசாமி அவர்கள் பேசுகையில், 'கடவுள்'ஒருவர் உண்டு என்று நினைத்துக்கொள்வது நலமென்றும், கடவுள் பெயரால் செய்யப்படும் மூடப்பழங்கள் அதிவிரைவில்தொலையவேண்டும் என்றும், கடவுளுக்குக் காசு செலவழிப்பதுபக்தியாகாதென்றும், அவ்வாறு செலவழித்தால் நாடு பொருளாதார நிலையில் நாளுக்குநாள் க்ஷீணதசையடைந்து விடுமென்றும், கருணீக இளைஞர்கள் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை மேற்கோள்ள வேண்டுமென்றும் பேசினார். பிறகு திரு. தியாகராஜன் திரு. கன்னிவேலு என்ற இளைஞர்கள் கடவுளிடம் காட்டும் மூடபக்தியை அதிதீவிர உணர்ச்சியுடன் கண்டித்துப் பேசியதுடன் கருணீகமரபினர்கள். கடவுளுக்காக செலவழிக்கும் பணத்தை ஏழைப்பிள்ளைகள் கல்வி கற்பிக்கச் செய்வது மிகவும் நலமென்றும் பேசினர்.

பின்னர் புருஷோத்தமன்என்பவர் "தற்சமயம் ஏற்பட்டிருக்கும் பூனா ஒப்பந்தத்தை முன்னிட்டு கருணீக மரபினர்கள் தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்றும், கருணீக மரபினர்கள் ஆதிக்கத்திலிருக்கும்' ஆலயங்களில் ஆதித்திராவிடர்களுக்கு உரிமையளிக்க வேண்டும்,, என்றும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். திரு. தியாகராஜன் அத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர். பின்னர் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது. என்று ஒரு நிருபர்எழுதுகிறார்.

சுயநல ஆண்கள் ஆதிக்கம் வேண்டாம்.

கோஷாமுறை ஒழிக.

திருமதி நாஞவதி சொற்பொழிவு.

அகில இந்திய மாதர் சங்கத்தின் சார்பில் அயோத்தியில் சமூகசீர்திருத்தம், கல்வி, இவ்விஷயங்களைப்பற்றி ஆராய அமைக்கப்பெற்றிருக்கும் ஸ்தாபனத்தின் ஆருவது ஆண்டு மகாநாட்டிற்கு மிஸஸ் நாஞவதி தலைமைவகித்துப்பேசியதின் சாரமாவது:—

ஸ்திரீகள் முக்காடு இட்டுக்கொள்ளும் பழக்கத்தை நீக்கவேண்டுமென்ற கிளர்ச்சியைப்பற்றிக் கடந்த பத்தாண்டுகளாய் நான் நன்கு கவனித்துவந்திருக்கின்றேன். ஐக்கியமாகாணத்தின் தலைநகரான லக்ஷ்மணபுரி அரசியற்றுறையில் அதிக விருத்தியடையாவிட்டாலும், சமூகத்துறையில். இந்த அயோத்தியைவிட சற்று அதிகமாகவே முன்னேறியிருக்கிறது. பொதுவாக இம் மாகாணத்தில், ஹிந்து, முஸ்லீம் மாதர்கள் தங்களுடைய கோஷா முறையை நீக்கியதற்காக இம்மகா நாட்டின் சார்பாக நான் அவர்களைப் பாராட்டுகின்றேன். பண்டைய காலத்திலிருந்து தொன்றுதொட்டு வேரூன்றியிருந்த இந்த அர்த்தமற்ற பழக்கத்தை யறவே கைவிட்டதற்காக நான் இம்மாகாணப் பெண்களைப்போற்றுமலிருக்க முடியாது. மகாராட்டிரப் பீஷ்வாக்களின் பழமையான தலைநகரமான பூனெவில் 1926 ம் வருடத்தில் நடந்த மாதர்மகாநாட்டின் விளைவேகாரணமாகஇருக்கிறது. இப்பெருமை அதற்கே உரியதாகும். அம்மகாநாட்டில்தான் முதன் முதலில், முகமூடி அணிந்திருந்த ஓர் மாது தைரியமாக முக்காடில்லாது முன்வந்து கோஷா முறையை நீக்கும் விஷயமாகப்பேசினர். கோஷா முறையைத் தடுப்பதற்கு முதலில் கண்டித்த வரிவரேயாகும்.

எனக்குத் தெரிந்த வரையில், இப்படுதா முறையைப் போக்குவதில் எவ்வித கெடுதியும் நேரிடாதென நினைக்கிறேன். கோஷா முறையை நீக்குவதில் அளவில்லாத நன்மைகளிருக்கின்றன. இப்பழக்கத்தை விட்ட நாடுகள் இப்போது முன்றேற்ற நிலைமையடையடைந்திருப்பது கண்கூடு.

துருக்கி தேசத்தை எடுத்துக்கொள்வோம். அத்தேசத்திலுள்ள பெண்கள் எங்கனம் இக்கொடிய முறையைக் கைவிட்டு சீர்திருத்த முறையைப் பின்பற்றி இருக்கிருர்களென்பதை நாம் யூகித்துக் கவனிக்க வேண்டும். ஐரோப்பாவிலுள்ள துருக்கி தேசத்திலுள்ள மக்களின் கண்கள் திறக்கப்பட்டு விட்டன. வீடுகளில், மிருகங்களைப் போல கல்வி ஞானமின்றி அடைத்து வைக்கப் பட்டிருந்த துருக்கியப் பெண்கள் தற்போது, தங்கள் முகமூடியைக்களைந்தெறிந்துவிட்டு, ஆடவர்களைப்போல, வெளியில் உலாவியும், கல்வியறிவும் பெற்றுவிளங்கி வருகின்றன. நாம் தற்காலம் நெருக்கடியான நிலைமையில் இங்கு வசிக்கின்றோம். நமது, இந்திய நாட்டில் அடிக்கடி மாறுதல்கள் ஏற்படுகின்றன. அரசியலில் மட்டும் மாற்றமில்லை, சமூக விஷயத்திலும், நாளுக்கு நாள் மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

மற்றொரு முக்கியமான விஷயத்தைப் பற்றி நான் சில கூற வேண்டியதாக இருக்கின்றேன். இத்தகைய கூட்டத்தில் எமது ஆழ்ந்த, அபிப்பிராயங்களை எடுத்துக் காட்டுவதிலுள்ள இனிமையைக் காட்டிலும் வேறு ஓரினிமை நான் அனுபவித்ததில்லை. ஆடவர்கள் பல தாரங்களை மணந்துகொளளலாம் என இந்து சாஸ்திரங்களிலும், குரானிலும் கூறப்பட்டிருப்பதைப்பற்றி இங்கு ஆராய்வாம். உங்களுடைய மத சம்பந்தமான மகிமை பொருந்திய நூற்களென்று கூறும் சாஸ்திரங்களைவிட மோசமானது வேறொன்றில்லை என்பது எமது முடிந்த அபிப்பிராயமாகும். மிகப்பிற்போக்கான முறையிலேயே அவைகள் வரையப்பட்டிருக்கின்றன என்று கூறுதல் மிகையாகாது. அவைகள் மனித வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டிய வசதிகளுக்கு அனுகூலமாக அவைகள் எழுதப்படவில்லை என நினைக்கின்றேன். ஒரு மனைவியைக் காட்டிலும், அதிகமாக மணப்பதைக் கூறுபவைகள் எங்ஙனம் மக்களுக்குப் பயன்படும்? ஒரு ஆடவன் தன்னுடைய முதல் மனைவியிருக்கும் சமயத்தில் மற்றொருமனைவியை மணக்கும் பொழுது தன்னுடைய அளவு கடந்த விருப்பத்தினுல் வரிக்கிருன். பலதார மணங்களினுல்பல கொடுமைகளும் சதிகளும் ஏற்படுகின்றன. ஆகையால் இந்தியாவிலுள்ள குடும்பங்களில் இத்தகைய மணங்கள் நடைபெரு வண்ணம் நாம் முயற்சி செய்யவேண்டும்.

பிரசவகாலத்தில் பெண்கள்நிலை.

மற்றொரு விஷயத்தைப்பற்றியும் நானிங்கு குறிப்பிட வேண்டியதாயிருக்கிறது. மாதர்கள் பிரசவ காலத்தில், ஆயிரக்கணக்கான, பெண்களும், குழந்தைகளும் மரணத்திற்காளாகின்றனர். இந்தியாவில் பெண்களுக்கே ஓர் தனிப்பட்ட சாபம் இருக்கிறது போலும்! தற்காலம் பெண்கள், ஆண்களால், நசுக்கப்பட்டிருந்தும், அவர்களுடைய குறைபாடுகளைச் செவிசாய்ப்பவர் யாருமிலர். இந்தியாவிற்கு இது ஓர் வெட்கரமான காரியமாகும். இந்தியாவிலுள்ள பெரும்பாலான மக்கள், தங்களுடைய மனைவி குழந்தைகள் இவர்களுடைய தேக நலத்தைக் கருதாது. அவர்களுடைய கேவல சிற்றின்ப நுகர்ச்சி ஒன்றினையே நாடி பெண்ணுலகத்தைப் பாழ்படுத்தி வருகின்றனர். இத்தகைய சுயநல ஆண்கள் ஏராளமாக இருக்கின்றனர். இந்தியாவிற் பிறந்த துரதிஷ்டப் பெண்களான இவர்கள் தங்களுடைய தேகத்தின் இயற்கை நலத்திற்கு மாருக நடக்க நிர்ப்பந்தப் படுத்தப்பட்டிருக்கின்றனர். இதனுல் தங்களுடைய உயிர்களைத்தத்தஞ் செய்து அகால மரணத்திற்கு ஆளாகின்றனர். ஆண் பெண்கள் அனைவருக்கும் இளம்பிராயத்தில் கல்வியறிவை யூட்ட வேண்டும். சுகாதார முறைகள் அவர்களுக்குப் போதிக்கப்படல் வேண்டும். பகுத்தறிவற்ற புருடர்களுக்குத் தங்களுடைய மனைவிமார்களின் உடலைப் பாதுகாப்பதில் அதிகக் கவலை எடுத்துக்கொள்ளும்படியாக அவர்களுக்கு எடுத்துப் போதிக்கவேண்டும். மனைவியின் மாட்சியையும், தாயின் தன்மையையும் புருடர்கள் நன்கு அறியும்படியாக நாம் அவர்களுக்குத்தகுந்த பாடங் கற்பித்தல்வேண்டும்.

கல்வி.

மேற்குறிப்பிட்ட விஷயங்களனைத்தும் இளைஞர்களுக்குக் கல்விபோதிப்பதிலேயே அடங்கிக்கிடக்கின்றன. தாற்காலம் இந்தியாவில் நமது, சிறுமிகளுக்கும், சிறுவர்களுக்கும் அளிக்கப்படுங் கல்வி சிறந்ததல்ல இவைகள்போதுமானவைகளுமல்ல, யாவற்றைக்காட்டிலும் வீட்டுக்கல்வியும் வீட்டுப்பழக்கமும் தான் அதிக முக்கியமானவைகளாகும். குழந்தைகளுக்குப் பெற்றோர்களால் மதசம்பந்தமான கல்வியை மட்டும் போதிப்பது விசேடமல்ல. சரியாக வாழ்க்கையை நடத்தும் முறையைக் கற்பிப்பதே அத்தியாவசிய மானது. வீட்டில் தான் குழந்தைகளுக்குக் கல்வி உண்மையாக ஆரம்பிக்கிறது. அவர்களுடைய வாழ்க்கை முறைகளைக்கற்றுக் கொள்வதில் வீடுதான் அடிப்படையான பாடசாலையாகும். பெற்றோர்களே அவர்களுக்கு முதல் ஆசிரியர்களாவர் ஆதலின், குழந்தைகளை வீட்டில் செவ்வனே பழக்குதல் வேண்டும். ஓர் ஹிந்து குடும்பத்திலுள்ளவர்கள் பலரும் ஒவ்வொருவருடைய கடமையென உணர்ந்து நடக்க வேண்டும்.

பழய கால இந்து விவாகத்தின் தன்மை போய் அதற்கு பதிலாக சிநேக விவாகம் என்ற எண்ணம் தோன்றியிருக்கிறது. தற்கால விவாகத்தின் நோக்கம் யாதெனில் ஒரு மனைவி தனது கணவனுக்கு உண்மையாயும் நம்பிக்கையாயும் நடந்து கொள்ள வேண்டும்என்றும், தன்னுல் கூடுமானவரை பெண் குணங்களான அநுதாபம் சாதுர்யம் ஆகியவற்றைக் கொண்டு கணவனுக்கு ஒவ்வொரு வழியிலும் ஒத்துழைத்து, தினசரி வாழ்க்கையில் தகுந்தவாறு பங்கெடுத்து துக்கத்திலும் சந்தோஷத்திலும் சரிசமமாக விருக்க வேண்டும். இவ்வித சிநேகித விவாகத்திற்கு மிக்க அவசியமானது தேர்ந்தெடுப்பதில் சுயேச்சையேயாகும்; தற்சமயம் இந்துக்களுக்குள் விதவாவிவாகம் செய்து கொள்ள அநுமதிக்கப்படுகிறது. ஆண்கள் செய்யும் தொழில்களிலும் பெண் சரிசமத்துவம் கேட்கிருர்கள். இவைகள் எல்லாம் பெறும் மாறுதல்களாகும்.

முன்னேற்றம் சாந்தமாகவும் நல்ல வழியிலும் நடைபெற வேண்டுமானுல் இம்மாறுதல்களுக்கு நமது நுண்ணிய ஆராய்ச்சியும், நமது வீடுகளின் விஷயங்களை திருப்திகரமாய் திருத்தியமைத்தலும் வேண்டும். சென்ற காலம் மிகக் கஷ்டமாகவும் துன்பமாகவுமிருந்த போதிலும், அந்த அநுபவம் இனிமேல்வரும் வேலைகளுக்கு மிகுந்த உபயோகமாக விருக்கும். இரண்டு தலைமுறைகளுக்கு முன்னிருந்த பெண்களைவிட தற்காலப் பெண்களாகிய நாம் முன் கூடிய எஜமானிகளாக்கிக் கொள்வதற்கான தேவையையும் கடமையையும் தெரிந்து கொண்டிருக்கிறோம். அவர்களுடைய அறிவை உபயோகிக்கவும், எச்சரிக்கைகளைக் கவனித்து நடக்கவும், நமது உயர்ந்த பலத்தை உபயோகிக்கவும், நம்மிடம் ஒப்புவிக்கப் பட்ட காரியங்களை பாதுகாக்கவும், பெண்களின் உரிமைகளை நிலைநிறுத்தவும் பாடுபடுவோமாக.

[9ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதி துவேஷம் வைத்துவருகிறது. பார்ப்பனரைப் பூதேவரென்றும், உயர்ந்த ஜாதியென்றும் சரித்திர கால முதல் கருதி வருகிருர்கள். காரணம் மனித சமூகபந்ததியில்லாததே உனக்கும்எனக்கும் என்ன வித்தியாசமென்று கேட்டால் மதவிரோதமென்றும் நாஸ்திகமென்றும்கூறப்படுகிறது. இந்த அக்கிரமங்களை அழிக்க முற்படுகிறவன் தேசத்துரோகியென்றும், மதத்துரோகியென்றும் கருதப்படுகிருன். மனுதர்மம் சாஸ்திரங்களையும், வேதங்களையும், ஆதாரமாகக்காட்டி கடவுள் சிருஷ்டி, பகவான் செயல்,

பகவான் வாக்கென்றும், கூறுகிறார்கள். அவற்றைக் குழிதோண்டிப்புதைக்க நீங்கள் தயாராயிருந்தால் மட்டும் வெற்றிபெற்று விளங்கலாம் தேசாபிமானி உயர்வு தாழ்வை ஒப்புக்கொள்வானாகில் அவனுடைய தேசபிமானம் நமக்கு வேண்டாம்.

ஒருவனுக்கு பைத்தியம் பிடித்திருந்தாலொழிய கடவுளையும் தேசத்தலைவர்களையும் குறைகூற முனவரமாட்டான். அவன் உண்மைத் தொண்டின் காரணமாகவே குறை கூறுகிறான். மக்களை ஏமாற்றிப் பிழைத்து வருபவர்கள் தங்கள் நிலமையை பலப்படுத்த பகவான் கட்டளையென்று முடிச்சுப் போட்டு வைத்திருக்கிறார்கள். அக்காலத்தில் மனிதர்கள் சோம்பேறிகளாயிருந்தபடியால் ஆக்ஷேபமின்றி அதற்குக்கட்டுப்பட்டிருந்தார்கள். அடிமைத்தன அஸ்திபாரம் வலுத்தவுடன் ஜனங்கள் பகுத்தறிவால் அலசிப்பார்க்க முன்வந்தார்கள். முன் ஜன்மத்தைப்பற்றி இப்பொழுது நினைப்பாரில்லை. அவர்கள் வேதங்களையும், சாஸ்திரங்களையும் மதத்தோடு சேர்த்துத்தீக்கொழுத்தவும் குழிதோண்டிப் புதைக்கவும் முன்வந்திருக்கிறார்கள். சம உரிமையை ஒப்புக்கொள்ளாதவர்களின் அபாரமான ஆதாரங்கள் குழிதோண்டிப் புதைக்கப்படவேண்டும். ஏழைகள் பட்டினி கிடக்கும்பொழுது ஆஸ்திமான்கள் சுகபோகமாக வாழ்ந்திருக்க முடியாது. பொறுமை அடுத்த ஜென்மம், மோட்சம் முதலான போதனைகளேல்லாம் போது. இறந்த பிறகுதான் பொறுமையின் பலன் கிடைக்கும். பொறுமையைப் போதிக்கும் துரைகள் வேண்டாம். ஒற்றுமை ஏற்பட்டால் என்ன நேரிடுமோவென்று பயந்தவர்கள் தேசாபிமானம் மதாபிமானமென்று பறைசாற்றி வருகிறார்கள். வெறுப்பையும், பொறாமையுமேற்படுத்தும் மதங்கள்தான் தோன்றின. கீழ் நாட்டின் கஷ்டங்களே மேல் நாட்டிலுமிருக்கின்றன. ஆங்கு மதச்சட்டம் முதலானவையிருப்பதால் கஷ்டப்படுவோர் இருக்கிறார்கள். மாளிகைகளில் வசிப்போருமிருக்கிறார்கள். அரசனில்லாத குடியாட்சி நடைபெறும் தேசத்திலும் இதே கஷ்டங்களிருக்கின்றன. முதலாளிகளிருக்கிறார்கள். பாதிரிமார்களும் பிரசாரம் செய்துவருகிறார்கள். என்றாலும் மதக்கோட்பாடுகளை வெறுத்தேவருகிறார்கள்.

நம்மக்களின் விடுதலையைக் கருதுவோர் உண்மையோடு நடுநிலைமையில் விஷயங்களை ஆலோசிக்கவேண்டும். அடக்குமுறைகளும் பழிப்புகளுமேற்படலாம். பயந்தவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. நம்பிக்கையும் தியாகம் செய்யும் குணமுமிருந்தால் மட்டும் வெற்றிபெறலாம். நாஸ்திகனென்று பழித்தால் பழிப்போரின் அபிப்பிராயம் அவர்களோடிருக்கட்டும். ஆக்ஷேபங்களைப் பொருட்படுத்த வேண்டாம். நம்முடைய சொந்த அபிப்பிராயத்தைக் கடைப்பிடிக்காதவர்கள் மூடர்களாயிருந்து வந்தார்கள். சில ஜாதியார் படிப்பதை பாவச் செயலாகக் கருதி வந்தார்கள். படிக்க சிலருக்குச் சந்தர்ப்ப மேற்படவில்லை. கல்வியறிவில்லாதவர்களை தந்திரக்காரர்கள் ஏமாற்றி வந்தார்கள். பாமர மக்களின் அபிப்பிராயத்தைத் தகர்க்க முயற்சிகளெடுக்கப்பட்டாலும் நாம் பொறுமையைப் இழக்காமல் நம் காரியத்தில் கண்ணாயிருக்கவேண்டும்.

மதங்களின் பேராலும் சடங்குகளின் பேராலும மக்கள் எத்தகைய இன்னல்களை யடைந்துவருகிறார்கள். கோவில்களுக்கும் உற்சவங்களுக்கும் கோவில் சொத்துகளுக்கும் எவ்வளவு பொருள் வீணில் விரையம் செய்யப்பட்டு வருகிறது. திருப்பதியில் வருஷம் 20 லட்சம் ரூபாய் காணிக்கை கிடைக்கிறது. காணிக்கை கொடுப்போர் பிரயாணம் செய்து வரும் செலவைப் பாருங்கள். அக்கோவிலுக்கு 2-கோடி ரூபாய் சொத்திருக்கிறது. அசைவட்டி போட்டுப்பார்த்தால் எத்தனை லட்சம் கிடைக்கும். கடவுளுக்காகப்பட்டை நாமத்தோடு பிச்சையெடுத்த பணம் யார் வயிற்றில் விழுகிறது? கணக்குப்பார்த்தால் பாவமாம். காணிக்கை கொடுத்தவனிலும் அச்சொத்தை அனுபவித்து வருகிறவர்களிலும் எதாவது மாறுதலேற்பட்டு வருகிறதா? ஒரு ரூபாய் வட்டியில் சேர்த்து 5000 ரூபாய் காணிக்கை கொடுத்தவன் அடுத்த வருஷத்தில் ஒன்றரை ரூபாய் வட்டி வசூலிக்கிறான். கஷ்டத்தை அதிகரிக்கவே கடவுள் உணர்ச்சி மனிதரிலேற்பட்டு வருகிறது. இதைப்பற்றி சுய அபிப்பிராயங்களைத்தெரிவித்தால் நாஸ்திகமாம். தென்னாட்டில் ஜில்லாவுக்கொரு பெரியஉபத்திரவம்(ஆலயம்) இருந்துவருகிறது. பிழைப்பிற்காக அயல்நாடுகளுக்குச் சென்றால் அந்நாடுகளில் அவர்களுக்குமுன் சுவாமிகள்சென்று விடுகிறார்கள். இந்தியாவில் 35 கோடியில் தாழ்த்தப்பட்டோர் நீங்கலாக 16 கோடி உயர்ஜாதி இந்துக்களிருக்கிறார்கள். சுபரொன்றுக்கு 2 கடவுளைக் கும்பிடுவோர் ஏழை ஜனங்களை அயல் நாடுகளுக்குத் துரத்திவருகிறார்கள். நம் புத்திகெட்டின நன்மையான காரியத்தைச்செய்ய வேண்டுமானால் மூடபயம் ஒழியவேண்டும். சுயமரியாதையின் நோக்கம் இதுவே. சாதிகளுடைய சுயமரியாதையற்றதன்மையை நாம் அறிந்து வருகிறோம். தேசபக்தியும் கடவுள்பக்தியும் மதபக்தியுமில்லாத தேசத்தில் மட்டும் வேலையில்லாது கஷ்டப்படும் மக்களிருக்க மாட்டார்கள் அங்கு கோடுமைக்காரரும் ஆஸ்திமான்களுமில்லை. இதை எந்த இடத்திலும் கூறத்தயாராயிருக்கிறேன். நான் கூறுவது தப்பிதமாய்த்தோன்றினால் பைத்தியக்காரனின் கூற்றாக நினைத்துக் கொள்ளுங்கள்”

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

படி அவர்கள் தீண்டாதார்களை நெருங்கக்கூடாது; பார்க்கக்கூடாது; பேசக்கூடாது; நெருங்கினால், தொட்டால், பார்த்தால், பேசினால் அவர்கள் பார்ப்பனத்தன்மை போய்விடுகிறது. ஆகையால் அந்த வைதீகப் பார்ப்பனர்கள் எதிர் சத்தியாக்கிரகம் செய்யும்போது, தீண்டாதார்கள் கொஞ்சமும் பயப்படக்கூடாது. நெருங்கவேண்டும்; தொடவேண்டும்; பார்க்கவேண்டும், பேசவேண்டும்; இவைகளால் அவர்கள் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கும் பார்ப்பனத்தன்மையை—அதாவது முட்டாள் தனத்தை—அயோக்கியத்தனத்தை—வஞ்சகத்தனத்தை போக்க வேண்டும்; அவர்களையும் நம்மைப் போல் பார்ப்பனரல்லாதார்களாக்கி விடவேண்டும்; அப்புரம் சனியனே ஒழிந்துவிடும். இவ்வளவும் செய்தான பிறகும் “நான் பார்ப்பான் தான்” என்று எந்த வைதீகனாவது கூறிக்கொள்ளுவானானால் அதற்கு மருந்து வேறொன்றுமில்லை; எட்டிக் கன்னத்தில்அறைய வேண்டியதுதான்

ஆனால் இவ்விஷயங்களிலெல்லாம் போலீஸ்காரர்கள் தலையிடாமலிருக்க வேண்டும். ஏனென்றால் பார்ப்பனர்களும் சத்தியாக்கிரகம் செய்யும்பொழுது நடுவில் இர்வின் ராஜ்ஜியம் நடந்தால் என்னபண்ணுவது? இரண்டு கூட்டத்தாரும் ஓடவேண்டுவது தானே. இர்வின் ராஜ்ஜியம் என்றால் சமாதானம் என்று நினைத்துவிடாதீர்கள்; தடியடிராஜ்ஜியம் என்று நினைத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தடியடியினாலேயே அடக்கி விடலாம் என்று கருதியவர் அவர்தான்; அவர்தான் தடியடியை இந்தியாவில் அதிக விளம்பரப்படுத்தியவர். ஆகையால்தான் தடியடிக்கு இர்வின் ராஜ்ஜியம் என்று குறிப்பிட்டோம்.

மேலே நாம் கூறியவைகளையெல்லாம் திரட்டிப்பாருங்கள்! அவைகளால் என்ன விளங்கிற்று என்று தெரிந்து கொள்ளுங்கள்? காந்தி உண்ணா விரதத்தினால் பத்திரிகைத் தொழிலுக்குக் கொஞ்சம் லாபம் கிடைத்தது; தீண்டாதார்களின் தனித்தொகுதி தொலைந்தது; தீண்டாமை விலக்கைப்பற்றிப்பேசப்படுகிறது; ஆலயப் பிரவேசத்தைப்பற்றி வாயளவில் பேசப்படுகிறது; தென்னாட்டுப்பார்ப்பன வைதீகர்கள் அதை எதிர்க்கிறார்கள். ஆகவே தீண்டாதார்க்கு ஒரு நன்மையும் ஏற்பட்டபாடில்லை என்றுதான் மேலே சொன்னதாக ஞாபகம். இவையெல்லாம் சரியென்றால் ஒப்புக்கொள்ளுங்கள்; தப்பென்றால் தள்ளி விடுங்கள்; அதைப்பற்றி நமக்கும் கவலையில்லை; நீங்களும் கவலைப் படவேண்டாம்.

மணப்பெண்கள் தேவை

1. 25 ஆண்டை யடைந்தவரும், ஸ்கூல் பைனல் வரை பயின்று, போதனாமுறைப் பரீக்ஷையில் முதல்ராகத்தேறி இரண்டு வருடங்களாக ஆசிரியத்தொழில் புரிந்து வருபவரும், சீர்திருத்தத்தில் மிகவும் ஆர்வமுடையவரும், ஆகிய ஒரு மணமகனுக்கு ஓர் மணமகள் தேவை.

மணமகள்

கல்வி கற்றவராகவும், சீர்திருத்தப்பிரியராகவும், 20 ஆண்டுக்குட்பட்டவராகவும், இருத்தல் அவசியம். எச்சாதியினராயினும் சரியே.

A C/o காரியதரிசி,
சுயமரியாதை வாலிபர் சங்கம்,
35 ராஜ வீதி, கோயமுத்தூர்.

2. 22 வயதடைந்தவரும், ஸ்கூல்பைனல் தேர்ச்சிபெற்றவரும், தமிழ்ப்புலமை வாய்ந்தவரும், கண்ணியமான ஒரு உத்தியோகத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ 50—க்கு மேல் வருமான முடையவரும், சீர்திருத்த வேட்கையும், கட்டுடைய திரேகமும் உடையவருமான ஒரு இளைஞருக்கு ஒரு மணமகள் தேவை.

மணமகள்.

தக்க கல்விகற்றவராகவும், சீர்திருத்தப்பிரியராகவும், 20 வயதுக்குட்பட்டவராகவும், நல்ல திரேகக்கட்டுடையவராகவும், இருக்கவேண்டும். எச்சாதியினராயினும் சரியே.

B. C/o காரியதரிசி
சுயமரியாதை வாலிபர் சங்கம்
85, ராஜ வீதி, கோயமுத்தூர்

குறிப்பு:— விருப்பமுள்ளவர்கள் அவரவர்களுடைய நிலைமையைநன்கு விளக்கி விபரமாக எழுதவேண்டும். கடிதங்கள் இரகசியமாக வைக்கப்படும். திருமணம் சங்கச்சார்பிலேயே சுயமரியாதை முறையில் சிக்கனமாக நடத்தப்படும்.

காரியதரிசி
சுயமரியாதை வாலிபர் சங்கம்
85, ராஜ வீதி, கோயமுத்தூர்

[7-ம் பக்கத்தொடர்ச்சி]

தாநக்ஷத்திரங்கள் எவ்வெவ்விதமாக மனிதர்களுக்கு நன்மை தீமைகளைத் தருகின்றனவென்ற சித்தாந்தம் விளக்கமாகத்தெரிய வேண்டும். மேலும் அவற்றிற்கு மாறுபாடாகக்கூறப்படும் எதிர்ப்புகளுக்கேற்ற சமாதானங்களும் அளிக்கப்படவேண்டும். இந்தப்பூலோகத்தில் வாழும்மாந்தரை ஒன்றாக எடுத்துக்கொண்டோமானால், சாதாரணமாக ஒரு விநாடி (Second) யில் இருபது அல்லது முப்பது [30] குழந்தைகள் ஜனனமெடுக்கின்றன. அவைகள் யாவும் சோதிட சாஸ்திரப்பிரகாரம் ஒரே நக்ஷத்திர பாதத்தில் தான் பிறந்ததாகக்கொள்ளவேண்டியிருப்பதால், அவைகள் ஒரேமாதிரி உருவத்தோடு பிறந்து, ஒரேதன்மையில் வாழ்ந்து ஒரேகாலத்தில் இறக்கவும் வேண்டுமன்றோ! உலகவழக்கில் அவ்வாறு இருக்கின்றதா? தவிர, அநேகவிஷயங்கள் புதிது புதிதாகக்கண்டு பிடித்துவருகின்றனர். ஏன், மரணத்தைத் தருவதான அநேக நவீனமுறைகளும் தற்காலத்தில் சாதாரணமாகக் கையாளப்படுகின்றன. இவைகளையெல்லாம் முறை தவறாமல் ஆகாயத்தில் விரைந்தேகும் நக்ஷத்திரங்களுடன் சம்பந்தப்படுத்துதல் பொருத்தமுடைத்தல்ல என்பது வெளிப்படை.

மேற்குறித்தவைகளைத் தவிர, ஏனையகாரணங்களால், தக்க அத்தாட்சிகள் இல்லாத சோதிடசாஸ்திரத்தை இன்னும் மறுக்கமுடியாத ஆதாரங்கள் இருந்தாலொழிய, அறிவாளிகள் நம்பமாட்டார்கள் என்பது திண்ணம். இந்தச் சோதிடத்தை இத்தனைகாலமாக எவ்வளவோ மக்கள் நம்பிக்கையோடு கையாண்டுவருகின்றார்கள் என்பது, சோதிட சாஸ்திரத்திலுள்ள உண்மைத்தத்துவத்தை ஒரு சிறிதும் விளக்குவதாகாது; அது மக்களின் அறிவு, இன்னும் பரந்த நோக்கம் பெறாமல் குழந்தைப் பருவத்திலேயே இருக்கின்றதென்பதையே உணர்த்துவதாகும்.

சோதிடத்திலுள்ள உண்மைத் தத்துவத்தை, உள்ளபடி. ஒரு மோசடியான சாஸ்திரமென்றே, கூறவேண்டியிருக்கிறது. அதில் நம்பிக்கை வைப்பது அநேகக்கஷ்டங்களையும், மனக்கிலேசத்தையுமே உண்டு பண்ணுவதாயிருக்கின்றது. இதனால் மக்கள், பூசாரிகளுக்கும் மந்திரவாதிகளுக்கும், நக்ஷத்திர அதிதேவதைகளைத் திருப்தி செய்வதற்கென மணிமந்திர பூஜாகைங்கரியங்களுக்காக, ஏராளமான பொருளைப்பறிகொடுக்கின்றனர். சோதிடமே உண்மையென ஏற்றுக்கொண்ட போதிலும் இவர்கள் பூமியில் செய்யும் இந்த மந்திர யந்திர தந்திர பூஜைகள், பரந்த ஆகாயத்தில் எத்தனையோ கோடி மைல் தூரத்திற்கப்பாலிருந்துகொண்டு அதிகவேகமாகச்சதா சுழன்று கொண்டிருக்கும் நக்ஷத்திரங்களை, எவ்வாறு திருப்தி செய்கின்றதோ அறியோம்!

ஒரு சோதிடன் ஆருடம் பார்த்து, "காலம் போதாததாகவிருக்கிறது" என்று சொல்லிவிட்டால் போதும், அது எவ்வளவு அத்தியாவசியமான காரியமாக இருந்தபோதிலும் உடனே அதனைக்கை நழுவும்படி விட்டு விடத்தயாராக இருக்கும் எத்தனையோ மனிதர்களை இப்பொழுதும் காணலாம். நல்ல அழகும், சம்பத்துகளும் நிறைந்த ஒருவாலிபனோ அல்லது கன்னிகையோமூல நக்ஷத்திரம் (Mars) போன்ற இன்னும் சில நக்ஷத்திர நாட்களில் பிறந்திருந்தால் அவர்களுக்குக்கலியாணம் ஆவது மிகவும் கஷ்டமாம்! இந்த மாதிரியான இளைஞர்களின் மணவிஷயமாகத் தினசரிப்பத்திரிகைகளில் விளம்பரங்கள் மும்முரமாக வந்துவிடும்; ஏனெனில் அந்தக்கெட்ட நக்ஷத்திரத்தில் பிறந்த ஒருவனுக்கும் அதேமாதிரியான நக்ஷத்திரதோஷமுள்ள ஒருத்திக்கும் மணம் நடைபெறுது; வேறுவிதமாக நடைபெற்றுவிடின், புருஷனோ; மனைவியோ, மாமனாரோ, அன்றி மாமியாரோ கட்டாயம் மாண்டே தீருவார்களாம்! கலியாணமானபின்னர் ஏதோ காரணத்தால் கணவன் கண்ணுறங்கிவிடின், அப்பொழுது அவ்வித இளம் விதவைகள் மிக்க துர்அதிர்ஷ்டசாலிகளாகக் கருதப்பட்டு அவர்கள் கொடுமையாக நடத்தப்படுகின்றார்கள். பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களில் குதிரைப் பந்தயம் முதலியவற்றிற்கு, மேல் பணம் கட்டுபவர்கள், அவ்வாறு செய்வதற்குமுன், ஒரு சோதிடனிடம் ஆருடம் கேட்டே பணம் கட்டுகின்றனர். சோதிடன் சொன்ன மாதிரியே அநேக மந்திரதந்திரங்களுடன் நடந்த போதிலும், அவர்களில் அநேகர் பல தடவைகளில், கட்டிய பணத்தை இழக்கின்றனர். எத்தனை தடவைகளில் அவ்வாறு மோசம் போனபோதிலும், அவர்களிடம், இந்த மாயா சோதிடத்தின்பால் வைத்துள்ள மூட நம்பிக்கை குறையாமலிருப்பதை இன்னும் காணலாம். [தொடரும்]

ஈரோடு முனிசிபாலிடி நோட்டீஸ்.

ஈரோடு முனிசிபல் சங்கத்தார் அனுவமபள்ளி ராமசாமி செட்டியார் அவர்களுக்கு ஷையாரால் டவுன் சர்வே 264-1 நெம்பரில் திண்ணை கட்டி ஆக்ரமிப்பு செய்திருக்கும் 431 சதுர அடி நிலத்தை 3 வருஷத்திற்கு குத்தகைக்குக் கொடுப்பதாக 13-7-1932 தேதிய 171 நெம்பர் தீர்மானத்தில் முடிவு செய்திருக்கிறார்கள். ஜில்லா கலெக்டர் அவர்கள் ஷை நிலத்திற்கு நிலவாடகை செண்ட் ஒன்றுக்கு 0—1—0 அணா வீதம் 10—10—1932 தேதிய 7923/32 C4 நெம்பர் லெட்டரில் சாங்ஷன் செய்திருக்கிறார்.

இது விஷயமாய் ஆக்ஷேபனை யுள்ளவர்கள் ஈரோடு முனிசிபல் கவுன்சில் சேர்மன் அவர்களுக்கு எழுத்து மூலமாய் இந்த நோட்டீஸ் ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்த ஒரு மாதத்திற்குள் தெரியப்படுத்திக் கொள்ள வேண்டியது.

கே. ஏ. ஷேக்தாவூத்,
சேர்மன்.

மூலக்கொத்தளம் ஆதிதிராவிடர் கூட்டம்.

சுயமரியாதைத்தோழர்கள் சொற்பொழிவு.

சென்ற—23. 10. 32ந்தேதிமாலை 5மணிக்கு சென்னை மூலக்கொத்தளத்திற் கருகிலிருக்கும் பெரியபாளைத்தம்மன் கோவிலுக் கருகிலுள்ள மைதானத்தில் 'சமதர்ம' வாசகசாலையின் ஆதரவில் திராவிடன் ஆசிரியர் திரு. டி. வி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முகவுரைக்குப்பின் தோழர்கள்குருசாமி, திருஞானசம்பந்தம், குஞ்சிதம் அம்மையார், முத்துசாமி வல்லத்தரசு, ஜி. டிராஜன், கொள்ளபுரி பண்டிதர் முதலியவர்கள் பல அரிய விஷயங்களைப் பற்றி பாமர மக்கள் எளிதில் உணருமாறு உருக்கமாகப் பேசினார்கள். பின்னர் அவ் வாசக சாலைக்கு தோழர்- டி. வி. சுப்பிரமணியம் தலைவராகவும், தோழர்கள் எஸ். குருசாமி, பண்டித திருஞான சம்பந்தம், குஞ்சிதம் அம்மையார்ஆகியவர்கள்பொருட் காப்பாளராகவும் ஜி. ராஜரத்தினம் காரிய தரிசியாகவும் நியமிக்கப்பட்டபின்னர். தலைவர் முகவுரையுடன் வந்தோ உபசாரத்திற்குபின் கூட்டங்கலைந்தது. (ஒருநிருபர்)

திருச்செங்கோடு.

அனுதாபக்கூட்டம்:— சுயமரியாதை இயக்கத்தோழரும், இளைஞருமாகிய தோழர் ஏ. பி. குமாரசாமியவர்கள் திடீரென அகால மரணமெய்தியதை முன்னிட்டு இவ்வூர் வாலிப சகவாச சங்கத்தின் ஆதரவில் 28-10.32 வெள்ளி காலை9மணிக்கு, ஓர் அனுதாபக் கூட்டம் கூடப்பட்டது. தோழர்கள் யாவரும் விஜயம் செய்திருந்தனர். கூட்டத்தாரால் கீழ் கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு கூட்டம் கலைவுற்றது.

தீர்மானம்

சீர்திருத்தத் தொண்டரும், இளைஞருமாகிய தோழர் ஏ. பி. குமாரசாமி அவர்கள் திடீரென அகாலமரணமடைந்ததைப் பற்றி இக்கூட்டம் வருந்துவதுடன் அவர் குடும்பத்தாருக்கு தங்கள் அனுதாபத்தைத்தெரிவித்துக்கொள்ளுகிறது.

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1932ஹு O. S. No. 342.

திருப்பூர் முனிசிபல் கவுன்சில் by its Chairman Mr. K. R. ராயப்பகவுண்டர்—வாதி.

N. M. K. அப்துல்வகாப் சாயபு.. 1ம் பிரதிவாதி.

ஷை முதல் பிரதிவாதிக்கு நோட்டீசு:—

வாதி முனிசிபாலிட்டிக்கு செலுத்தவேண்டிய வரி பாக்கிக்காக உம்மீது செய்யப்பட்ட தாவா 8—11—32 தேதி வாய்தாபோடப்பட்டிருக்கிறது. ஷை தேதியில் நீர் ஆஜராகத்தவறினால் ஒரு கட்சியாகத் தீர்ப்பு செய்யப்படும் என்கிற விஷயம் அறிவிக்கலாகிறது.

T. R. சுந்தரம் பிள்ளை,
வாதி வக்கீல்.

திருப்பூர், 26—10—32.

ANANGARANGABATIKA.

(Enjoyment Pill)

DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of failure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

"SAILASRAM" (K)
Chandanpur,
(Khulna) E. B. R.

மூன்றாவது சர்வகட்சி மகாநாடு.

பிரதிநிதிகள் விவரம்.

பிரதமமந்திரியின் அழைப்புக்கிணங்கி பின்கண்டவர்கள் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்தும், சுதேச சமஸ்தானங்களிலிருந்தும் மூன்றாவது சர்வகட்சி மகாநாட்டுக்குச்செல்லுவார்கள். அம்மகாநாடு லண்டனில் நவம்பர் 15-ந் தேதிவாக்கில்கூடி இந்திய அரசியல் சீர்திருத்த சம்பந்தமாக ஆலோசனை செய்யும். அழைப்புப் பெற்றிருக்கும் சுதேச சமஸ்தானாதிபதிகள் தாங்களே நேராக மகாநாட்டில் கலந்துகொண்டாலும் கொள்ளலாம். அல்லது தங்கள் சார்பாகப் பேச அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளையாவது அனுப்பலாம்.

இந்திய சமஸ்தானப் பிரதிநிதிகள்:—

பரோடா-பிரதிநிதி ராவ்பகதூர் வி. டி. கிருஷ்ணமாச்சாரியார்.

போபால்-பிரதிநிதி ராய்பகதூர் ராஜா அயோதி நாராயண சார்யா.

பிகானீர்-பிரதிநிதி ஸர் மனுபாய் மேட்டா.

ஹைதராபாத்-பிரதிநிதி நவாப் ஸர் முகம்மது அக்பர் ஹைதாரி.

காஸ்மீரம்-பிரதிநிதி-ஜனுப் வஜஹத் ஹுஸேன். கோலாப்பூர் பிரதிநிதி ராவ்பகதூர் குர்வே.

மைசூர்-பிரதிநிதி ஸர் மிர்ஸா இஸ்மேயில்.

நவநகர்-பிரதிநிதி மிஸ்டர் ரஷ்புருக் வில்லியம்ஸ்.

பாடியாலா-பிரதிநிதி நவாப் லியாகத்ஹயத்கான்.

ஜெய்ப்பூர் ஜோத்பூர், உதையபூர் ஆகிய மூன்று சமஸ்தானங்களுக்கும், ஸர் சுகதேவபிரஸாத். சிறிய சமஸ்தானங்களின் பிரதிநிதியாக காரிலாராஜா செல்லுவார்.

ரீவா சமஸ்தானத்துக்காகவும் திருவாங்கூர் சமஸ்தானத்துக்காகவும் பிரதிநிதிகள் அனுப்பும் படியும் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள்:—

கனம் ஆகாகான், டாக்டர் அம்பேத்கார்.

பொப்லி ராஜா.

ஸர் ஹியூபர்ட் கார்.

ஜனுப் கஸனவி.

ஸர் ஹென்றி கிட்னி.

ஸர் முகம்மது இக்பால்.

ஸ்ரீமான் ஜெயகர்.

ஸர் கவாஸ்ஜிஜீஹாங்கிர் (ஜூனியர்)

ஸ்ரீமான் என். ஸி. கெல்கார்.

திவான்பகதூர் ஏ. ராமஸ்வாமி முதலியார்.

பண்டித நானக்சந்த்.

ஸர். ஏ. பி. பாத்ரோ.

ஸர் புருஷோத்தமதாஸ் தாகூர் தாஸ்.

ஸர் டேஜ்பகதூர் சாப்ரூ.

டாக்டர் ஷாபத் ஆமத்கான்.

சர்தார் டாராசிங்.

சௌத்ரி ஸாப்ருல்லாகான்.

பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளின் ஜாப்தாவில் இன்னும் இரண்டொரு பெயர் சேர்க்கப்படக்கூடுமெனத் தெரிகிறது. பிரிட்டிஷ் பார்லிமெண்டு பிரதிநிதிகளின் பெயர் பின்னால் அறிவிக்கப்படும்.

ஈரோடு முனிசிபாலிடி நோட்டீஸ்.

ஈரோடு முனிசிபல் சங்கத்தார் சர்தார்கான் சாயபுக்கு ஷைபாரால் பூந்துரை ரோட்டில் 40 நெம்பர் வீட்டின் முன் டவுன் சர்வே 613 நெம்பரில் திண்ணை கட்டி ஆக்ரமிப்பு செய்துள்ள 23' × 1½' அடி அளவுள்ள 35 சதுர அடி நிலத்தை 3 வருஷத்திற்கு குத்தகைக்குக் கொடுப்பதாக 13—7—1932 தேதிய 158 நெம்பர் தீர்மானத்தில் முடிவு செய்திருக்கிறார்கள். ஜில்லா கலெக்டர் அவர்கள் ஷை நிலத்திற்கு நில வாடகை செண்ட் ஒன்றுக்கு 0—1—0 அணுவீதம் 10—10—1932 தேதிய 7923/52 C4 நெம்பர் லெட்டரில் சாங்ஷன் செய்திருக்கிறார்.

இது விஷயமாய் ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஈரோடு முனிசிபல் கவுன்ஸில் சேர்மன் அவர்களுக்கு எழுத்து மூலமாய் இந்த நோட்டீஸ் ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்த ஒருமாதத்திற்குள் தெரியப்படுத்திக் கொள்ள வேண்டியது.

கே. ஏ. ஷேக்தாவுத்,
சேர்மென்.

நேசாபிமானம் நாளைக்கு, இன்றைக்கு சோற்றுக்கு.

மலையாளம் சில்க் & சேலைகள்.

2½ வீதி 5 நீளம் பட்டு 1-க்கு ரூ. 1—8—0
ஷை கம்பிக்கரை டஜன் 1-க்கு ரூ. 15—0—0
3-வீதி 8-நீளம் வேஷ்டி 1-க்கு ரூ. 3—8—0
2½ × 12 நீளம் லேட்ரோஸ் சேலை 1-க்கு ரூ. 3—8—0
இதில் எல்லா கலர்களில் கிடைக்கும்.

S. K. R. வீவிங் பாக்டரி கோட்டார், திருவிதாங்கூர்.

ரூபா 3-6-0 க்கு 3-கடிகாரங்களும் இதர வெகுமதிகளும்.

சந்தேகமில்லை, ஆச்சரியமில்லை, உண்மை!

ஆட்டோ சுகந்தராஜ் (இந்த பூத்த புஷ்பங்களின் சத்து) மணம் மிகுந்தது. 3-நாள் உபயோகத்துக்குரிய புட்டி 3-அணு. படைமருந்து 12 மணி நேரத்தில் பரிபூரண குணம் டப்பி 1-க்கு 3 அணு. மேற்படி 2-தினுசுகளும் சேர்ந்தாவது தனித்தனியாவது 18-புட்டிகள் ரூபா 3-6-0 க்கு ஆர்டர் செய்தால், கோல்ட் நிப் பௌண்டன் பேனு 1. 500-கஜம் வரை வெளிச்சம்தரும் பாட்டரி லாம்ப் 1, நூதன கைக்கெடியாரம் 1, பர்மா டைம்பீஸ் அல்லது ரயில்வே மெயில்கார்ட் லீவர் பாக்கெட்வாச் 1-ம், இனமாக அனுப்பப்படும். ஒவ்வொரு கடிகாரமும் 10 வருடம் உத்தரவாதம். சாமான்கள் பிடித்தமில்லாவிடில் பணம் திருப்பிக்கொடுக்கப்படும். பாக்கிங் தபால் செலவு தனி.



விலாசம்:—Sharma Brothers & Co.,
Post Box No. 2412, Section 9C,
Calcutta.

பிரமேக நிவாரணி.

காட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், குத்தல், உடனே நிற்கும். நிச்சயமாய் 3 வேளையில் குணம் தரும். தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2—0—0.

கெர்ப்ப ஸஞ்ஜீவிணி.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும், கர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும். புட்டி 1க்கு விலை ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

எமது கியாட்லாக் இனம்!

சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகள் இருக்கின்றன. விபரத்திற்கு எழுதுங்கள்.

ஸ்கலித நிவாரணி.

பலஹீனத்தினுலும், உஷ்ணத்தினுலும், தூக்கத்திலும், சொப்பனத்திலும், இந்திரியம் தாஞக வெளிப்படுவதை நிற்பாட்டி தேகத்திடத்தைத்தரும். புட்டி ஒன்றுக்கு ரூ. 2—0—0.

மலையப்பசாமி,

வைத்தியசாலை, பழநி. S. I.

மதிப்புரைகள்.

ஸ்திரீபாலசிகிச்சை

ஷண்முகநாதபுரம் டாக்டர் எஸ். ஏ. சின்னப்பர் அவர்களை ஆசிரியராகக் கொண்ட "ஸ்திரீபால சிகிச்சை" என்றபுத்தகம் ஒன்று நமது பார்வைக்கு அனுப்பபட்டுளது. இதில் ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்படும் பல நோய்களின் காரணங்களும், அவற்றிற்கான சிகிச்சை முறைகளும், மருந்துகளும், ஆகாரங்களும் நோய் வராது தடுக்கும் முறைகளும் வெகு நன்றாய் குறிப்பிடப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.

நமது நாட்டில் பெண்மக்களுக்குப் போதிய கல்வியில்லாததாலும், குழந்தை வளர்ப்பு முறைகள் போதுமான அளவு தாய்மார்கள் அறியாததாலும், கண்மூடித்தனமான மூட மத நம்பிக்கையாலும், கடவுள் பக்தியாலும் நமது நாட்டில் மற்றய நாடுகளைவிட அதிகமான சிசுமரணம் ஏற்படுகிறது. பிடிவாதமான பழக்கத்திற்கும், வழக்கத்திற்கும் பல குழந்தைகள்பலிகொடுக்கப்படுகின்றன.

இத்தகைய பெருங்குறைகள் நீக்கப்பட இப்புத்தகம் பெருந்துணைபுரியுமென்றேஎண்ணுகிறோம். சிறிது கல்வியறிவுள்ள சகோதிரிகள் இதுபோன்ற நூல்களைக்கற்று அதன்படி நடக்க முயல்வது சாலச்சிறந்ததாகும். இதன் ஆசிரியர் அநுபவசாத்தியமான அநேக முறைகளையும், மருந்துகளையுமே குறித்துள்ளார். இத்தகையதோர் சிறந்த புத்தகத்தை எழுதிவெளியிட்ட இதன் ஆசிரியரைப்பாராட்டுகிறோம். புத்தகம் சுமார் 460 பக்கங்கள் கொண்டு, அழகாய் பைண்ட் செய்யப் பட்டுள்ளது. ஆனால் ஒரு குறையை மறைக்க முடியவில்லை. இவ்வளவு உபயோகமான புத்தக மெழுதிய இதன்ஆசிரியர் சாதாரணமாக எல்லோருக்கும் பயன் படாதவாறு விலை ரூ. 3-8-0 என்று குறித்திருக்கிறார். இன்னும் விலைகுறைவாயிருந்தால் எதிர்பார்த்த பலன்கிடைக்க ஐயமில்லை.

கிடைக்குமிடம்:—

டாக்டர் எஸ். ஏ. சின்னப்பர்,
சண்முகநாதபுரம்,
ராமனாதபுரம்.

பாலசுந்தரம் அல்லது பலியின் கொடுமை.

தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரசபையின் உபந்யாசகர் திரு டி எஸ் ஸ்ரீபால் அவர்களால் வரையப் பெற்ற மேற்கண்ட புத்தகம் ஒன்று கிடைக்கப்பெற்றோம். இதில் எந்தச்சாமியும் கொலையை விரும்புவதில்லை யென்பதையும், மாந்தரது மூடபக்தியும், பூசாரிகளது சுயநலம் காரணமாகவே இது நடைபெற்று வருவது மிகவும் வன்மையாய் கண்டிக்கப்பட்டிருப்பதோடு, கதாநாயகனாகிய பாலசுந்திரம் தன்னல மற்றதியாக புத்தியோடும், உண்மையோடும் கடவுள் பக்தியின் பேரால் நடைபெறும் கொலைகளைத்தடுக்க முயற்சிப்பதும், அவனுக்கு ஏற்படும் சங்கடங்களும் பின்னால்அவையெல்லாம் மறைந்து, தான்கொண்ட கருத்து நிறைவேற அவனது எதிர்ப்பாளர்களே உதவிபுறிவதும் கதைரூபமாக விளக்கப்பட்டுள்ளன. மதத்தின்பேராலும்,கடவுளின் பேராலும், மூடபக்தியின் பேராலும் சீவன்கள் வதைக்கப்படாது தடுக்க இதுபோன்ற புத்தகங்கள் மிகுந்த உதவிபுரியுமென்றே எண்ணுகிறோம். இதன் விலை அணா 0-3-0.

கிடைக்குமிடம்:—

தென்னிந்திய ஜீவரக்ஷா
பிரசார சபை,
436, தங்கசாலைத்தெரு, சென்னை.

பெண்கள் உடற்பயிற்சி.

உடற்பயிற்சி சம்மந்தமாக பல அறிய புஸ்தகங்களும், துண்டுபிரசுரங்களும் வெளியிட்டு வருபவரும், தமிழ் நாட்டு பலசாலிகளுக்குப் புதிய உணர்ச்சியும், ஊக்கமும் அளித்து வருபவருமான கீழச்சீவற்பட்டி திரு. லெ. சோமசுந்திரம் அவர்களால் இப் புஸ்தகம், இயற்றப்பட்டதாகும். இதில் பெண்மக்கள் உட லோம் புதலின்அவசியமும், தேகத்தைஎவ்வாறு அழகாகவும் கட்டாகவும் வைத்துக் கொள்ளலாம் என்பது பற்றியும், அதை நிறை வேற்றுவதற்கு தேகாப்பியாசம் ஆண்களைப் போன்றேபெண்களுக்குமஎத்தகைய அவசியமான தென்பதையும், அவ்வித அப்பியாச முறைகள் இன்னவை என்பதையும், பலகுறிப்புகள் மூலமாயும், படங்கள் மூலமாயும் தெளிவாய் விளக்கப்பட்டுள்ளன. அழகிற் இருப்பிடமாயும், வீரர்க்கன்னையாயும், நாட்டிற்குப்பொக்கிஷமாயும், நாயகர்க்கு நன்மனியாயும் விளங்கும் பெண்டிற்குத் தம் சுயமரியாதையைக் காக்கவும், நோய் அகால மரணம் முதலியவற்றைத் தடுக்கவும், இயற்கையழகை வளர்க்கவும், தேகபலம் இன்றியமையாததாகும். தேகபலத்தைப் பெறுவதற்கு தேகாப்பியாசம் இன்றியமையாதது, தேகாப்பியாச முறைகளை ஆரம்பபாடமாகக் கொள்ள இப்புத்தகம் பேருதவியாயிருக்குமென்றே கருதுகிறோம். சிறிதேனும்கல்வி கற்ற பெண்மணிகளிடம் இப்புத்தகம் ஒன்று அவசியம் இருத்தல் வேண்டு மென்றே சிபார்சு செய்கிறோம். இப்புத்தகம் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டு நேர்த்தியான அட்டையுடன் கூடியதாயிருக்கிறது. விலை குறிக்கப்படவில்லை.

கிடைக்குமிடம்,

லெ. சோமசுந்தரம்,
கீழச்சீவற்பட்டி,
இராமநாதபுரம் ஜில்லா.

கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்.

23—10—32 தேதி ஞாயிறன்று மாலை 7 மணிக்கு ஷை சங்கவாராந்திரக்கூட்டமொன்று நடைபெற்றது. சங்கத்தலைவர் தோழர் ஏ. ஆர். சிவானந்தம் அவர்கள் கூட்டத்துக்கு வந்திருந்தும் உடல் நலிவின் காரணமாய்த்தலைமைவகிக்க முடியாமையால் சங்கக்காரியதரிசி தோழர் ஆர். கிஸன் அவர்கள் தலைமைவகித்தார். தோழர். என். கே. கஸ்தூரி அவர்கள் சுயமரியாதைக்கீதங்கள் மிக இனிமையாகப் பாடினார். பின்னர் ஆசிரியர் தோழர் எஸ். ஏ. மாணிக்கம் அவர்கள் "மாணவர்களும், பள்ளி வாழ்க்கையும்" என்னும் பொருள் பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினார். பின்னர் அதையாதரித்து ஆசிரியர்கள் தோழர்கள் எம். வேணுகோபால், எம். ஒய். ஸ்ரீனிவாசன் வி. ஆர். வேலப்பா எச். எஸ். முனுசாமி ஆகியவர்கள் மிக அழகாகவும், விரிவாகவும் பேசினார்கள். பின்னர் தலைவர் முடிவுரையில் சொற்பொழிவாளர்கள் பேசியதையாதரித்துப் பேசியதோடு தங்களால் கல்விப்பயிலப்பெறும் சிறுவர், சிறுமியர்கள் சிறுவயதிலேயே மாதா, பிதா, குருசொல்லுதலே சரியென ஒப்புக்கொள்ள வேண்டுமெனக்கட்டுப்படுத்தும் வழக்கம் ஒழிந்து அச்சிறுவர்களுக்கு நிகழும் சங்கைகளை விளக்கித்தெளிவுபெற உண்மையுணர்த்தவேண்டும் என்றும், அறிவுக்கும், உலகியல் அநுபவத்துக்கும் ஒத்துவாராத விஷயங்களை, விஷயத்தைக் கிரகித்துப்பகுத்தறியும் திறனில்லாத இளைஞர் மனத்தில் திணிக்கக்கூடாதென்றும் கூறினார்.

பின்னர் அங்கு குழுமியிருந்த அனைவருக்கும் தோழர் எஸ். ஏ. மாணிக்கம் அவர்களாலும் வந்தனோபசாரங்கூறப்பட்டு இரவு 9 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது எனக் காரியதரிசி ஆர். கிஸன் அவர்கள் அறிவிக்கிறார்.

தமிழன் நேயர்களுக்கு.

சென்ற மூன்று மாதங்களாக எதிர் பாராத வண்ணம் நிறுத்தப்பட்டிருந்த "தமிழன்" அடுத்த 2-11-32 புதன்கிழமையிலிருந்து வழக்கம் போல் வெளியாக்கப்படும்.மறுபடியும்தமிழனை வெளியிடலா மென்னும் உத்தரவை மைசூர் சமஸ்தான கவர்ன்மெண்டார் சென்ற 20-ந்தேதியிலிருந்து அனுமதித்திருக்கின்றார்கள். ஆதலின் சந்தா நேயர்கள், அபிமானிகள், கடிதநேயர்கள் யாவரும் "தமிழனை" முன்னிலும் பன்மடங்கு ஆதரிக்க முன்வருவார்களென்றெதிர் பார்க்கின்றோம்.

B. M. இராஜ ரத்தினம்,
பிரிண்டர் & பப்ளிஷர்.

ரங்கூனில் சுயமரியாதைப்பிரசாரம்.

திருமதி இந்திராணிபாலசுப்பிரமணியம் அவர்கள் சுயமரியாதை பிரசாரம் செய்யும்பொருட்டு இரங்கூனுக்கு "எதோபியா" என்ற கப்பலில் 21—10—32ந் தேதி சென்னையினின்று சென்றார்.

ஒரு நிரூபர்.

திருச்செங்கோடு வாலிப சகவாச சங்கம்:—

அக்டோபர் 23 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சங்கக்கட்டிடத்தில் நம் இயக்கத்தோழர் ஏ. எம். மருதாசலம் அவர்களின் தலைமையின் கீழ் 'சமுதாய சீர்திருத்தம்' என்னும் விஷயம்பற்றி தோழர்கள் டி. ஆர். நடேசன், மருதாசலம், எஸ். கே. வரதராஜுலு, ஆசிரியர் அர்த்தனாரி, ஏ. சங்கரன் முதலானோர் அரிய சொற்பொழி வாற்றினார்கள், அவ்வமயம் கீழ்கண்ட தீர்மானம் கூட்டத்தாரால் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்.

இவ்வூரிலுள்ள காப்பிஹோட்டல், போஜனசாலைகளில் பெரும் வியாதியஸ்தர்கள் தவிரமற்ற எல்லா சகோதரர்களுக்கும் ஜாதிமத வித்தியாசம் இல்லாமல் அனுமதிக்குமாறு இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது. அவ்வாறு அனுமதிக்காத மேற்படி சிற்றுண்டிசாலை, போஜன சாலைகளுக்கு லைசன்ஸ் கொடுக்காதிருக்குமாறு திருச்செங்கோடு யூனியன்போர்ட் தலைவர் அவர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது. என சங்கக்காரியதரிசி டி. ஏ. கைலாசம் தெரிவிக்கிறார்.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

காதல்.

காதல் என்றால் என்னவென்பதைப்பற்றி ஆராய்வோம். புரொபசர் ஏ. ஆர். வாடியா என்பவர் "காதல் என்றால் அந்தரங்க அநுதாபம், ஆடவருக்கும் பெண்டிருக்குமுள்ள பரஸ்பரவியப்பு. அவரவர்களுடைய பூப்பின் தன் உணர்ச்சி, அவர்களுடையமுடிவிலா ஐக்கியம்," என்று கூறுகிறார். லியோடால் ஸ்டாய் "காதல் என்றால் மக்கள் அனைவரையும் விலக்கித்தனக்கென்று ஒருவரைத்தெரிந்து பெற்றுக்கொள்ளுதல்," என்கிறார். இவ்விபரங்கள் எல்லாம் தனிப்பட்ட ஒரு காலத்தையும், நபர்களையும் சம்பந்தப்பட்டவரையில் உண்மையானவைகளாக இருக்கலாம். ஆனால் நாம் அவைகளை ஆதரிக்க மாட்டோம். காதல் என்றால் குறிப்பிட்ட எதையும் குறிக்காமல், பொதுப்பட்ட ஒன்றைக் குறிப்பதாகும் என்றே நாம் கூறுகிறோம். அதற்கு உதாரணமாகக் கல்வியைச் சொல்லலாம். கல்வி எவ்வளவு அதிகமாக வழங்கப்பட்டாலும் அது அளவிலோ குணத்திலோ குறைவதில்லை. ஒரு எரியும் மெழுகு வத்தியையும் அதற்கு உபமானமாகக் கொள்ளலாம். ஒரு மெழுகு வத்தியால் வேறு எத்தனை மெழுகு வத்திகளைக் கொளுத்தினும் அதன் பிரகாசம் ஒரு சிறிதும் குறையாதிருப்பதைக் காண்கிறோம். காதலும் அத்தன்மையது என்றே கூறுவோம். காதல் மக்களின் மனோபக்குவத்தைச்சார்ந்ததேயன்றி, அது எந்தச்சட்டங்களையும் சார்ந்ததல்ல. ஹார்டி என்னும் அறிஞர் "ஒருவரை ஒருவர் எப்போதும் காதலிக்க வேண்டுமென்று கட்டுப்படுத்தி வைப்பது குற்றச்செயகையாகும். அத்தகைய கட்டுப்பாடு ஏதேனும் ஒரு பிரத்தியேகமான உணவை மட்டுமோ அல்லது குடியை மட்டுமோ எப்போதுமே விரும்ப வேண்டுமென்று ஒருவர் சத்தியம் செய்து கொள்வது போலவாகும்," என்று சொல்லியிருக்கிறார் காமத்திற்குக் கண் இல்லை என்பர். ஆனால் அத்தகைய கொள்கையால் விளையும் கஷ்டங்கள் பல, அக்கஷ்டங்களைப் பரிகரிக்க மார்க்கமுந்தோன்றவில்லை. இவ்வுலகத்தில் நாம் நம் இஷ்டப்படி நடக்க முடிவதில்லை. தண்டனையடைந்த ஒரு குற்றவாளியை ஒரு பெண் நேசிக்கிறாள், நோயாயான ஒருவனை ஒரு பெண் சேர விரும்புகிறாள் தன் நிலைமைக்கு மேற்பட்ட நிலைமையில் இருக்கும் ஒரு அழகியபெண்ணை ஒரு வாலிபன் காதலிக்கிறான், அல்லது தன் நிலைமைக்குக் கீழ்ப்பட்டிருக்கும் ஒருத்தியை ஒரு இளைஞன் காதலிக்கிறான். ஏற்கனவே விவாகமாகியிருக்கும் ஆண் பெண்கள் பால் காதல் படிகிறது. புறஜாதியார்கள் மீதும் புறமதஸ்தர்கள் மீதும் காதல் கொள்ளுகிறார்கள். ஆனால் அக்காதல்கள் நிறைவேற்றப் படுவதற்கில்லாமல் போகிறது. ஆகவே நாம் நினைத்தபடி எவரையும் காதலிக்க முடியாது. ஒருவரை ஒருவர் கண்டதும் காதல் கொண்டால் அக்காதல் உண்மை காதல் அல்ல, அது சாதாரண கவர்ச்சியே யாகும். அது எழுந்த வேகத்தோடே விழுந்து போகும் இயல்பினை உடையதாகும். காதல் ஒருவித வரையரைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டியிருக்கிறது. அது அங்கனம் இல்லாதிருந்தால், அதனால் தீங்கே விளைகிறது. அதனால் பிரதானமான சந்தோஷம் குறைவுபடுகிறது. ஆகவே விவாகத்தின் முக்கிய நோக்கம் சிதறுண்டு போகிறது.

ஆதலால் உண்மையான காதல் மணமே நல்லொழுக்கம் கொண்டதாகும். அத்தகைய விவாகத்தாலேயே மணவாழ்க்கையில் இன்பமும் நேர்மையும் ஏற்பட முடியும். அதுவே சாஸ்வதமான நிலைமை பெறும் விவாகச் சடங்குகளால் ஒருவித நன்மையும் இல்லை. அச்சடங்குகள் காதலின் உண்மைத் தன்மையை உயர்த்த முடியாது. விவாகச் சடங்குகள் காதலர்களின் அவநம்பிக்கையையே காட்டுகின்றன. அப்படிப்பட்ட அவநம்பிக்கை காரணமாகவே சட்டமுறைகளால் விவாகத்தைக் கட்டுப்பாடு செய்கிறார்கள். உண்மையான விவாகம் சுயேச்சையாய் நடைபெற வேண்டும். உண்மையான விவாகத்தில் சட்டம் கலத்தல் கூடாது. விவாகத்தில் ஜாதியோ மதமோ தலையிடுதல் கூடாது. விவாகத்தை ரத்து செய்து கொள்ள விரும்புகிறவர்களுக்குத் தடைகள் ஏற்படுதல் கூடாது. விவ்விஷயங்களைப்பற்றித் தீர்மானம் செய்துகொள்ள ஆண்பிள்ளைகளுக்கிருக்கும் சுதந்தரம் பெண்பிள்ளைகளுக்குமிருக்க வேண்டும். 'காதல் என்பது ஒரு பெண்பிள்ளையின் வாழ்க்கைச் சரித்திரமாகவிருக்கிறது. ஆனால் அது ஒரு ஆண்பிள்ளைக்கு வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட ஒரு சிறு கதைப்பகுதியாக இருக்கிறது." என்று மேடம் டிஸ்டேயல் கூறுகிறார்.

சீர்திருத்தம் அவசியம்.

உண்மையான விவாகத்தின் முக்கிய கருத்து காதல் நிகழ்ச்சியேயாயாகும். அதாவது சதிபதிகள் தேக மனோ காரியங்களில் பரஸ்பர ஐக்கிய நிலை பெற்றிருத்தலாகும். காதலர்களுக்கு நோயற்ற நல்லுடலும், மண வாழ்க்கையில் தக்க பொறுப்பும், தாய் தந்தைகளுக்குரிய உண்மை ஞானமும் திகழ்தல் வேண்டும். விவாகத்தால் ஒன்றுபட்ட மக்கள் பின்பு பிரிதல் நன்மையுடையதாகாது. ஆதலால் விவாக ஒப்பந்தம் செய்து கொள்ளுவதற்கு முந்தி ஆடவரும் பெண்டிரும் எவ்வித குறைபாடுகளுமில்லாதவர்களாய் இருத்தல் வேண்டும். விவாகத்திற்கு முன்பு தேர்ந்த வைத்தியர்களிடமிருந்து இருவரும் தம் தம் தேக சுகத்தைக் குறிக்கும் தகுதிச் சீட்டு பெறவேண்டும். சமுதாய நலம் தேக நலத்தையே பெரிதும் சார்ந்திருப்பதால் அத்தகைய வைத்திய பரிசோதனை இன்றியமையாததாகும். இம்முறை அமெரிக்காவின் பல மாகாணங்களில் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. மணமக்கள் கல்வி சாஸ்திரத்தில் அறிவு பெற்றிருக்க வேண்டும். அவ்விஷயத்தில் அவர்களுக்கு அறியாமை இருத்தல் கூடாது.

கற்பு என்றால் என்ன?

அபாயகரமான ஒரு விஷயத்தைப்பற்றி இப்போது நமது அபிப்பிராயத்தை வெளியிட விரும்புகிறோம். மணவாழ்க்கையில் ஈடுபட்டவர்களுக்கு கற்பு அவசியமாவென்று சில அறிஞர்கள் கூறுகிறார்கள். நாம் அவர்களுக்கு "இல்லை" என்றே பதில் கூறுகிறோம். உண்மையான பகுத்தறிவைக்கொண்டு பார்க்கும்போது கற்புக்கும் விவாகத்திற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லையென்றே தெரிகிறது. கற்பு என்றாலே அர்த்தமற்ற ஒரு விஷயமாகவிருக்கிறது. கற்பு என்றால் ஏதோ உயர்ந்த ஒன்று என்று வைத்துக் கொள்வோம். அத்தகைய கற்பு விவாகத்தில் இல்லையென்றால், அது மதசம்பிரதாயப்படி பாவம் என்றும், சட்ட சம்பிரதாயப்படி குற்றம் என்றும் அர்த்தம் என்று வைத்துக்கொள்வோம். அந்நிலைமையில் ஏற்படும் விவாகம் மதப்படி பாவகாரியமென்றும், சட்டப்படி குற்றத்தொழில்என்றும் உறுதிப்படுத்தப்படுவதாகிறது, அப்படியானால் அது எப்படிப்பட்ட கொடிய செயல் என்பதை வாசகர்களே அறிந்து கொள்ளட்டும். கற்பு என்றால் ஒன்றுமில்லையென்று வைத்துக்கொண்டால் விவாகத்தில் அது இருப்பினும் இல்லாது போயினும் அது ஒரு பொருட்டேயல்ல. இவ்விஷயத்தில் நேரே அநுபவம் பெறும் நோக்கத்தோடு கற்பு தியாகம் செய்யப்படுவது நமது அபிப்பிராயத்தில் மிகவும் போற்றத்தக்கதேயாகும். அறியாமையால் பிற்காலத்தில் வாழ்நாள் முழுதும் துன்பம் அடைந்து கொண்டிருப்பதைவிட முன்னமேயே சில உறவுகளால் அநுபவம் பெறல் மேல் என்பதே நமது அபிப்பிராயம். குமரர்களும் குமரிகளும் தங்கள் விவாகத்திற்கு முன்பு கற்பிழந்தவர்களாகக் கருதப்பட்டால், அபக்கியாதிக்குறிய விஷயம் அல்லவென்பதும் நமது அபிப்பிராயம். கற்பின் காரணமாக உயர்வு தாழ்வு கற்பித்தல், உண்மை விவாகத்தைப் பற்றிய தத்துவத்தின் இயல்பை மக்கள் உள்ளவாறு அறிந்து கொள்ளவில்லையென்பதைக் காட்டும் அறியாமையேயாகும். நாம் இவ்வாறு கூறிவருவதால் நாம் விபசாரத்தை ஆதரிப்பதாக ஒரு போதும் நினைக்க வேண்டாம். நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தை விளக்க நியாயவாதமே செய்கிறோம். நாம் நமது வாதங்களை வற்புறுத்த முன்வரவில்லை.

கற்பு என்பதைக் கடைப்பிடிக்காவிட்டால் சட்ட விரோதமான குழந்தைகள் உண்டாகும் என்று சொல்லப்படுகிறது. பிறப்பிற்குச் சட்டமும் சட்ட விரோதமும் கிடையாது. குற்றமற்ற குழந்தை அவைகளைப் பற்றி ஒன்றும் அறியாது. அத்தகைய நியதிகளுக்குக் குழந்தை உத்தரவாத முள்ளதல்ல. ஆதலால் சட்ட விரோதமான பிறப்பு என்று சொல்லுவதைப்போன்ற மூடத்தனம் பிறிதொன்றில்லை. மக்கள் பிறப்பிற்கும், விவாக சடங்குகளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. சடங்குகள் இல்லாவிட்டாலும் குழந்தைகள் பிறக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால் பாவத்தின் பெயரைச் சொல்லி யாரும் மக்களைப் பயமுறுத்த முயற்சிக்க வேண்டாம். இயற்கையின் உலகத்தில் பாவம் என்ற கிடையாது. இயற்கையின் சட்டங்களை யாரும் மாற்ற முடியாது. அச்சட்டங்களை மீறினால் தண்டனை கிடைக்குமென்பது நிச்சயம். ஆனால் பாவம் செய்தவர்களாகச் சொல்லப்படுகிறவர்களுக்கு அத்தகைய தண்டனை ஏற்படுவதை நாம் காண்கிறோமில்லை. கர்ப்பமும் நோயும் பாவத்தின் தண்டனைகள் என்று யாரேனும் கூறினால், நாம் அதை ஒப்புககொள்ளமாட்டோம். கர்ப்பம் இயற்கையின் கூறுநோய் என்பது சுகாதார ஒழுக்கத்தவறு. அவை தண்டனைகளாகமாட்டா.

நாம் விவாக ஒழுங்கு முறைகளை அழிக்க எண்ணவில்லை. நாம் விவாக ஸ்தாபனத்தை ஜன சமூகத்திலிருந்து எடுத்து விட்டால் நாம் மக்களின் மணவாழ்க்கை இன்பத்தை அழித்தவர்களாவோம் என்பதை நாம் மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்ளுகிறோம். அதனால் அரசியல் சிதறுண்டு போகும் என்பதையும் நாம் அறிகிறோம். அதனால் மானிடவர்க்கமே அழிந்து போம் என்பதையும் நாம் நம்புகிறோம். விவாகமே மக்களின் பலதிறப்பட்ட ஆக்கங்களுக்கெல்லாம் அடிப்படை என்பதை நாம் நன்கறிந்திருக்கிறோம்.

(முன்னேற்றம்)

பிரசங்கம்.

22—10—32 உ சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மேல் கோலார் தங்கவயல் மாரிகுப்பம் தென்னிந்தியா பௌத்த சங்க சபா மண்டபத்தில் ஷை சங்க வித்வானும், தமிழ்ப்பண்டிதரும், கௌதமா பள்ளி ஆசிரியருமான திரு. இ. நா. அய்யாகண்ணு புலவர் அவைத்தலைமையின் கீழ் ஷை தலைவரின் மாணவர் திரு. பி. தனபாலு, திரு. எம். இராமசாமியும், பிரசங்கமாரி பொழிந்தனர். தலைவர் முடிவுரையுடன் 8-30 மணிக்குக் கூட்டம் கலைந்ததென கௌரவ காரியதரிசி எழுதுகிறார்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாகத் தெரியவில்லை. இந்த இப்நாடிக் மயக்கத்தில் செய்யும் நடவடிக்கைகளுக்கு உசாவுதலே அல்லது தூண்டுதலே (Suggestion) போதுமான காரணமென தற்போது விஞ்ஞானிகளால் எண்ணப்படுகிறது இதனை சற்று விளக்குவோம்.

விழிப்பில் (Waking State) நாயை "வுஸ்" "வுஸ்" என்று உசாவிஞல் ஓடுகிறது. மனிதனை அடி என்றாலும், சுடு என்றாலும் இந்த உசப்பினுலேயே அடிக்கின்றான் சுடுகின்றான். இந்த நடத்தைகள் விழிப்பில் உசாவுதலால் காட்டும் நடத்தையாகும். அதுபோலவே, ஓர் வித தூக்கத்தில் அதாவது இப்நாடிக் தூக்கத்தில், அதாவது மயக்கத்தூக்கத்தில் (Trance) உசாவிஞல் அந்த தூக்கத்திலுள்ளவன் செய்யச் சொன்னதையும், சொல்லச் சொன்னதையும் ருசிக்கச்சொன்னதையும், செய்கின்றான். சொல்லுகின்றான், ருசிக்கின்றான். இந்த மயக்கத்தில் விழிப்புக்குறிய நடத்தைகள் இல்லாதபடியால் (Waking Behaviours) உசாவியசொல்லுக்குரிய Suggested Word நடத்தைகளை காட்டுகின்றான். சாதாரண விழிப்பில் சர்க்கரை என்றால் அதற்குறிய ருசியின் ஞாபகம் உண்டாகின்றது. அதுபோலவே இப்நாடிக் மயக்கத்தில் மண்ணை வாயில் போட்டு சர்க்கரை என்றாலும் சர்க்கரைக்குறிய ஞாபகம் உண்டாகின்றது. விழிப்பில் ஞாபகத்துக்கு வராத விஷயங்களும் இந்த மயக்கத்தில் ஞாபகத்துக்கு வருகிறது. மறந்து போன விஷயங்களும் இந்த இப்நாடிக் தூக்கத்தில் தோன்றுகின்றது. விழிப்பில் தோன்றி மறைந்த விஷயங்களும் இந்த தூக்கத்தில் தோன்றி மறைவதுண்டு. ஒரு சிறு பெண் குழந்தையாய் இருக்கும்போது, யாரோ ஒருவர் சமஸ்கிரத பாஷையோ, அராபிக்பாஷையோ லாடின், கிரீக்கோ, ஈபுருவோ, அவள் அருகாமையில் படித்து வந்தார். அவள் காதுமூலமாக கேட்டிருந்த சொற்கள் அவள் மனதில் அவளுக்குத்தெரியாமலே படிந்திருந்தது அவள் அனேக வருஷம் பிறகு இந்த மயக்கத்தில் அல்லது வலியில் (Hysteria) தான் இளமையில் கேட்ட பாஷையை உச்சரிக்க ஆரம்பித்தாள். இவள் ஆதி வாழ்வை அறியாதார் இது என்ன விந்தை என்று அதற்குத்தகுந்த கதைகளை கட்டுகின்றார்கள். அவள் முன் ஜன்மத்தில் படித்த பாஷையை பேசுகின்றாள், அல்லது பேய் பாஷையை உளருகிறாள், என்று கதைகளை கட்டுகின்றார்கள். விஷயங்களை உள்ளதை உள்ளபடி விசாரித்துணராமையால் பேய் கதையும், பிசாசு கதையும், மறுஜன்மக்கதையும் அவைகளுக்குப் பரிகாரமாக மந்திர தந்திரங்களும் எழுகின்றன.

காணுத பொருளைக் கண்டு பிடிக்கும் கதையிலும், விழிப்பில் ஞாபகத்திற்கு (Memory) வராத விஷயம் இப்நாடிசில் அதாவது மயக்கத்தில் ஞாபகத்திற்கு வரும் விஷயமே காரணம்.

இந்த இப்நாடிக் மயக்கம் பிறரால் உண்டாகும் அல்லது தானே வரவழைத்துக் கொள்ளலாம். இதை (Auto hypnosis) அதாவது தானே வரவழைத்துக்கொள்ளும் மயக்கமென்று கூறுவர். இவ்வித மயக்கத்தை Trance என்றும் கூறுவர். இந்த (Trance) மயக்கத்திலுள்ளவர்கள் தெரியாத விஷயங்களைத்தெரிந்து சொல்வதாகவும் செத்தவர்களுடன் பேசுவதாகவும் பிறர் நினைத்த விஷயங்களை தான் சொல்வதாகவும், கண்ணுக்கெட்டா தூரத்தில் நடக்கும் சம்பவங்களை தூரதிருஷ்டியால் (Distant Vission) பார்த்துச்சொல்வதாகவும் இதுபோன்ற அபூர்வக்கதைகள் பலவுண்டு. இவைகளை எல்லாம் விசாரிக்குமளவில் சில கேள்விச் சொல்லாகவும் (Hearsay) சில பொய்யாகவும் சில மிகப்படுத்திய விஷயமாகவும் (Exaggerated) மற்றும் சில சாதாரணமாக அறியக்கூடியதாகவும் ; ஏற்படுகின்றன.

இப்நாசிஸ் (Hypnosis) என்ற மயக்கத்தில் விழிப்பில் நடக்கும் நடத்தைகள் இல்லாமையால் சில, புலன்கள் நுட்பமாகவும், துரிதமாகவும், சுருசுருப்பாகவும், வேலை செய்கின்றன. மெதுவாக பேசிஞலும் கேட்கின்றன. சிற்சில சைகைகளையும் அறிகின்றன. இத்தியாதி நுட்ப துரித குணங்களை புலன்கள் இப்நுசிஸ் (Hypnosis) என்ற மயக்கத்திலும் டிரான்ஸ் (Trance) என்ற மயக்கத்திலும் அடைகின்றபடியால், சாதாரணமாய் விழிப்பில் நமது புலன்களுக்கு எட்டாத விஷயங்கள் இப்நாசிஸ் அடைந்த (Hypnotised Subjects) வர்களுக்கு எட்டுகின்றன. குறிசொல்கின்றவன் தானே இந்த மயக்கத்தை வரவழைத்துக்கொண்டு (Self hypnosis) கேள்வி கேட்போருடைய சைகைகளை நுட்பமாக அறிந்துகொண்டு தானே தன் மனதில் கண்டறிந்தவன் போல அந்த கேள்விகளுக்கு தகுந்த விடை அளிக்கின்றான். இந்த மயக்கத்தில்தான் (Medium) மீடியம் என்று வழங்கும் குறி சொல்வோர் ஜனங்களை மயக்குகின்றார்கள்.

இப்நாசிஸ் மயக்கத்தில் சில நோய்கள் தீருவதாகச் சொல்கின்றார்கள். இதற்குமுன் குறிப்பிட்ட (Dr. Moll) டாக்டர் மால் அதிகாரியாவர். சாதாரண தூக்கத்தில் ஆயாசம், இளைப்பு, தலைவலி, மயக்கம், போதை முதலிய கஷ்டங்கள் நீங்குவது போல் இப்நாசிஸ் தூக்கத்திலும், சிலநரம்புபற்றிய நோய்கள், தீரக்கூடும். இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. இந்த மயக்கத்தில் உசுப்பால் (Suggestion) சில நோய்கள் தீருகின்றன, ஒழுங்கு அறிவுள்ள சில நரம்புகள் உசுப்பால் ஒழுங்கடைகின்றன. ஒழுங்கடையவும் அந்த நோய் தீருகின்றது, இதனை அறியாமல் மந்திரத்தால் தீர்ந்ததாக பாமர மக்கள் நினைக்கின்றார்கள். இதோடு போகாமல் பூசாரியின் மோசத்திற்குட்பட்டு பூசையும், படையலும், போட்டு வீண் விரயம் செய்கின்றார்கள். பூசாரி செய்வதெல்லாம் உசுப்பே Suggestion இதனுல் சிலருக்கு சில நோய்கள் வாசியாகின்றன. மசூதிகளில் குழந்தைகாதில் ஊதுவதும், ஓர்வித உசுப்பே. இவ்வித உசுப்பால் சில நோய்கள் வாசியாவதால் அதாவது தீருவதால் இதனை அல்லா (Allah) வின் அருள் என்று நினைக்கின்றார்கள்! மாதா கோவில்களில் ஊதுவத்தி (Candles) கொளுத்துவதும், தண்ணீர் தெளிப்பதும் ஓர்வித உசுப்பென அறிதல் வேண்டும். இதனுல் சில நோய்கள் தீர்ந்தால், இயேசுவின் மகிமையால் தீர்ந்ததாக எண்ணுகின்றார்கள்! வாஸ்தவத்தில் ஒருவனுடைய நம்பிக்கையே அவனுக்கு உசுப்பாக நின்று வேலை செய்கிறது. இதனை (Auto Suggestion) என்று அழைப்பார்கள். தேள் கொட்டுக்கு வேப்பிலையைக்கொண்டு மந்திரிப்பதும் ஓர்வித உசுப்பே. [Suggestion] அதாவது உசுப்பால் சில நோய்கள் தீர்ந்த போதிலும் சாதாரணசிகிச்சைகளைக்கைவிடலாகாதென விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்கின்றதை மறக்கலாகாது.

இப்நாடிஸத்தோடு சம்பந்தப்பட்ட (Telepathy) டெலிபதி என்ற வித்தை வேறொன்றுண்டு. இதை (Telepathy) டெலிபதி என்னவெனில் ஒருவன் மனதில் தோன்றிய சொல்லையோ விஷயத்தையோ இன்னொருவன் மனம் மூலமாக அறிதல். இதற்கு திருஷ்டாந்தம் வேண்டுமானுல் நமது சாதாரண அனுபவத்தில் வரும் சில சம்பவங்களை டெலிபதியால் தெரிந்து கொள்கின்றதாக ஓர் சித்தாந்தம் கட்டியுள்ளார். சில வேளையில் நாம் நினைத்தவர் வருவதுண்டு. நாம் நினைப்பதைப்போல் நடப்பதுண்டு. நாம் பல தடவை நமக்கு வேண்டியவர்களை வரவேண்டுமென்றாகிலும், சந்திக்கவேண்டுமென்றாகிலும், கோருகின்றோம். அதே பிரகாரம் ஒரு வேளையில் நாம் கோரியவர்களை சந்திக்கின்றோம். இதை (Telepathy) டெலிபதி மூலமாக நேரிடுவதாக சிலர் எண்ணுகின்றார்கள். அதாவது நமது நினைப்பு அவர்களுடைய மனத்தில் ஏதோ வழியால் தூண்டப்பட்டு அவர்கள் புறப்படுவதாகவும் அதனுல் நாம் அவர்களை சந்திப்பதாகவும் சொல்லுகின்றார்கள். கம்பி இல்லாமல் தந்தி போவது போல் (Wireless Message) ஒரு மனத்தில் தோன்றிய சமாச்சாரம் மற்றொரு மனத்தில் தோன்றுகின்றதாக சிலர் உத்தேசிக்கின்றார்கள், ஆனால் ஒரு மனத்தில் தோன்றிய விஷயம் மற்றோர் மனத்தில் தோன்றுகின்றதா என்பதைத்தான் பரீட்சிக்கவேண்டும் இதை பரீட்சித்தவரை (Telepathy) டெலிபதி ருசுவடைந்ததாக படவில்லை, இவ்வித பரீட்சையில் தவறுதல் அதிகமாகக்காணப்படுகின்றன. சில இடங்களில் சில மெஞ்ஞானிகளாகிய (Crookes Oliver Lodge) முதலியோர் ஏமாந்து போனதாகத்தெரியவருகிறது. கும்பகோணத்தை அடுத்த வலங்கிமானில் ஒரு Telepathy நாம் எண்ணியதை தெரிவிக்கிறாராம். அதனை நமது நண்பர்கள் விசாரித்தல் அவசியமாகும். இதன் விஷயமாக கற்றறிந்த மெஞ்ஞானியாகிய (Dr Moll) டெலிபதி என்னும் வித்தை மெஞ்ஞான முறைப்படி கடுமையாக பரீட்சிக்கப்படவில்லை என்றும் அவ்விதமாக பரீட்சை செய்தவரை சாதாரண காரணங்களால் ஒருவர் மனத்தில் தோன்றியதை இன்னொருவர் தெரிவித்திருக்கலாமென்றும், பன்முறை தனது நூலில் காட்டுகின்றார். முக்கியமாக அகத்தினழகு முகத்தில் தோன்றும் என்ற பழமொழிக்கிணங்க ஒருவருடைய எண்ணத்தை எண்ணிக்கொண்டிருந்தால் நமக்குத்தெரியாமலே அது நமது வாயால் சொல்ல நேரிடுகிறது. இதனை தந்திரசாலிகண்டுகொண்டு தன் மனத்தில் தோன்றியதுபோல் சொல்லுகின்றான், இத்தியாதி மோசங்களால் ஜோதிடம் சொல்லுகின்றவர்கள் சீவிக்கின்றார்கள்.

பலதடவை ஒருவிஷயத்தைப் பற்றி நினைத்தால் ஒரு தடவையாகிலும் அதே மாதிரி நடக்கலாம். அந்த சம்பவத்தை மாத்திரம் நாம் கவனிக்கின்றோமேயொழிய பலதடவை நினைத்தும் அதன்படி நடவாத சந்தர்ப்பங்களை கவனிப்பதில்லை. நமது பந்துமித்திர உறவினர்களைப்பற்றி நினைக்காதநாள் இல்லை. ஏதோஒருநாள் நினைத்தமாதிரி அவர்களுக்கு நேரிட்டாலும் நேரிடலாம். அதனைக்கொண்டே நாம் நினைத்தபடி நேரிட்டது. ஆதலால் அவர்கள் மனத்தில் அந்த சமயத்தில் நினைத்தது நமது மனத்தில் தாக்கியது என்று சித்தாந்தப்படுத்துவது மெஞ்ஞான சித்தாந்தமாகாது. ஏகதேச சம்பவத்தைக் கொண்டு அதன் காரணத்தை சித்தாந்தப்படுத்துவது பாமர மக்களுக்கடுக்குமேயொழிய மெஞ்ஞானிகளுக்கு ஒவ்வாது. நமது எண்ணம் போல் நடவாத சமயங்களை நாம் கணக்கெடுப்பதில்லை. ஏகதேச சம்பவத்தை மாத்திரம் கவனிக்கின்றோம். இந்த மனப்பான்மையால் எந்த மூடநம்பிக்கையையும் நம்புகின்றோம். இதுதான் மூடநம்பிக்கைகளிலுள்ள முக்கிய காரணம். இந்த மனப்பான்மையுள்ளவரை உலகம் மூடநம்பிக்கையில் ஆழ்ந்து கிடக்குமென்பதற்குத் தடையில்லை.

இனி (Clairvoyance) முதலிய மூடநம்பிக்கைகளை விசாரிப்பாம்.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
5.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
6.	சுயமரியாதை தத்துவ கீதங்கள் ...	0—4—0
7.	சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0
8.	மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ...	2—0—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

3 ரூபாய்க்கு 3 கடியாரங்களும் 90 சாமான்களும் இனும்.



வாசனையிற் சிறந்தது ஓட்டோ மோட்டியாவே. இது புஷ்பங்களின் சத்து. ஒரே தடவையில் 3 ரூபாய்க்கு 6 பாட்டில்கள் வாங்குவோருக்கு, கோல்ட் கில்ட் டம்மிரிஸ்ட் வாட்ச் ஒன்றும், 5 வருஷ உத்திரவாதமுள்ள ஜெர்மன் 'பி' டைம்பீஸ் 1-ம், ரயில்வே டைம் டம்மிபாக்கட் வாட்ச் 1-ம், பவுண்டன் பேனு 1-ம், இன்னும் 90 சாமான்களும் இனுமாய் கொடுக்கப்படும். இனும் சாமான்கள் சேர்த்து விலை ரூ. 3. பாக்கிங் தபால் செலவு வேறு.

General Trading Agency
15/1 Joymitter St., Hatkhola P. O., Calcutta.

கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.

"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்கவழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

ஹிமகிரி தைலம்.

ஸ்நானத்திற்கு ஏற்றது.

உடம்பையும், கண்களையும், மூளையையும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் குளிர்ச்சி செய்கிறது. சுறுசுறுப்பை உண்டாக்குகிறது. தலைவலிக்கு சிறந்த மருந்து அபிப்பிராயம்:- ஆர். எஸ், முட்டண்ணு பி. இ. எலக்டிரிக்பவர் ஹவுஸ் உதகமண்டலம். கடந்த ஆறுமாத காலமாக தங்கள் தைலத்தை நான் உபயோகிக்கிறேன் எல்லாத்தைலங்களைவிட தங்கள் தைலம் சிறந்து விளங்குவதோடு குளிர்ச்சியையும் உற்சாகத்தையும் தரத்தக்கதாயிருக்கிறது. உள்நாட்டு மூலிகைகளைக் கொண்டு செய்யப்பட்ட விலை சகாயமான தைலம் இதுவே. நல்ல பலந்தரக் கூடியதாயிருக்கிறது. பொது ஜனங்களுக்கு இதை சிபார்சு செய்கிறேன்.

விலை 1—0—0, 0—8—0.

ரத்னமிஸ்ரி ஹல்வா.

மூளையையும், உடலையும், பலப்படுத்துவது.

பலவீனம், ஜீரணக்குறைவு, சோம்பல், இந்திரிய ஸ்கலிதம் முதலியவற்றை நீக்கவல்லது. தாதுவிர்த்திக்கேற்றது. விலை 2—8—0, 1—4—0.
நற்சாட்சி பத்திரங்களும், தங்கமெடல்களும் பரிசுபெற்றது.

கிடைக்குமிடம்:—
எம். பெருமாள் நாயடு,
மளிகை ஈரோடு,
மெடிகல் எம்போரியம், ஈரோடு.

சோல் ஏஜண்ட்,
அனந்தகிருஷ்ண பிளவர் மில்ஸ்,
பெங்களூர்சிட்டி.

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரிகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.
இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.
இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0,

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.
இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமய்யாவும், என்' எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.